தர்மசக்கரம்









நள ௵ தை மீ சக்கரம் 26 ஆரம் 1

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639.115 திருச்சி ஜில்லா

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 16—1—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு 90 பைசாவும், மாலை சிற்றுண்டிக்கு 60 பைசாவும் செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சிவகாசியில் 21—1—77 வெள்ளிக்கிழமை

இடம்: சாத்தூர் ரோட்டிலுள்ள அன்னை சாரதாமணி பாலவாடி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—திருவாதவூரில் 22—1—77 சனிக்கிழமை

இடம்: திருவாதவூர் அருள்மிகு திருமறைநாத சுவாமி கோயில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

உணவு வசதி: நேரில் ரூ. 1-00 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

சேலத்தில் 23—1—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ஸாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் ரூ. 1-00 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

விருதுநகரில் 23—1—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரிய காளியம்மன் தெருவிலுள்ள காளியம்மன் கோவில்

நேரம்: காலை 9-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 23—1—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சச்சிதானந்தசபை, சிவன்கோவில் தெரு

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி பரானந்தர்

திருநெல்வேலி ஜில்லா சேரன்மஹாதேவியில் 30—1—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பாரத்வாஜ ஆச்ரமம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரூ. 1-00ம், மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

இராஜபாளையத்தில் 30—1—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சஞ்சீவிமலை குமாரசுவாமி கோவில்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 5-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

உணவு வசதி: நேரில் ரூ. 1-50 செலுத்தி சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

15.1.77

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 26	நள ஷு தை மீ	ஆரம் 1

83-2

பொருளடக்கம் பக்கம்

சந்தா விவரம்

1. ஆண்டு சந்தா ரூ. 10

ரூ. 10 செலுத்தியது முதல் அல்லது அடுத்த மாதம் முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும்படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

2. சகாய சந்தா ரூ. 5

தர்ம சக்கரம் அடக்க விலைக்கு வெளியிடப்படுகிறது. ஆண்டு சந்தா ரூபாய் பத்து செலுத்த இயலாதவர்கள் ரூபாய் ஐந்து மட்டும் அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவி நிதி' யினின்று ஈடு செய்துகொள்கிறோம். தெய்வீக விஷயமாதலால் ரூபாய் பத்து செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

3. டிபாஸிட் சந்தா ரூ. 100

ரூ. 100 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும் வரையில் மாதந்தோறும் தர்ம சக்கர பத்திரிகை தங்களுக்கு வந்துகொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்தி புதுப்பிக்க வேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும் பொழுது டிபாஸிட் செய்த ரூபாய் நூறையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

உள்நாடு தனி இதழ் ரூ. 1-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 20-00

அந்தர்யோக விவரங்கள்

(அட்டை இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

மதுரை ஜில்லா—தேனியில் 2—2—77 புதன்கிழமை

இடம்: ஸ்ரீ கணேச கந்தப்பெருமாள் ஆலயம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

உணவு வசதி: நேரில் பகல் உணவிற்கு ரு. 1-00 செலுத்தி சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

கரூரில் 6—2—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சன்னதித் தெருவிலுள்ளபாலர் களிக்கூடம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 6-00 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

சேலம் ஜில்லா—வனவாசியில் 11—2—77 வெள்ளிக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண-விவேகானந்த தவ இல்லம்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

தூத்துக்குடியில் 13—2—77 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கிரேட்காட்டன் ரோடு காரப்பேட்டை நாடார் எலிமெண்டரி ஸ்கூல்

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும் தாய்மார்களும் அந்தர் யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 26	நள ௵ தை ௴	ஆரம் 1

பிரார்த்தனை

अजात इत्येवं कश्चिद्भीरुः प्रपद्यते ।
रुद्र यत् ते दक्षिणं मुखं तेन मां पाहि नित्यम् ॥

— श्वेताश्वतरोपनिषत्

அஜாத இத்யேவம் கஸ்சித்பீரு: ப்ரபத்யதே
ருத்ர யத் தே தக்ஷிணம் முகம் தேன மாம் பாஹி நித்யம்

— ஸ்வேதாஸ்வதரோபநிஷத்

பிறவியைப்பற்றிப் பயந்து போனவன் பிறவாத ஒன்றை அடைக்கலம் புகுகிறான். ஓ ருத்ரா! உன்னுடைய கருணாகர முகங்கொண்டு யாண்டும் என்னைக் காப்பாற்றுவாயாக.

பாவிபடுங் கண்கலக்கம் பார்த்து மிரங்காதிருந்தால்
ஆவிக் குறுதுணையா ரையா பராபரமே.

— தாயுமானவர்

அருள் விருந்து

உனது நிரந்தர இருப்பிடம் பிரம்மம்.

உண்மை உள்ளத்தை ஓர்மைப்படுத்துகிறது.

சான்றோனுடைய சாந்தியைக் கலைக்க யாருக்குமே இயலாது.

மனத்தினின்று மாசு நீங்குதற்கு ஏற்ப ஆனந்தம் ஓங்குகிறது.

தன் செயலைத் தெய்வத்தின் செயலென உணர்பவன் பக்தன்.

சுயநலம் ஒழிதற்கு ஏற்ப தெய்வ சான்னித்தியம் உள்ளத்தினுள் ஓங்குகிறது.

மனதைப் பக்குவப்படுத்துதலிலேயே கண்ணுங் கருத்துமாயிருப்பவன் சான்றோன் ஆகின்றான்.

உள்ளத்தினுள் அருள் வெள்ளம் ஊற்றெடுத்துப் பாயும்போது தெய்விகப் பண்புகள் யாவும் தாமாக வளர்கின்றன.

விவேகி ஒருவனுக்கு ஸன்மார்க்கம் எது என்பது நன்கு விளங்குகிறது. ஸன்மார்க்கத்திலேயே அவன் சென்றுகொண்டிருக்கிறான்.

தாயின் சிறப்பு அவளுடைய சேயின் மேன்மையில் மிளிர்கிறது. மனிதனுடைய சிறப்பு அவன் அனுஷ்டிக்கும் தர்மத்தினின்று வெளியாகிறது.

உடலில் படிந்துள்ள அழுக்கைவிடக் கொடியது உள்ளத்தில் புகுந்துள்ள தீமைகள். மனத்தூய்மையில்லாதவரைத் தீண்டத்தகாதவரென ஒதுக்கி வை.

அருள்போதம் உச்சநிலை யெய்தியுள்ள ஒருவன் உள்ளத்தினின்று உலக வியவகாரங்களெல்லாம் ஒழிந்துபோகின்றன. ஆத்ம சொரூபம் ஒன்றே அவ்வடிவத்தில் இலங்குகிறது.

தன்னைத் தூயவனாக வைத்துக்கொள்ள மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். பிறகு தன்னைப்பற்றிக் கிளம்புகிற வதந்திகளையெல்லாம் அவன் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்கட்டும்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவருக்கும் பக்தர்களுக்குமிடையில் சத்சம்பாஷணை தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பரமஹம்சதேவர் பகர்கிறார். "சிவலிங்கத்தின் அடிப்படைத் தத்துவம் இன்னது என்று உங்களுக்குத் தெரியுமா? இறைவன் தாமே தந்தையாகவும் தாயாகவும் அமைந்துள்ளான் என்னும் கோட்பாட்டை அது விளக்குகிறது. அந்தச் சின்னத்தின் மேற்பகுதியை லிங்கம் என்றும், அடிப்பகுதியை ஆவுடையார் என்றும் இயம்புகிறோம். புருஷ தத்துவம், பிரகிருதி தத்துவம் ஆகிய இரண்டின் இணக்கத்தால் பிரபஞ்சம் எங்குமுள்ள க்ஷரம், அக்ஷரம், சேதனம், அசேதனம் ஆகியவைகள் தோற்றத்துக்கு வந்திருக்கின்றன. ஜீவாத்மன் ஒருவனிடம் புருஷ தத்துவம் பிரகிருதிதத்துவம் ஆகிய இரண்டும் சேர்ந்தே அமைந்திருக்கின்றன. உயிராய் இருப்பது புருஷதத்துவம். உடலாய் இருப்பது பிரகிருதி தத்துவம். இவையிரண்டின் கூட்டுறவாலேயே பிறவிப் பெருங்கடலில் ஜீவாத்மன் கீழ் நிலையினின்று மேல் நிலைக்கு முன்னேற்றமடைந்து வருகிறான். சிவலிங்கத்தை அணுகிப் பிரார்த்தனை பண்ணுகின்ற மானுடன் ஒருவன், 'இறைவா, நான் மீண்டும் இப்பிறவிப் பெருங்கடலில் பிறப்பெடுக்காதிருக்கும்படி நீ அனுக்கிரஹம் செய்வாயாக. தாயிடம் கர்ப்பவாசத்துக்கு நான் மீண்டும் வாராதிருக்கும்படி நீ அருள்புரிவாயாக.' இங்ஙனம் பிறவிப்பெருங்கடலைத் தாண்டிப் போவதற்கான பிரார்த்தனையையே பக்தனொருவன் சிவனிடம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறான்.

தேவேந்திரநாத் தாகூருடைய குடும்பம் அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தது. அக்குடும்பத்தைச் சார்ந்த சிறுவர்கள் சிலரை அழைத்துக்கொண்டு அவர்களுக்குப் பாடம் புகட்டிவந்த ஆசிரியர் இப்பொழுது பரமஹம்சதேவர் அறையினுள்ளே பிரவேசித்தார். தம் சம்பாஷணையை நிறுத்தாது பரமஹம்சதேவர் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தார்.

பரமஹம்சதேவர் (பக்தர்களைப் பார்த்து): "ஸ்ரீ கிருஷ்ணன் தன்னுடைய சூடாமணியில் மயில்பீலி ஒன்றைப் பொருத்தி வைத்திருக்கிறான். அந்த மயில்பீலியில் பொருள் ஒன்று அடங்கியிருக்கிறது. பெண்பாலுக்குச் சின்னமாயிருப்பது மயில்பீலி. ஸ்ரீ கிருஷ்ணன் புருஷ தத்துவம். புருஷதத்துவமாகிய அவன் பிரகிருதி தத்துவத்தைத் தன் தலையில் தாங்கியிருக்கிறான் என்பது இதன் கோட்பாடு. கோபிமார்கள் ஒன்று கூடி வட்டமிட்டுக் கும்மி அடித்தனர். அவர்களோடு கிருஷ்ணனும் கலந்துகொண்டான். அவ்வேளையில் அவன் ஒரு பெண்பாலாகத் தென்பட்டான். கோபியர்களுடைய கூட்டத்திலிருக்கிறபொழுது அவனும் பெண்பாலர்களுக்குரிய ஆடையை அணிந்து கொள்கிறான். ஆண்பாலன் ஒருவன் பெண்பாலின் பாங்கைத் தன்னிடத்து வரவழைத்துக் கொள்ளாவிட்டால் பெண்பாலர்களோடு இணங்கியிருக்க அவன் தகுதியற்றவன் என்பதும் கோட்பாடு. கிருஷ்ணன் தானே பெண்பாலாக மாறியமைந்து பெண்பாலர்களுடைய கூட்டுறவை ரசிக்கலாயினன். இது மிக மேலான கோட்பாடு. மானுடன் ஒருவனிடத்து உடல் உணர்ச்சியும் ஆண்பால், பெண்பால் என்கின்ற வேற்றுமையும் இருக்கிறபொழுது அவன் மிக எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டும். பால் வேற்றுமை மனதில் இருக்கிற பொழுது பெண்பாலர்களிடமிருந்து விலகியிருப்பது ஆத்ம சாதகனுடைய கடமையாகிறது. பெண்பால் ஒருத்தி ஆத்ம சாதனங்களிலேயே ஆழ்ந்து ஈடுபட்டிருப்பவளானாலும் சரி அவளிடத்திருந்து எட்ட விலகியிருக்கவே ஆத்ம சாதகன் கடமைப்பட்டிருக்கிறான். இது எதற்கு நிகர் என்று தெரியுமா? வீட்டுக் கூரையின் மீது ஏறுபவன் ஒருவன் தன்னுடைய உடலை இப்பக்கமோ அப்பக்கமோ சாய்க்கலாகாது. அப்படிச் சாய்த்தால் அவன் கீழே விழநேரிடும். படிக்கட்டு ஒன்றின் மேலேறிப் போகிற மானுடன் ஒருவன் வலிவற்றவனாக இருப்பானாகில் அவன் கைப்பிடிச் சுவரை ஆதரவாகப் பற்றிக்கொள்ளவேண்டும்.

அங்ஙனமே சாதனத்தில் இன்னும் ஆரம்ப தசையிலிருப்பவன் அதற்கேற்ற பாதுகாப்புக் களை அமைத்துக் கொள்ளுவது அவசியமா கிறது.

"பரிபூர்ண நிலையை எட்டியவனுடைய நிலை முற்றிலும் வேறுபட்டதாகும். ஈசுவரானு பூதியை அடையப்பெற்றான பிறகு மனிதனுக்கு அஞ்சுதற்கு ஒன்றுமில்லை. பற்றுக்கோடு ஒன்றைப் பற்றிப்பிடித்தவனாக அவன் இருக் கிறான். வீட்டுக் கூரையின்மீது மானுடன் ஒருவன் எப்படியாவது ஏறியாகவேண்டும். அதே விதத்தில் ஆத்ம சாதகனொருவன் ஏதே னும் ஒரு முறையைக் கையாண்டு ஈசுவரானு பூதியைப் பெறுதல் வேண்டும். படிகளின் மீது மேலே ஏறிப்போய்க்கொண்டிருக்கிறபொழுது மானுடனொருவன் ஆடல் எதிலும் ஈடுபட முடியாது. மாடியை எட்டிய பிறகு வேண்டு மானால் அவன் ஆடலாம். மற்று ஒரு விஷ யத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண் டும். மாடிக்கு ஏறிக்கொண்டிருந்தபொழுது மானுடன் ஒருவன் தான் இருக்கவேண்டிய இடம் இது அன்று, இது அன்று என்று படி களை ஒன்றன் பின் ஒன்றாகப் புறக்கணித்தான். மாடியை எட்டிய பிறகு புறக்கணித்தல் என் னும் செயலில் அவன் ஈடுபடவேண்டிய அவ சியமில்லை. மாடியானது எத்தகைய செங்கல், சுண்ணாம்பு ஆகியவைகளால் அமைக்கப்பெற் றிருக்கிறதோ அத்தகைய செங்கல் சுண்ணாம் பினாலேயே படிக்கட்டும் அமைக்கப் பெற்றிருக் கிறது என்பதை உணருகிறான். ஆத்ம சாத னத்தின் ஆரம்ப தசையிலிருக்கிற ஒருவன் பெண்பாலரோடு இணக்கம் வைக்கும் விஷ யத்தில் மிக எச்சரிக்கையாக இருக்கவேண் டும். ஆனால் ஈசுவரானுபூதியை அடையப் பெற்றான பிறகு பெண்பாலர் எல்லாரும் அன்னை பராசக்தியின் சொரூபமாகத் தென் படுவார்கள். அப்பொழுது அச்சம்கொள்ளு வதற்குப் பதிலாகப் பெண்பாலரைப் பராசக்தி யின் சொரூபமாகக் கண்டு வணங்குவார்கள். அத்தகைய அனுபூதியைப்பெறுவது மானுடப் பிறவியின் குறிக்கோள் என்பதை மறந்து விடலாகாது.

"கண்ணாம்பூச்சி விளையாட்டில் 'பாட்டி யைத் தொட்டபிறகு பயப்படுவதற்கு ஒன்று மில்லை'. பாட்டியைத் தொடுதலில் வெற்றி யடைந்துள்ள சிறுவன் அல்லது சிறுமிக்குத் தடையேதுமில்லை. சுதந்திரத்தோடு எதை வேண்டுமானாலும் செய்யலாம். அதற்கு நிகரா னது ஈசுவரானுபூதி. அனுபூதியை அடைதற்கு முன்பு ஆத்ம சாதகன் நியமனங்களையெல்லாம் ஒழுங்காக அனுஷ்டிக்கவேண்டும். சாதனத் தில் அவனுக்குத் தளர்ச்சி உண்டாகலாகாது. கொண்டுள்ள இலட்சியத்திலேயே அவன் அல் லும் பகலும் கருத்துடையவனாக இருக்கவேண் டும். அருளுக்குப் பாத்திரமான பிறகு பாட்டி யைத் தொட்டுள்ள பாலகர்கள் சுதந்திரம் அனு பவிப்பது போன்று ஈசனை அடையப் பெற்ற சாதகன் உலக நியமனங்களிலிருந்து முக்தி பெற்றவன் ஆகிறான்.

"புறவுலகைக் காணும் பாங்குடைய மனிதனுக்கு இந்திரியங்கள் அமைந்திருக்கின் றன. ஸ்தூல உலகமே அப்பொழுது அவனது காட்சிக்கு எட்டுகிறது. அந்த நிலையிலிருக்கிற மனிதன் அன்னமய கோசத்தில் வாழ்ந்திருக் கிறான். பஞ்ச பூதங்களாலாகிய ஸ்தூல சரீரம் அன்னமய கோசம் என இயம்பப் பெறுகிறது. ஸ்தூல சரீரத்தை ஒதுக்கி விட்டு மானுடன் சூட்சும சரீரத்தில் கருத்தைச் செலுத்த வேண்டும். அப்படிச் செய்யுங்கால் அவனு டைய அறிவுக்கு எட்டுபவைகள் பிராணமய கோசம், மனோமயகோசம், விக்ஞானமயகோசம் என்னும் பெயர்கள் பெறுகின்றன. இந்த சூட்சும சரீரத்துக்கு உள்ளிருப்பது காரண சரீரம். காரண சரீரத்தில் நிலைத்திருக்கிற ஆத்ம சாதகன் இன்பம் பெறுகிறான். ஆதலால் அந்தச் சரீரம் ஆனந்தமய கோசம் என இயம்பப் பெறுகிறது. கிருஷ்ண சைதன்யர் பெரும்பாலும் ஆனந்தமய கோசத்திலேயே திளைத்திருந்தார். இதற்கும் மேலாக மகா காரணம் என்னும் பெருநிலை ஒன்று உண்டு. அந்த மகாகாரணத்தில் மனது லயம் ஆதல் வேண்டும். சித்த விருத்திகள் அப்பொழுது ஒழிந்துபட்டுப் போகின்றன. சங்கல்பம், விகல்பம் என்னும் கூறுகள் அப்பொழுது மனதுக்கில்லை. மகாகாரணத்தில் மனது ஒடுங்குகிறது. அந்நிலையில் உண்டாகிற அனு பவத்தை வாக்கால் விளக்க யாருக்குமே இயலாது. ஆத்மா தன்னில் தானாய் திளைத்

திருக்கிறது. இப்பெருநிலை கிருஷ்ண சைதன்யருக்கு அடிக்கடி வாய்ப்பதாயிற்று. இந்த நிலை எதற்கு நிகரானது என்பதை நீங்கள் அறிகிறீர்களா? தயானந்தர் தம்போக்கில் இதை விளக்கினர். வீட்டின் உட்புறத்துக்கு வாருங்கள், கதவைத் தாழிடுங்கள், பின்பு வேற்றூர் யாருமே அவ்வீட்டினுள் நுழைய முடியாது. தமிழ்ப் பெருமகனர் ஒருவர் இந்நிலையை 'ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத் தூங்காமல் தூங்கி சுகம் பெறுவதெக்காலம்' என இயம்பினர்.

"சாதனத்தின்ஆரம்பதசையிலிருந்தபொழுது தீபத்தின் ஒளிப்பிழம்பை நான் தியானித்ததுண்டு. ஒளிப்பிழம்பின் சிவப்பான வெளிப்பகுதி ஸ்தூல சரீரத்துக்கு ஒப்பானது. அதனுள்ளிருக்கும் வெள்ளைப்பகுதி சூட்சும சரீரத்துக்கு ஒப்பானது. அதற்குள்ளிருக்கும் நீலப்பகுதி காரண சரீரத்துக்கு ஒப்பானது.

"உனக்குத் தியானம் முற்றிலும் கைகூடுமானல் அதன் அறிகுறிகள் சில இருக்கின்றன. நீ ஆழ்ந்து தியானத்தில் அமர்ந்திருக்கிறபொழுது உன்னை ஒரு ஜடவஸ்து என்று கருதிப் பறவை ஒன்று உன் தலையின்மீது வந்து உட்காரும். அது உட்காருவது உனக்குத் தெரியாது.

"கேசவசந்திரசேனரை நான் முதன் முதலில் சந்தித்தது பிரம்ம சமாஜத்தில். சமாஜத்தின் அங்கத்தினர்கள் பலபேர் மேடையின் மீது அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு மத்தியில் கேசவர் அமர்ந்திருந்தார். ஒரு மரக்கட்டை போன்று அவர் அசையாதிருந்ததை நான் கண்டேன். அப்பொழுது கேசவரைச் சுட்டிக் காட்டி மதுரநாத்விசுவாசரிடம் நான் இங்ஙனம் பகர்ந்தேன்: 'அதோ அங்கே பார்! அந்த இரையை மீன் ஒன்று கொத்தி விழுங்கியுள்ளது.' தியானப் பயிற்சி கேசவசந்திரசேனரிடம் ஏராளமாக இருந்தது. ஆதலால் அவர் விரும்பியவைகளை யெல்லாம் தமது வாழ்நாளிலே நிறைவேற்றுபவர் ஆனர். பேர், புகழ் முதலியவைகளை அவர் நாடினர். ஈசுவர கிருபையால் அவர் நாடியவைகளெல்லாம் அவருக்கு வாய்ப்பனவாயின.

"தியானம் பயிலுகிறவர்கள் பொதுவாகக் கண் மூடியிருந்து தியானத்தில் அமருகின்றனர். வேண்டுமானல் ஒரு சிலர் கண்விழித்து இருந்து கொண்டே தியானம் பயிலலாம். மற்றவர்களோடு உரையாடிக் கொண்டிருப்பதற்கிடையிலும் தியானப் பயிற்சியில் ஈடுபடலாம். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். மானுடன் ஒருவனுக்குப் பல்வலி வந்துள்ளது. மற்றவர்களோடு பேசிக்கொண்டிருப்பதற்கிடையிலும் அப்பல்வலியைப் பற்றி அவன் எண்ணிக்கொண்டிருக்கிறன். அதே விதத்தில் மனதில் ஒருபகுதி மற்றவர்களோடு உரையாடுதலில் ஈடுபடுகிறது; மற்றொருபகுதி அதே வேளையில் பகவத் சிந்தனையிலும் கருத்தைச் செலுத்திவரலாம்."

தாகூர் குடும்பத்து இளைஞர்களோடு வந்திருந்த ஆசிரியர்: "ஆம் ஐயனே, தாம் பகர்வது முற்றிலும் சரி. இது விஷயத்தை நான் நன்கு அறிந்திருக்கிறேன்." (எல்லாரும் நகைக்கின்றனர்.)

பரமஹம்சதேவர் (புன்னகை பூத்தவராக): "ஆம் பல்வலிக்கிடையில் ஒருவன் தன்னுடைய கடமைகளையும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறன். ஆனல் அவனுடைய மனது வலியைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறது. அதே பாங்கில் சாதகன் ஒருவன் கண் விழித்திருந்து தியானம் பண்ணலாம். மற்றவர்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் தியானம் பண்ணலாம்."

ஆசிரியர்: "ஈசனுக்கு அமைந்துள்ள அடைமொழிகள் பலவற்றுள் 'பதிதபாவனன்' என்பது ஒன்று. நாம் உய்வு அடைவதற்கு அக்கூற்று ஒன்றே நமக்கு நம்பிக்கையூட்டுகிறது. கருணகரனகக் கடவுள் இருக்கிறர்."

பரமஹம்சதேவர்: "கடவுளைக் கருணகரன் என்று சீக்கியர்கள்கூடச் சொன்னர்கள். 'அவர் எப்படிக் கருணகரன் ஆகிறர்?' என்று நான் அவர்களைக் கேட்டேன். அதற்கு அவர்கள் 'ஏன் அவர் எங்களைப் படைத்திருக்கிறர்? எங்களுக்காகவென்று பலப்பல பொருள்களையும் அவர் படைத்திருக்கிறர். ஆண்மை வாய்ந்தவர்களாக அவர் எங்களை வளர்த்திருக்கிறர். ஒவ்வொரு படித்தரத்திலும் ஆபத்தினின்று அவர் எங்களைக் காத்து வருகின்றர் என்பதை நாங்கள் உணர்ந்து வருகின்றேம்' என்று அவர்கள் இயம்பினர்கள்".

பராபரக் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

299. சாதனையெல்லாம் அவிழத்
தற்போதங் காட்டாதோர்
போதனை நீ நல்குவ
தெப்போதோ பராபரமே.

அவிழுதல்—நின்றுவிடல்; தற்போதம்—ஜீவ போதம்; போதனை—ஆத்மானுபவம்; நல்கு வது—கொடுத்துதவுவது.

ஜீவாத்மனுக்குத் தான் ஒரு ஜீவ வியக்தி என்னும் உணர்வு இருக்கும் பரியந்தம் அவன் செயலற்று இருக்க முடியாது. தன்னிடத்து ஏதோ ஒரு குறைநிலை இருப்பதாக உணர் பவன் ஜீவாத்மன். அக்குறை நிலையை நிறை நிலையாக்க அவன் முயற்சி எடுத்துக்கொள் கிறான். இத்தகைய முயற்சி ஜீவகோடிகள் அனைத்திடத்தும் உண்டு. அந்த முயற்சிகள் பலகோடிப் பிறவிகளில் திருந்தியமைகிறது. கடைசியாகப் பரம்பொருளை யடைவதற்குரிய முயற்சியாக அது மேலோங்குகிறது. அத்த கைய முயற்சியே ஆத்ம சாதனம் எனப் பெயர் பெறுகிறது. ஆத்ம சாதனத்தில் ஜீவாத்மன் முன்னேற்றமடைவதற்கேற்ப ஜீவ போதம் குறைகிறது; பரபோதம் அதிகரிக் கிறது. அது முற்றிலும் பரபோதமாக மேலோங்குமிடத்துச் சாதனங்கள் யாவும் தாமாக நின்று விடுகின்றன. எந்த ஜீவாத்ம னுக்குத் தன்னுடைய முயற்சியோடு இறை வனுடைய அருளும் துணைபுரிகிறதோ அவனுக் குப் பரபோதம் உச்சநிலையை எட்டுகிறது. இறைவா, அத்தகைய நல்ல நாள் எனக்கு எப்பொழுது வந்து வாய்க்கும் என்பது இக் கண்ணியின் கருத்து.

300. ஒன்றுமறியா விருளாம்
உள்ளம் படைத்த எனக்
கென்று கதிவருவ
தெந்தாய் பராபரமே.

கதி—பரத்தை அடைகின்ற பெரியபேறு;

ஜீவாத்மனுக்கு ஜீவபோதம் நிலைத்திருக்கும் காலமெல்லாம் அவனுடைய உள்ளம் இருள் சூழ்ந்ததாக இருக்கிறது. கண்மூடி தியானம் பண்ண முயலுகின்றபொழுது உள்ளிருப்ப தெல்லாம் காரிருள் என்பது சொல்லாமலே விளங்குகிறது. அக்காரிருளே அக்ஞான இருள் எனவும் இயம்பப்பெறுகிறது. கார் இருளில் இருக்கிற மனிதன் ஒருவனுக்குத் தன் உடலையே காணமுடியாது. உடலில் அழுக்குப் படிந்திருக்கிறதா அல்லது சுத்தமாயிருக்கிறதா என்னும் கேள்விக்கு இருளில் இருக்கிற பொழுது விடை சொல்ல முடியாது. வெளிச் சத்திற்கு வந்த பிறகே உடலில் அழுக்குப் படிந்திருக்கிறது என்றோ அது சுத்தமாக இருக்கிறது என்றோ இயம்ப முடியும். புறத் தில் இருக்கிற கார் இருள் ஊனக்கண்ணைச் செயலற்றதாக்குகிறது. அகத்தில் இருக்கிற அக்ஞான இருள் ஞானக்கண்ணைச் செயலற்ற தாக்குகிறது. சாதகன் ஒருவன் சாதனத்தில் முன்னேற்றம் அடைவதற்கு ஏற்ப அந்தக் கரணசுத்தியடைகிறான். அதற்கேற்றபடி ஞானக்கண் உருவெடுக்கிறது. அந்தக்கரணம் முற்றிலும் சுத்தியடைந்தான பிறகு ஜீவாத்மன் தனக்கும் தன் தலைவனுக்கும் உள்ள இணக் கத்தை உள்ளபடி அறிகிறான். அத்தகைய அறிவே கதி என ஈண்டு இயம்பப்பெறுகிறது. இறைவா, என் உள்ளத்தில் சூழ்ந்துள்ள அக் ஞான இருள் அதிவிரைவில் அகலவேண்டும். ஞான ஒளி ஓங்கவேண்டும். அத்தகைய பெரு நிலையை எனக்குக் கொடுத்தருள்வாயாக என் பது இக்கண்ணியின் கருத்து.

301. சிந்திக்குந்தோறும் என்னுட்
சிற்சுகமாய் ஊற்றூறிப்
புந்திக்குள் நின்ற
அருட் பொற்பே பராபரமே.

சிற்சுகம்—ஞான இன்பம்; புந்தி—அறிவு; அருள்பொற்பு—கிருபையின் பொலிவு.

இவ்வுலக சம்பந்தமான சிந்தனைகள் மனித னுக்கு அல்லலை உண்டுபண்ணுகின்றன. யாண்டும் பகவத் சிந்தனையிலேயே ஊறி இருப்பவனுக்குச் சிற்சுகம் அல்லது ஆத்மானந் தம் ஓங்குகிறது. அதற்கேற்ப அவனுடைய அறிவு அருள்பெருக்கில் ஒன்றுபடுகிறது. யாண்டும் பரமானந்தமே மேலும் மேலும் ஓங்கு கிறது. காரணம் சாமானியமானது; காரியமோ மதிப்பிட முடியாத பெருநிலையாகிறது. சிந்திக்

கும் தன்மை எல்லார்க்கும் இருக்கிறது. இந்தச் சிந்தனையானது யாண்டும் தெய்விகச் சிந்தனையாக உறுதி பெறுமாகில் அந்த ஆத்ம சாதகனுக்குப் பிறகு தடையேதுமில்லை. மேலும் மேலும் பரத்தில் ஒன்றுபட்டுப் பரமாக அவன் மேன்மையுறுகிறான். இறைவா, என்சிந்தையை நான் உனக்கு உரியதாக்குவேனாகில் அதி விரைவில் நான் உன்மயம் ஆவேன் என்பது உறுதி. அத்தகைய பெருநிலை அருள்வாயாக என்பது இக்கண்ணியின் கருத்து.

302. என்றும் அடைந்தோர்கட்
கிரங்கார் குறிப்பனைத்துங்
கன்றையுதை காலி
கதை காண் பராபரமே.

ஏதோ சில பசுக்கள் தம் கன்றுகளைக் கிட்ட அணுகவொட்டாது உதைத்து ஓட்டும். அது அசாதாரணமான செயல். அவ்விதத்தில் ஆத்ம சாதகர்களுக்கு நன்னெறியில் செல்லும் பெரு மக்கள் உதவி செய்ய மறுப்பார்களானால் அதுவும் அசாதாரணமான செயலாகும். ஆத்ம சாதகனுடைய தௌர்பாக்யமென்றே அந்நிலையைப் பற்றி இயம்பவேண்டும். ஆனால் அந்த தௌர்பாக்கியத்தை ஆத்ம சாதகன் சௌபாக்ய மாக மாற்றியமைத்துக் கொள்ளக் கற்றுக் கொள்வானாகில் அவன் பாக்யசாலியாகிறான். இதற்குச் சான்று ஒன்று எடுத்துக்கொள்வோம். சிறையில் வைக்கப்பட்ட சீதா பிராட்டி ராமனிடத்திருந்து பிரித்தெடுக்கப்பட்டாள். அது அவளுக்கு தௌர்பாக்யம். ஆனால் அந்நிலையில் வைக்கப்பட்ட அவள் ராம நாட்டத்தையும் அருள் தாகத்தையும் பன்மடங்கு ஓங்குவித்தாள். அதன் விளைவாக ராமனிடத்தே இருந்து அடைந்த பண்பை விடப் பன்மடங்கு அதிகமான பண்பைச் சிறைவாசத்தில் பெற்றாள். ஆத்ம சாதகன் சிறை கிடந்த சீதா பிராட்டியாரை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு தன்னுடைய அருள் நாட்டத்தை வளர்த்து வரவேண்டும். அப்படிச் செய்கின்றவனுக்கு அடியார்களுடைய அனுக்கிரஹம் வாய்க்காது போவது தௌர்பாக்யமாகாது. அடியார்களுடைய துணையைக் கொண்டும், துணை வாய்க்காதவிடத்தும் அருள் நாட்டத்தை ஆத்ம சாதகன் வளர்த்துக் கொண்டே வரவேண்டும் என்பது இக்கண்ணியின் கருத்தாகும்.

303. குற்றங் குறையக்
குணமேலிட அருளை
உற்றவரே ஆவிக்குறவாம்
பராபரமே.

உறவு—சொந்தம்;

தன் தன் இயல்புக்கு ஒத்தபடியே ஒவ்வோர் உயிரும் வளர்ந்து வருகிறது. உடல் வளர்ச்சியில் மனிதனும் இந்த நியதிக்கு உட்பட்டவனாக இருக்கிறான். ஆனால் பண்பு வளர்ச்சியில் மனிதனுக்குத் தனிக் கடமை ஒன்று உண்டு. மன அமைப்பில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்ற இயல்பு உண்டு. மன அமைப்பை மேலானது என்றும் கீழானது என்றும் பாகுபடுத்தலாம். மேலான இயல்பு கீழான இயல்பாகக் கேடடைவதும் கீழான இயல்பு மேலான இயல்பாக முன்னேற்றமடைவதும் மனிதனுச்குச் சாத்தியம். கீழான இயல்பை மேலானதாகத் திருத்தியமைக்க மனிதன் கடமைப்பட்டிருக்கிறான். அப்படித் திருந்தியமைக்கிறவன் மக்கள் இனத்தைச் சேர்ந்தவனாகிறான். முன்னேற்றமடையாது இருக்கிறபடியே இருக்கிறவனும் படிப்படியாகக் கீழ்மை உறுபவனும் மாக்கள் இனத்தைச் சேர்ந்தவர்களாகிறார்கள். மானுடனாகப் பிறந்திருப்பவனுடைய கடமை தன்னை மேலோனாகத்திருத்தியமைத்தலேயாம். வடிவத்தில் மக்களாய் இருப்பவர்கள் மன அமைப்பில் தேவர்களுக்கும் மேலானவர்கள் ஆகக்கூடும். அங்ஙனம் தங்களைத் திருத்தியமைத்துக் கொண்டு வருகிறவர்கள் ஆத்ம சாதனங்கள் புரியத் தகுதியுடையவர்கள் ஆகின்றனர். அவர்களோடு வைக்கிற இணக்கம் மற்ற ஆத்ம சாதகர்களுக்கும் பேர் ஆதரவு அளிக்கிறது. தன்னைப் பண்படுத்தி வருகிற ஆத்ம சாதகன் யாரோடு இணக்கம் வைத்து வருகிறான் என்பதைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நல்லார் இணக்கம் யாண்டும் நலன் தரும். மற்றவர்கள் இணக்கம் என்ன கேட்டை விளைவிக்கும் என்று அறுதியிட்டு இயம்பமுடியாது. இறைவா, அருள் நாட்டம் படைத்துள்ள நல்லார்களுடனேயே நான் யாண்டும் இணக்கம் வைத்து வருவேனாக என்பது இக்கண்ணியின் கருத்து.

பரபோதம்

(ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருட்செல்வரான சுவாமி பிரமானந்தரின் போதனை)

நீர் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடுகிறது. அங்ஙனம் மனிதனுடைய மனம் பொன், பெண், பேர், புகழ் ஆகியவற்றை நாடி ஓடுகிறது. அங்ஙனம் ஓடும் மனதின் வேகத்தைச் சன்மார்க்கத்தின்கண் திருப்பி விடுவது சாதனையாகும். கடவுளை நோக்கி மனம் தடையில்லாது போகும்படி செய். ஸ்ரீ இராமகிருஷ்ணரின் மனம் யாண்டும் உயர்ந்த நிலையிலேயே இருந்து வந்தது. அவருடைய மனதைச் சாதாரண நிலைக்கோ, உலக விஷயங்களைப் பற்றிய சிந்தனைக்கோ கீழே இறக்கிக்கொண்டு வருவதற்கு மிகுந்த பிரயாசை எடுத்துக் கொண்டால்தான் முடியும். உயர்ந்ததை நாடியிருப்பதில் அவருடைய மனம் அவ்வளவு ஆழ்ந்திருந்தது. நீ உன் மனதைத் தெய்வத்தின்பால் திருப்புவதற்கு வெகு பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்குச் சிறந்த உபாயம் ஜபமாகும். இறைவனுடைய நாம ஜபம் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்க வேண்டும். நீ உனக்குரிய கர்மத்தைச் செய்யும் பொழுதும் ஜபம் செய்வதற்குப் பழகிக் கொள். இறைவனுடைய நாமஜபம் என்னும் சக்கரம் உன் உள்ளத்தில் சுழன்று கொண்டே இருக்கட்டும். உன் மனம் வேலை செய்து கொண்டிருப்பதற்கிடையில் நாமஜபமென்னும் சக்கரமும் உன் உள்ளத்தில் சுழன்று கொண்டிருக்கட்டும். இதைச் செய்துவா. உன் மனோ வேதனையெல்லாம் மறைந்துபோய் உன் மனம் அமைதியுறும். கடவுளுடைய நாமத்தைச் சொல்லி அவரிடம் அடைக்கலம் புகுந்த எத்தனையோ பாவிகள் தூய்மை அடைந்து ஜன்ம சாபல்யம் அடைந்திருக்கிறார்கள். இது உனக்குத் தெரியாதா! கடவுளிடத்திலும் கடவுளுடைய நாமத்திலும் ஆழ்ந்த விசுவாசமுடையவனாக இரு. கடவுளும் அவருடைய நாமமும் ஒன்று என்பதை அறிந்துகொள். அடியார்களுடைய உள்ளத்தில் ஆண்டவன் குடி கொண்டுள்ளார். உண்மையான ஆர்வத்தோடு அவரைக் கூவி அழை. ''இறைவா, எனக்கு உன்னுடைய கிருபையைக் கொடு. உன்னிடத்தில் எனக்குப் பக்தியையும் விசுவாசத்தையும் கொடு.'' இங்ஙனம் பிரார்த்தனை செய்து கொள். உன்னுடைய பிரார்த்தனை உண்மையான ஆர்வம் உடையதாயிருக்கவேண்டும். உன்னுடைய வாக்குக்கும், மனதுக்கும் ஒற்றுமையிருக்கவேண்டும். சொல் எவ்வாறு உணர்ச்சியை வெளிப்படுத்துகிறதோ உன் மனம் அத்தகைய உணர்ச்சி உடையதாக யிருக்கவேண்டும்.

யாவும் கடவுள் சொரூபம். எல்லா உயிர்களிடத்திலும் நீ அவரைக் கண்டு பழகு. எங்கும் கடவுளை நீ காணக் கற்றுக்கொள்ளும் பொழுது நீ பணிவுடையவனாய் விடுவாய். நீ கடவுளைப் பற்றியே கேள்; கடவுளைப் பற்றியே பேசு; கடவுளுடைய நாமம் உச்சரிக்கப்படாத இடத்துக்கு நீ செல்லவேண்டாம்; அவருடைய நாமத்தை உச்சரித்த வண்ணம் அவரைக் கூவி அழை; அவர் உனக்கு மிக அண்மையில் இருக்கின்றார்; அவர்தான் உனக்கு உற்ற நண்பராவார்; ஏன் அவர் தம்மை உனக்குக் காட்டவில்லை தெரியுமா? அவருக்கு உன்னுடைய மனதைத் திறந்து காட்டு; அப்பொழுதுதான் தம்மை உனக்குக் காட்டுவார். அவர் உன்னை நேரான வழியில் நடாத்திச் செல்வார். இறைவனுடைய நாமஉச்சாரணையும் அவரைப் பற்றிய தியானமும் உன் மனதைத் தூயதாக்குகின்றன. அவர்தான் உனக்கு மிக நெருங்கிய சொந்தக்காரர். நீ தூய மனமுடையவனாகி விட்டால் உனக்கு அவர் சுலபத்தில் வெளிப்படுவார்.

பக்தி மார்க்கம், ஞான மார்க்கம் என்ற இரண்டு மார்க்கங்கள் உண்டு. பக்தனுக்குக் கடவுள் தம்மை உருவத்தோடு காட்டுகின்றார். பக்தன் கடவுளைப் புகழ்ந்து பாடுகின்றான். அவர் நாமத்தைக் கூறி அவரை அழைக்கின்றான். அவருடைய ஒளிமயமான வடிவத்தைப் பக்தன் காண்கின்றான். பக்தன் சில சமயங்களில் அவரைக்காண வேண்டுமென்று அழுகின்றான். இன்னும் சில சமயங்களில் ஆனந்தத்தால் சிரிக்கின்றான். இது பக்தனுடைய பாங்கு. ஞானமார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள் உள்ளத்தில் ஞானவொளி

பெற விரும்புகின்றார்கள். அவர்கள் உள்ளம் ஞானஒளியுடையதாகவுமாகிறது. முடிந்த நிலையில் பக்தனும் ஞானியும் ஒன்றாகிவிடுகிறார்கள். அஞ்ஞானம் அல்லது அறியாமை பக்தி மார்க்கத்தின் மூலமாகவும், ஞானமார்க்கத்தின் மூலமாகவும் அழிக்கப்படுகின்றது. அஞ்ஞானம் அழிந்ததும் வாலறிவுமட்டும் பிரகாசிக்கிறது. வாலறிவுக்கும் அப்பால் என்ன இருக்கிறது என்னும் கேள்வி எழலாம். அதையும் கடந்து அப்பால் போகின்றவர்களே அதை அறியமுடியும். அதை யாரும் கடந்து போனதில்லை. எனவே அதைப்பற்றி யாரும் பகரவில்லை.

மனத்தளர்ச்சி கூடாது. பொறுமை வேண்டும். மெய்ப்பொருளை அறியும்வரை எல்லையற்ற பொறுமை வேண்டும். சாதனையின் ஆரம்ப தசையில் ஆத்ம தியானம் செய்வதுமிகவும் கஷ்டமாகத் தோன்றும். மனது தியானம் செய்வதில் களைப்பும்அடையும். கல்வியின் ஆரம்ப நிலையில் அக்ஷரங்களைக் கற்றுக்கொள்வதற்குச் சிறார்கள் சிரமப்படுவார்கள். அங்ஙனம் ஆரம்ப நிலையிலுள்ள சாதகர்கள் தியானம் செய்யச் சிரமப்படுவார்கள். தியானம் செய்து பழகப் பழக உள்ளத்தில் சாந்தியுண்டாகும். ஆத்மீகத் துறையில் முன்னேறவிரும்பும் சிலர் சான்றோர்களிடமிருந்து தீக்ஷை வாங்கிக் கொள்கின்றனர். தீக்ஷை வாங்கியபின் தாங்கள் எதுவும் அடைந்து விட்டதாக உணரவில்லை யென்று கூறுகிறார்கள். அப்படிக் கூறுகின்றவர்களுடைய கூற்றைச் சில நாட்களுக்கு நாம் காதில் போட்டுக்கொள்ளக்கூடாது. தீக்ஷை வாங்கி இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தாங்கள் சாதனையில் முன்னேற்றம் காண்பதாக அவர்களே கூறுவார்கள். ஆகையால் ஆத்மீக விஷயத்தில் பொறுமையை இழந்துவிடக் கூடாது. நீ சாதனையில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் காலத்தைக் கருத்தில் வாங்காது சாதனையில்ஆழ்ந்து ஈடுபடவேண்டும். தொடர்ந்து சிறிது காலத்துக்குச் சாதனை செய்துவந்தால் உன் உள்ளத்தில் ஆனந்த வெள்ளம் பெருக்கெடுக்கும்.

இராமகிருஷ்ணர் போன்ற மஹான்கள் பூத உடல் மறைந்த பிறகும் அருள் உலகில் யாண்டும் வாழ்ந்து வருகிறார்கள். அம்மஹாபுருஷருடைய லக்ஷியத்திற்காக இன்றும் சிலர் வீடுவாசல்களையும், சொத்துச் சுகங்களையும் விட்டு விட்டுத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறார்கள். நீயும் முழுமனதோடு அவருக்காக வாழ்க்கையை அர்ப்பணி. அவரைக் காணவேண்டுமென்று ஆவல் கொள். உன் ஆவலை அவர் பூர்த்தி செய்து வைப்பார். உன்னுடைய ஐயங்களையெல்லாம் அகற்றி அவருடைய உண்மையான நிலையை உனக்குக் காட்டுவார். யார் அவரைக் காணவேண்டுமென்று உண்மையான ஆவல் கொள்கின்றார்களோ அவர்களுக்கு அவருடைய அருள் கிட்டுகின்றது. ஆனால் எத்தனை பேர் அவரிடம் உண்மையான பக்தி கொள்கிறார்கள்? அவரைக் காணவேண்டுமென்ற உண்மையான ஆவல் எத்தனை பேருக்கு உள்ளத்தில் எழுகிறது?

ஆத்மஞானம் பெறுவது அவ்வளவு எளிய காரியமன்று. உடல், உள்ளம், அறிவு ஆகியவை ஒருங்கே வளர்ச்சி அடையவேண்டும். அப்பொழுதுதான் உன்னிடத்தில் ஆன்ம சக்தி வெளிப்படும். உடல், உள்ளம், அறிவு ஆகியவை முறையாக வளர்ச்சி அடையாவிட்டால் சமயத்தைப் பற்றிய உண்மையை நீ அறிந்து கொள்ள முடியாது. தன்னம்பிக்கையும், கடவுள் நம்பிக்கையும் உன்னிடத்தில் ஆழ்ந்ததாக இருக்கவேண்டும். ஆழ்ந்த விசுவாசமுடையவர்களால்தான் கடவுளைக் காணமுடியும். பணத்தின் மதிப்பை அறிகின்றவனுக்குச் சிறு பைசாவும் மதிப்புடையதாகத் தோன்றும். பணத்தின் மதிப்பை அறியாதவனுக்குத் தங்கக் கட்டியும் பொருளற்றதாகப் போய்விடும். கடவுள் விசுவாசமில்லாதவனுக்கு எதிலும் சந்தேகம் எழுந்து கொண்டேயிருக்கும். கடவுளிடத்தில் உண்டாகும் விசுவாசம் எல்லா ஐயங்களையும் போக்கி விடுகிறது.

மனம் ஏககாலத்தில் ஒன்றைத்தான் பற்றும். உலகத்திலும் கடவுளிடத்திலும் சேர்ந்து பற்று வைக்கமுடியாது. உலகப்பற்று ஒழிந்தால்தான் கடவுள் பற்றும், கடவுள் நம்பிக்கையும் உண்டாகும். உலகத்தில் நீ பற்றற்று வாழ்ந்திருக்க வேண்டும். கடவுளிடத்தில் உன்னை ஒப்படைப்பதே உலகப்பற்றை ஒழித்து வாழ்வதற்கு உபாயமாகும்.

வாழ்க்கைத் தத்துவங்கள்

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1971ஆம் ஆண்டு திருவேடகம் அந்தர்யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

வாழ்க்கைத் தத்துவங்கள் யாவும் அடங்கப் பெற்ற பிரார்த்தனை ஒன்று வருமாறு:

तेजोऽसि तेजो मयि धेहि ।
वीर्यमसि वीर्यं मयि धेहि ॥
बलमसि बलं मयि धेहि ।
ओजोऽसि ओजो मयि धेहि ॥
मन्युरसि मन्युं मयि धेहि ।
सहोऽसि सहो मयि धेहि ॥

தேஜோऽஸி தேஜோ மயி தேஹி ।
வீர்யமஸி வீர்யம் மயி தேஹி ॥
பலமஸி பலம் மயி தேஹி ।
ஓஜோऽஸி ஓஜோ மயி தேஹி ॥
மன்யுரஸி மன்யும் மயி தேஹி ।
ஸஹோऽஸி ஸஹோ மயி தேஹி ॥

இறைவா, நீ தேஜஸ் சொரூபியாக இருக்கின்றாய். தேஜஸ் சொரூபமாக என்னை நீ அமைப்பாயாக. நீ வீர்ய சொரூபமாக இருக்கின்றாய். வீர்யம் வாய்ந்தவனாக என்னை நீ அமைப்பாயாக. பலம் படைத்தவனாக இருக்கின்றாய். பலம் படைத்தவனாக என்னை நீ அமைப்பாயாக. உள் ஒளி சொரூபமாக நீ இருக்கின்றாய். உள் ஒளி சொரூபமாக என்னை நீ அமைப்பாயாக. தீமையை வெறுக்கும் பாங்கு உடையவனாக நீ இருக்கின்றாய். தீமையை வெறுக்கும் பாங்கு உடையவனாக என்னை நீ அமைப்பாயாக. சகிப்புத்தன்மை வடிவெடுத்தவனாக நீ இருக்கின்றாய். சகிப்புத் தன்மையை எனக்கு நீ தந்தருள்வாயாக. இது பிரார்த்தனையின் பொருள் ஆகும். இதை நாம் இனி ஒவ்வொரு பகுதியாக எடுத்து ஆராய்ந்து பார்ப்போம்.

தேஜஸ் சொரூபமாக நீ இருக்கின்றாய். தேஜஸ் சொரூபமாக நீ என்னை அமைப்பாயாக. இது முதல் பகுதியாகும். உடலின் பொலிவு தேஜஸ் என்று சொல்லப்படுகிறது. உயிர்த்தத்துவம் உச்சநிலையில் இருக்கிற பொழுது உடலுக்குப் பொலிவு உண்டாகிறது. இயற்கையில் இதற்குச் சான்றுகள் காணலாம். கடையில் பழம் வாங்கும்பொழுது புறத்தோற்றத்தில் கவர்ச்சிகரமாக இருக்கின்ற பழத்தை விரும்புகின்றோம். நிறத்திலும் கனிவிலும் கவர்ச்சிகரமாக இருப்பது பழத்துக்கு அமைந்திருக்கிற தேஜஸ் ஆகின்றது. காய்கறிவகைகளிலும், மரம் செடி கொடிகள் வகைகளிலும், நிறமும், அவைகளிடத்தில் உள்ள செழுமையும் அவைகளுக்கு அமைந்துள்ள தேஜஸ் ஆகிறது. சில பூச்சி வகைகள் அழகே வடிவெடுத்தவைகளாக இருக்கின்றன. அவ் அழகு அவைகளுக்குள்ள தேஜஸ் ஆகின்றது. விலங்குகளுக்கிடையில் சிங்கம் மிருகேந்திரன் என்று சொல்லப்படுகிறது. சிங்கத்தின் தோற்றம் கவர்ச்சிகரமாக இருக்கிறது. அது அதனுடைய தேஜஸ் ஆகிறது. பொருத்தமான உடல் வளர்ச்சியின் விளைவாகத் தேஜஸ் வந்து அமைகிறது. இராமபிரானுடைய உடல் தேஜஸுக்கு நல்ல விளக்கமாகிறது. அவருடைய உடலின் பொலிவு காண்பவர்களுடைய உள்ளத்தைக் கவரக்கூடியதாக உள்ளது. இராமன் மிதிலாபுரிக்குச் சென்றபொழுது அவருடைய முகத்தைப் பார்த்தவர்கள் முகத்தையே பார்த்தவண்ணம் இருந்தனர். தோளைப் பார்த்தவர்கள் தோளையே பார்த்தவண்ணம் இருந்தார்கள். பாதத்தைப் பார்த்தவர்கள் பாதத்தையே பார்த்தவண்ணம் இருந்தார்கள். நெஞ்சைப் பார்த்தவர்கள் நெஞ்சையே பார்த்தவண்ணம் இருந்தார்கள். மிதிலை மக்கள் ஒவ்வொருவரும் இராமபிரானின் ஒவ்வொரு அங்கத்தைத்தான் பார்த்தார்களேயொழிய அவருடைய வடிவம்முழுவதையும் யாரும் பார்க்கவில்லை. இங்ஙனம் கம்பன் வர்ணிக்கின்றான். தேஜஸின் விளைவாக அத்தகைய பொலிவு இராமன் மேனியில் அமைந்திருந்தது. இராவணன் இராமனை அற்ப மனிதன் என்று எண்ணி இருந்தான். ஆனால் இராவணன் நேரில் இராமனைப் பார்த்தபொழுது இராமனுடைய உடல் பொலிவில் லயமாகிவிட்டான்.

மனிதன் எவ்வளவுக் கெவ்வளவு சீலத்தில் நிலைபெற்றவனாக இருக்கின்றானோ அவ்வளவுக் கவ்வளவு அவனுடைய மேனியில் தேஜஸ் உண்டாகிறது. ஒழுக்கம் தவறுகின்றபொழுது

அவனுடைய மேனியின் பொலிவு தேய்ந்து போகின்றது. பிறக்கும்பொழுதே பொலிவுடன் உடல் அமைந்திருப்பது ஒரு நிலை. சீலத்தின் மூலமாக உடலின்கண் தேஜஸ் உண்டாவது இன்னொருவித நிலை. தேஜஸைப் பெற்று அதைக் காப்பாற்றி வருவது மனிதனுடைய கடமை ஆகிறது. இயற்கையாக அமைந்த பொலிவை இன்னும் மேன்மைப்படுத்துவதற்குச் சீலத்தைக் கடைப்பிடிப்பது அவசியம் ஆகிறது. இயற்கையாக உடல் அமைப்பில் தேஜஸ் இல்லாத இடத்து சீலத்தின் மூலமாக தேஜஸை உடலின்கண் கொண்டுவரலாம். சமீபகாலத்தில் வாழ்ந்த இராம பக்தராகிய சுவாமி விவேகானந்தரின் மேனி பிறந்தது முதல் தேஜஸ் சொருபமாகத் திகழ்ந்தது. அவர் கடைப்பிடித்த சீலம் அவருடைய மேனியை மேலும் கவர்ச்சி உடையதாகச் செய்தது. அமெரிக்காவில் சிகாக்கோ நகரில் நிகழ்ந்த சர்வமத மகாசபையின் முன் சுவாமி விவேகானந்தர் எழுந்து நின்றபொழுது அவருடைய மேனியின் பொலிவு அச்சபையிலிருந்த அனைவருடைய உள்ளத்தையும் கவர்ந்துவிட்டது. மிதிலாபுரிக்குச் சென்ற இராமன் மிதிலாபுரி மக்களின் உள்ளத்தைக் கவர்ந்ததை அது ஒத்திருந்தது. 'உள்ளம் கவர் கள்வன்' என்று சிவனாரைப் போற்றுவதுண்டு. இறைவனுடைய மகிமை உடல் மூலம் வெளிப்படும் போது தேஜஸ் ஆகிறது. அழிந்துபட்டுப் போகும் உடல் மூலம் தேஜஸ் பொலிவுடன் விளங்குகின்றது.

மகாத்மா காந்தியின் உடல் பிறப்பிலேயே கவர்ச்சிகரமாக அமையவில்லை. ஆனால் அவர் சீலத்தைக் கடைப்பிடித்ததின் விளைவாக அவருடைய மேனியில் தேஜஸ் உண்டாயிற்று. அது அனைவருடைய உள்ளத்தையும் கவரக்கூடியதாக இருந்தது. அவரைப்பற்றி வெலிங்டன் பிரபு பகர்ந்ததாவது: "உடலில் துணி போட்டும் போடாது பாதி நிர்வாணமாக இருக்கும் அந்தப் பக்கிரி பேச ஆரம்பித்தால் என்னைக் கவர்ந்துவிடுவார். ஆகையால் நான் அவரைப் பார்க்கமாட்டேன்". மகாத்மாவுக்கு வெலிங்டன் எதிரிபோன்று இருந்தார். இராமனுடைய எதிரி இராவணன் இராமனுடைய உடலின் தேஜஸைப் பாராட்டியது போன்று மகாத்மா காந்தியினுடைய எதிரி வெலிங்டன் காந்தியினுடைய உடல் பொலிவைப் பாராட்டினார். தேஜஸ் ஒருவருக்குக் குருட்டு வாய்ப்பாக வந்து அமைவதன்று. அது தெய்வீகத் தன்மை ஆகும். தேஜஸை வளர்ப்பது சாதகனுடைய கடமையாகும். பண்பட்ட வாழ்வு வாழ்வதோடு கடவுளிடம் கசிந்து பிரார்த்தனை பண்ணுவதும் சேர்ந்து நம்மிடத்தில் தேஜஸை வளர்க்கிறது. நாம் செய்யும் பிரார்த்தனை பொருள் உடையதாகஇருக்கவேண்டும். ஒழுக்கமில்லாத வாழ்வு வாழ்ந்து தெய்வ சம்பத்து வேண்டுமென்று தெய்வத்தினிடத்துப் பிரார்த்தனைபண்ணுவது பொருளற்ற பிரார்த்தனையாகும். இறைவனைக் குறித்துச் செய்கின்ற பிரார்த்தனை பொருள் சேர்ந்த பிரார்த்தனையாக இருக்கவேண்டும். பொருள் சேர்ந்த பிரார்த்தனைக்குத் தெய்வம் அனுக்கிரகம் செய்கின்றார். "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு" என்பது வள்ளுவர் வாக்கு. நம் வாழ்வு சீலம் நிறைந்ததாக இருக்குமானால் நாம் செய்கின்ற பிரார்த்தனை பொருள் சேர்ந்த பிரார்த்தனை ஆகும். சீலத்தின் வாயிலாகவும், தெய்வீக எண்ணத்தில் ஊறி வளர்வதன் வாயிலாகவும், மேனி தெய்வீக வடிவெடுத்ததாக அமைகின்றது. தெய்வீக எழில் தேஜஸ் ஆகின்றது.

வீர்யமஸி வீர்யம் மயி தேஹி என்பது அடுத்த பகுதியாகும். வீர்யம் என்பது பராக்கிரமம். வீர்யத்தை முறையாகக் கையாளுபவன் வீரன் ஆகின்றான். வீரியத்தை முறை தவறிக் கையாளுபவன் சூரன் ஆகின்றான். வீரத்தன்மைக்கும் சூரத்தன்மைக்கும் விலங்கு இனத்தில் சிங்கத்தையும், சிறுத்தையையும் சான்றுகளாக எடுத்துக்கொள்ளலாம். சிங்கம் பசி ஏற்படும் பொழுது பசிக்குத் தேவையான உயிரை மட்டும் கொல்லும். பசி இல்லாத பொழுது அது எந்தப் பிராணியையும் கொல்லாது. சிங்கத்தை வீரியம் படைத்தது எனலாம். சிறுத்தை ஆட்டு மந்தைக்குள் புகுந்தால் ஒவ்வொரு ஆடாகக் கொன்று கொண்டே இருக்கும். அது சூரத்தன்மை எனப்படும். மக்களுள் அப்படி சூரர்களாகச் சிலர் இருக்கிறார்கள். அவசியம் ஏற்படும் பொழுதுதான் வீரன் எதிரியைத் தாக்குவான். தாக்கும் அந்த

வேளையிலே மன்னிக்க வேண்டியநிலை ஏற்பட்டாலும் வீரன் மன்னித்து விடுவான். 'க்ஷமா வீரஸ்ய பூஷணம்' என்பது கோட்பாடு. எதிரியினுடைய தவறை ஒரு கணத்தில் மன்னித்து மறந்து விடுவது வீரனுக்கு அழகாம்.

அற்ப மனிதனுக்கு ஆற்றல் இருக்குமாகில் அதை முறைதவறிக் கையாளுவான். தனக்கு யாராவது தீங்கு செய்து விட்டால், அவன் அதை ஆயுள் முழுவதும் மறக்கமாட்டான். சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது தனக்குத் தீங்கு செய்தவனுக்கு எதிர்த் தீங்கு செய்யவே அவன் விரும்புவான். சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுது சூரன் பிற உயிர்களுக்குத் துன்பம் தந்து கொண்டே இருப்பான். பிறர் தனக்குத் தீங்கு செய்தாலும், பிரதி தீங்கு செய்யாதிருப்பவன் வீரன் ஆகின்றான். யானையின் தலைமீது கொசுக்கள் பெருங்கூட்டமாக உட்கார்ந்து கொண்டு அதன் தலையைக் கடித்தால், யானை அதைச் சிறிதும் பொருட்படுத்தாது. கொசு ஒன்று சொன்னதாவது: "நண்பா! நாங்கள் கூட்டமாக உன் தலைமீது உட்கார்ந்து உன்னைக் கடித்துக் கொண்டிருக்கின்றோம். உனக்கு ஏதாவது நாங்கள் செய்வது உபத்திரவமாக இருந்தால் தயவு செய்து சொல்லி விடு. நாங்கள் எழுந்து வேறு இடத்துக்குப் போய் விடுகின்றோம்." யானை அதற்குப் பதில் சொன்னதாவது: "இந்தக் கூட்டத்தோடு இன்னும் பாக்கியுள்ள உங்கள் கூட்டங்கள் அவ்வளவும் என் தலைமீது வந்து அமர்ந்து கொள்ளுங்கள். அதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை." "க்ஷமா வீரஸ்ய பூஷணம்" என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டாகும். யானை வீரியமுடையதாக இருந்ததால், கொசுக் கூட்டத்தை அது பொருட்படுத்தவில்லை. நோய்வாய்ப்பட்டிருக்கும் மெலிந்த மனிதன் மீது அத்தகைய கொசுக் கூட்டம் அமர்ந்து அவனைக் கடித்தால் அவனுக்குப் பிராண வேதனையாக இருக்கும். எனவே அவன் அதைப் பொறுத்துக்கொள்ளாது, தன் வலிவைக் கொண்டு அவற்றைக் கொன்று தன் சூரத்தன்மையை வெளிப்படுத்துவான். வீரன் பிற உயிர்களோடு வைக்கிறதொடர்பில் தனது வீரத்தை வெளியாக்குவான். இராமன் ஒரு வீரன். இராவணன் ஒரு சூரன். கேட்டை ஒழிப்பதற்கும், நலத்தைப் பாதுகாப்பதற்கும் சுயநலமின்றி இராமன் தன் பராக்கிரமத்தைப் பயன்படுத்தினான். இராவணன் சுயநலத்துக்காக தன் பராக்கிரமத்தைப் பயன்படுத்தினான். தன் பராக்கிரமத்தைப் பயன்படுத்தி பல ஸ்திரீகளின் கற்பை அழித்தான். அவனை அழிப்பதற்காகவே இராமன் தோன்றினான். இராமன் இராவணனுடைய மனதை மாற்றிக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் கொடுத்தும் இராவணன்மாறியமையவில்லை. இராவணன் வலிவை இழந்தபோதெல்லாம் இராமன் இராவணனிடம் "உனக்கு உயிர்வாழ விருப்பமிருப்பின் உன்தவறை உணர்ந்து சீதையை ஒப்படைத்து விடு. உன்னை நான் கொல்லமாட்டேன்" என்று எச்சரிக்கை செய்தான். இறுதியாக "உன்னை நான் நாளை கொல்லத் தீர்மானித்து விட்டேன். உயிரோடிருக்க விரும்பினால் சீதையை என்னிடம் ஒப்படைத்து விட்டு இலங்கையை விட்டு எங்கேயாவது ஓடிப் பிழைத்துக்கொள். இல்லையேல் உன் பலத்தை எல்லாம் ஒன்று சேர்த்து என்னைத் தாக்கலாம்" என்ற எச்சரிக்கையும் செய்தான். இராவணன் இதை எல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாது போரில் இறங்கினான். ராம ராவண யுத்தத்தில் ராவணன் களைத்துப்போய் இருந்ததைப் பார்த்து, "இன்று போய் நாளை வா," என்று ராமன் சொன்னது, ராமனுடைய வீரியத்தைக் காட்டுகிறது. எதிரி களைத்துப் போயிருக்கும் சமயம் பார்த்து அவனை அடித்துக் கீழே வீழ்த்துவது பலஹீனமாகும். வீரன் ஒருபொழுதும் அத்தகைய செயல் செய்யமாட்டான். வாழ்க்கைத் தத்துவத்தை நன்றாக அறிந்து வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து பிசகாது வாழ்பவனே வீரியம் படைத்தவன் ஆகின்றான். ஆதி சங்கரர் உடம்பின் சில அவயவங்கள் அபிசார வித்தையில் ஈடுபட்டிருந்த ஒருவனுக்குத் தேவைப்பட்டன. அவன் சங்கரரை அணுகி வேண்டிக் கொண்டதாவது: "நீங்கள் பிரம்மஞானம் அடைந்திருக்கின்றீர்கள். சரீரம் இல்லாது போவதில் உங்களுக்கு நஷ்டம் இல்லை. உங்கள் சரீரம் எனக்குக் கிடைத்தால் அதை நான் ஒரு பெரிய காரியத்துக்குப் பயன்படுத்துவேன். அதை நீங்கள் ஏன் எனக்குத்

தரலாகாது?" சங்கரர் அதற்குப் பதிலளித்த தாவது: "நான் பிரம்ம நிஷ்டையிலிருப்பேன். அப்போது நீ சரீரத்தை எடுத்துக் கொள்ள லாம். ஆனல் உனக்கு நான் ஒரு எச்சரிக்கை செய்கின்றேன். நீ என் சரீரத்தை எடுக்க முயலுகின்ற பொழுது என் சிஷ்யர்கள் யாரா வது பார்த்துவிட்டால் உன்னைச் சும்மாவிட மாட்டார்கள். அவர்களுக்குத் தெரியாது உன் செயலை முடித்துக்கொள்." இது வீரத்தன் மைக்கு மற்றெரு விளக்கமாகும். சங்கரர் தாம் சொல்லிய பிரகாரம் பிரம்மநிஷ்டையில் அமர்ந் தார். ஆனல் அவருடைய சரீரத்தை அபிச் சார வித்தைக்காரன் கொல்லப்போகும் பொழுது சங்கரருடைய சிஷ்யர் தோடகாச் சாரியாருக்கு நரசிம்மமூர்த்தியின் ஆவேசம் வந்து அவனைத் தாக்கிக் கொன்றுவிட்டார். சங்கரருடைய சரீரம் உலக நன்மையின் பொருட்டு இருக்கவேண்டியிருந்ததனல் தெய்வாதீனமாக அது காப்பாற்றப்பட்டது. சங்கரர் தம்மைப் பொறுத்தவரையிலும் வீரராக இருந்து உயிரைக் கொடுக்க ஆயத்தமாக இருந்தார். ஆனல் அது திருவருளுக்குச் சம்மதமில்லை.

ஆத்ம சாதனத்தில் மேலே போகின்றவர் கள் வீரிய சொருபமாக இருந்தாக வேண்டும். பிற உயிர்கள் மீது அவர்கள் நடவடிக்கை எடுப்பது அளந்தெடுத்ததாக இருக்கும். பழிக் குப் பழி வாங்குகின்ற பாங்கில் அவனுடைய செயல் இருக்காது. புராணங்களில் தேவர் களுக்கும், அசுரர்களுக்கும் போர் நிகழ்வதைப் படிக்கின்ரேம். அப்போரில் தேவர்கள் அடி படுவதாகவும், அசுரர்கள் வெற்றி பெறுவதாக வும் படிக்கின்ரேம். அடிபட்ட தேவர்கள் சிவன் அல்லது விஷ்ணுவிடம் சென்று முறையிடுவார் கள். தேவர்களைக் காப்பாற்றுவதற்காகச் சிவன் அல்லது விஷ்ணு அசுரர்களோடு போர் புரிவார். தேவர்கள் நல்லவர்கள். ஆனல் வீரியமில்லாதவர்கள். அசுரர்கள் தங்களிட முள்ள வீர்யத்தை முறைதவறிக் கையாண்ட தால் அவர்கள் சூரர்களாகிருர்கள். ஒரு தடவை தேவேந்திரன் ததீசி முனிவரிடம் வந்து கேட்டதாவது: "மகரிஷியே, அசுரர்களை ஒழிப்பதற்கு வஜ்ராயுதம் தேவை. பிறந்தது முதல் நைஷ்டிக பிரம்மச்சரியாக இருந்து சதா சீலத்திலும் இருப்பவர் ஒருவருடைய எலும்பு வஜ்ராயுதத்துக்குத் தேவைப்படுகிறது. நீங் கள் சீலத்திலும், பிரம்மச்சரியத்திலும் உறுதி பெற்றவர்களாக இருக்கிறீர்கள். ஆதலால் உங்களுடைய எலும்பு தேவைப்படுகிறது." "நான் ஆழ்ந்து பிரமநிஷ்டையிலிருந்து சரீரத்தை உகுத்து விடுகின்றேன். நீங்கள் என் சரீரத்திலுள்ள எலும்பைப் பயன்படுத் திக் கொள்ளலாம்" என்று ததீசி முனிவர் அவர்களுக்குக் கூறித் தன் சரீரத்திலிருந்து விலகிக் கொண்டார். அவருடைய சரீர எலும்பிலிருந்து வஜ்ராயுதம் செய்யப்பட்டது. 'ஆயுதங்களுள் நான் வஜ்ராயுதமாக இருக் கிறேன்' என்று கீதையில் கிருஷ்ணன் பகர்ந் திருக்கிருர். வாழ்வு முழுவதும் வீரியத்தோடு வாழ்ந்த ததீசி மஹரிஷி பிறர் நலத்தின் பொருட்டுத் தம் சரீரத்தை ஒப்படைத்ததின் விளைவாக அவருடைய உடல் எலும்பு வஜ்ரா யுதத்துக்குப் பயன்பட்டது. தவத்தின் மூல மாகவும், சீலத்தின் மூலமாகவும் வந்து அமைந்த வீரத்தைப் பிறர் நலனுக்கு ஒப்ப டைத்தவர் ததீசிமுனிவராவார். சுயநலத்துக் காகவோ, தன்னுடைய பெருமைக்காகவோ, பிறரைத் துன்புறுத்துவதற்காகவோ, பராக் கிரமத்தைப் பயன்படுத்தக் கூடாது. உயர்ந்த லக்ஷியத்தின் பொருட்டு நம்மை ஒரு சிறந்த கருவியாக அமைக்கின்றவிடத்து நாம் வீரர்கள் ஆகின்ரேம். வஜ்ராயுதம் எத்தகைய சிறப் புடையது என்பதை உதாரணம் கொண்டு விளக்கலாம். விறகைப் பிளப்பதற்காகக் கோடாரியைப் பயன்படுத்துகிரேம். ஆனல் அக்கருவி க்ஷவரம் செய்வதற்குப் பயன்படாது. க்ஷவரம் செய்வதற்குப் பயன்படும் கத்தியை விறகு பிளப்பதற்குப் பயன்படுத்த முடியாது. க்ஷவரக்கத்தி மெல்லியதாகவும், கூர்மையா கவுமிருக்கும். கோடாரி உறுதி வாய்ந்ததாக வும் கூர்மையாகவுமிருக்கும். எந்த ஒரு கருவி க்ஷவரம் செய்வதற்கும் அதே சமயத்தில் விறகு பிளப்பதற்கும் உதவக்கூடியதாக நுண்ணிய தாகவும், கூர்மையாகவும், வலிவுபடைத்ததாக வும் இருக்கிறதோ அது வஜ்ராயுதமாகும். நலத்தை நிலைநாட்டவும், கேட்டை ஒழிக்கவும் பயன்படுகின்றவரை வஜ்ராயுதத்துக்கு நிகராக சொல்லலாம்.

(தொடரும்)

உலகப் பேராசிரியர்கள்

(சுவாமி விவேகானந்தர் 1900ஆம் ஆண்டில் கலிபோர்னியாவைச் சேர்ந்த பசாடினியாவிலுள்ள ஷேக்ஸ்பியர் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

பிரபஞ்ச நடைமுறை என்னும் வட்டத்தில் கடல் அலை வடிவத்தில் இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது ஹிந்துக்களுடைய கொள்கை. அவ் இயக்கத்தில் ஏற்றம் உண்டாகிறது. அந்த ஏற்றம் உச்ச நிலையை அடைகிறது. பிறகு இயக்கத்துக்கு வீழ்ச்சி ஏற்படுகிறது. அவ் வீழ்ச்சி மிகப் பாதாளம் நோக்கிச் செல்லுகிறது. சிலகாலம் அந்த இயக்கம் வீழ்ச்சி அடைந்த நிலையிலேயே இருக்கிறது. மறுபடியும் சிலகாலத்துக்கு ஏற்றம் உண்டாகிறது. இங்ஙனம் கடல் அலை உயர்வதும் தாழ்வதுமாக இருப்பதுபோன்று பிரபஞ்சத்தின் இயக்கத்திலும் ஏற்றமும் இறக்கமும் இருந்துகொண்டே இருக்கின்றன. இப்பிரபஞ்சத்தைப் பற்றிய உண்மை எதுவோ அதுவேதான் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு பகுதியைப்பற்றிய உண்மையுமாகும். மனிதனுடைய விஷயமும் அதைப்போன்றே அமைந்திருக்கின்றது. நாடுகளினுடைய வரலாறும் அவ்விதமே அமைந்திருக்கிறது. ஏற்றத்தையும் இறக்கத்தையும் நாட்டின் வரலாற்றில் காண்கின்றோம். ஏற்றம் உண்டாவதும் அதற்குப்பின் இறக்கம் உண்டாவதும் அவ்விறக்கத்திலிருந்து மறுபடியும் ஏற்றம் உண்டாவதும் மாறி மாறி நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இத்தகைய இயக்கம் யாண்டும் நிகழ்ந்து வருகிறது. உலகத்திலுள்ள சமயங்களுக்கிடையிலும் இத்தகைய இயக்கம் இருந்து வருகிறது. ஒவ்வொருநாட்டின் ஆன்மீக வாழ்வில் எழுச்சியும் வீழ்ச்சியும் இருக்கின்றன. நாடு வீழ்ச்சி அடையும் பொழுது அங்குள்ள யாவும் சின்னாபின்னமாகி விடுகின்றன. மீண்டும் அது பலம்பெற்று எழுந்திருக்கிறது. அப்பொழுது பேர் அலை ஒன்று ஏற்படுகிறது. சில வேளைகளில் கடலே பொங்கி எழுவது போன்று பெருமாறுதல் உண்டாகிறது. அப்பொழுது உலகத்துக்கு மிக உயர்ந்த சான்றோர் வருகிறார். அவர் ஒரு புதிய சமுதாயத்தை உண்டாக்குகிறார். அம்மகானைச் சமுதாயம் உண்டாக்குகிறது. அவர் ஒரு சீரிய சமுதாயத்துக்குத் தூண்டுதல் தருகிறார். சீரிய சமுதாயம் ஒரு மகானைத் தோற்றுவிக்கிறது. அவர் தம் முழுச் சக்தியையும் சமுதாயத்தின் மீது செலுத்துகிறார். அவரை அத்தகைய நிலைக்குச் சமுதாயம் உருவாக்குகிறது. அத்தகைய மகான்கள் உலகச் சிந்தனையாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் உலகத்துக்கே தீர்க்கதர்சிகளாகிறார்கள். வாழ்க்கையைப் பற்றிய செய்திகளைத் தெரிவிப்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கடவுளின் அவதாரங்களாவார்கள்.

ஒரு மதம்தான் இருக்க முடியும் என்பதும், ஒரு தீர்க்கதரிசிதான் தோன்ற முடியும் என்பதும், ஒரு அவதாரம்தான் வரமுடியும் என்பதும் சிலருடைய கருத்தாகும். ஆனால் அந்தக் கருத்துச் சரியானதன்று. உலகுக்கு வந்த சான்றோர்களுடைய வாழ்க்கைகளைப் படித்துப் பார்க்கும்பொழுது ஒவ்வொருவரும் ஒரு காரியத்தை நிறைவேற்றுவதற்காக இவ்வுலகத்துக்கு வந்தார்கள் என்பது விளங்கும். ஆனால் யாவரும் உலக முன்னேற்றம் என்ற ஒரு காரியத்தில் ஒற்றுமைப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் எடுத்துக்கொண்ட பகுதி வெவ்வேறாகும். வாழ்வில் பல இனங்களைக் காண்கின்றோம். இவ்வுலகை அனுபவிப்பதற்கு ஒரு இனத்துக்கு மட்டும் உரிமையில்லை. தங்களுக்கு மட்டும் உலகை அனுபவிப்பதற்கு உரிமை உண்டு என்று எந்த இனமும் சொல்ல முடியாது. ஒவ்வொரு இனத்துக்கும் ஒவ்வொருவிதத் தெய்வீகப் பணி உண்டு. தங்களுடைய கொள்கையைச் செயல்படுத்துவதற்காகவும், தங்களுடைய கடமையை நிறைவேற்றுவதற்காகவும் ஒவ்வொரு இனமும் பாடுபட வேண்டும். அவைகளினுடைய எல்லாச்செயல்களும் தெய்வீகப்பணி என்பதில் ஒன்றுபடுகின்றன.

உலக முழுவதையும் யாண்டும் ஆட்சிபுரிவதற்கு என்று எந்தத் தீர்க்கதரிசியும் பிறக்கவில்லை. இதுவரையிலும் அதில் யாரும் வெற்றி பெறவில்லை. இனியும் உலகத்தை எப்

பொழுதுமே ஆட்சி புரியக்கூடிய ஒரு தீர்க்க தரிசி பிறக்கப்போவதும் இல்லை. ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தம்முடைய பகுதியைச் சரியாகச் செய்கின்ருர். தம்முடைய பங்கைச் சரியாகச் செய்வதன் மூலம் அவர் உலகத்தவர் எல்லாரையும் தம்பால் இழுப்பவராகின்ருர்.

ஏதோ ஒருமதக் கொள்கையில் நம்பிக்கை உடையவராக நம்மில் பெரும்பாலோர் பிறந்திருக்கின்ருேம். நாம் தத்துவங்களைப்பற்றிப் பேசுகின்ருேம். கொள்கைகளை நினைத்துப்பார்க்கின்ருேம். ஆனல் நம்முடைய ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு அசைவும், ஒவ்வொரு செயலும் யாரேனும் ஒரு சான்ருேர்மூலம்வரும் தத்துவத்தைத்தான் நாம் கிரஹிக்க முடியும் என்பதைக் காட்டுகின்றன. நம் போன்று மானுட வடிவம் தாங்கி வந்து கருத்தை உபதேசித்தால்தான் நாம் அக்கருத்தைக் கிரஹிக்க முடிகிறது. உதாரணம் காட்டி விளக்கினல்தான் உபதேசத்தை அறியமுடிகிறது. ஒருவருடைய உதவி இல்லாமல் உதாரணம் ஏதும் இல்லாமல் தத்துவத்தை அறிந்துகொள்கின்ற அளவு கடவுள் நம்மைப் பக்குவப்படுத்தி இருந்தால் நன்ருக இருந்திருக்கும். ஆனல் நாம் அவ்வாறு பண்பாடு அடையவில்லை. நம்மில் பெரும்பாலோர் சான்ருேர்களையும், தீர்க்கதரிசிகளையும், அவதாரபுருஷர்களையும்,சரண்புகுந்திருக்கின்ருேம். அவதார புருஷர்களையே கிறிஸ்துவர்களும், பௌத்தர்களும், ஹிந்துக்களும், வழிபட்டு வந்திருக்கின்றனர். முகமதியர் அத்தகைய வழிபாட்டை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்திருக்கின்றனர். தீர்க்கதரிசிகளிடத்திலும் தேவ தூதர்களிடத்திலும் வழிபாடு சம்பந்தப்பட்டவரையிலும் அவர்கள் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை. அவர்களுக்கு வணக்கமும் செலுத்தவில்லை. ஆனல் ஒரு தீர்க்க தரிசிக்குப் பதிலாகப் பல்லாயிரக்கணக்கான ஞானிகள் வழுத்தப்படுவதை நடைமுறையில் காண்கின்ருேம். உண்மைக்கு எதிராகப் போகமுடியாதன்ருே! சான்ருேர்களை வழிபட நாம் கடமைப்பட்டிருக்கின்ருேம். அத்தகைய வழிபாடு நல்லது. உங்கள் தீர்க்க தரிசியை "உங்களுடைய தந்தையைக் காட்டி அருளுங்கள்" என்று கேட்டபொழுது, "என்னைப் பார்த்தவர்கள் என் தந்தையைப் பார்த்தவர்கள் ஆவார்கள்" என்று அவரிடம் இருந்து வந்த வார்த்தையை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். கடவுளை மனிதத் தோற்றத்தில் அல்லாது வேறு எப்படி நாம் கற்பனை பண்ணமுடியும்! மனிதன் மூலமாகத்தான் கடவுளை நாம் அறிய முடியும். இந்த அறையில் ஒளியின் சலனம் எங்கும் இருக்கிறது. ஆனல் எல்லா இடத்திலும் ஏன் காண முடிவதில்லை? மின் விளக்கில் தான் ஒளியின் சலனத்தைக் காணமுடிகிறது. அங்ஙனம் கடவுள் எங்கும் இருக்கின்ற பொருள் எனினும், மனித வடிவத்தின் மூலமாகத்தான் அவரைப் பார்க்கவோ அறியவோ முடிகின்றது. அவதார மூர்த்திகள் வருகின்ற பொழுது அவர்கள் மூலமாகக் கடவுளை மனிதன் எளிதில் அடைகின்ருன். அவர்கள் இவ்வுலகுக்கு வந்த விதம் வேறு; நாம் இந்த உலகுக்கு வந்த விதம் வேறு.

நாம் பிச்சைக்காரர்கள் போன்று இவ்வுலகிற்கு வந்திருக்கிருேம். அவர்கள் சக்கரவர்த்திகளாக இவ்வுலகிற்கு வந்திருக்கிருர்கள். கதியற்றவர்களாக நாம் வந்திருக்கின்ருேம். வழி இழந்து வழி தெரியாமல் தவிப்பவர்கள் போன்று நாம் இருக்கின்ருேம். நாம் என்ன செய்யவேண்டும் தெரியுமா? வாழ்வின் பொருள் என்ன என்பதை நாம் அறியாது இருக்கின்ருேம். வாழ்வைப் பற்றி அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்ருேம். இன்றைக்கு ஒரு காரியத்தைச் செய்கின்ருேம். நாளைக்கு மற்ருெரு காரியத்தைச் செய்கின்ருேம். நீரில் அகப்பட்டுக்கொண்ட சிறு துரும்பு இங்கும் அங்கும் ஊசலாடுவது போன்று நாம் வாழ்க்கையில் ஊசலாடிக் கொண்டிருக்கின்ருேம். புயலில் அகப்பட்ட பறவையின் இறகுகள் வீசி எறியப்படுவது போன்று நாம் வாழ்க்கையில் அல்லலுறுகின்ருேம்.

மனித வரலாற்றில் கடவுளுடைய தூதர்களாக வருகின்றவர்கள் பிறக்கும் பொழுதே லட்சியத்தோடு பிறக்கிருர்கள். பிறந்தது முதல் லட்சியத்துக்காகவே தங்களை உருவாக்குகிருர்கள். வாழ்க்கையின் முழுத்திட்டமும் அவர்கள் முன் உருவாக்கி வைக்கப்படுகிறது. பிறகு அதில் இருந்து அவர்கள் இம்மியளவும் பிசகுவதில்லை அவர்கள் லட்சியத்

தோடு வந்திருப்பதால், அவர்கள் உலகுக்கு அளிக்கவேண்டிய செய்தியோடு வந்திருப்பதால் அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உலகுக்கு வந்த தத்துவ ஞானிகள், உலகப் பேராசிரியர்கள் தாங்கள் உபதேசம் செய்ததை ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் உண்மையை நேரே எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் உண்மையைத்தரிசித்தவர்கள். ஆகையால் ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் உண்மையைத் தரிசித்து இருந்ததோடு உண்மையைப் பிறருக்குக் காட்டவும் அவர்களுக்கு முடிந்தது. கடவுள் இருக்கிறாரா என்று என்னை நீங்கள் கேட்பீர்களானால் இருக்கிறார் என்று நான் சொல்லுவேன். உடனே நீங்கள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரங்கள் என்ன என்று கேட்பீர்கள். எளியவனாகிய நான் என் சக்தி முழுவதையும் பயன்படுத்தி என் கூற்றுக்குச் சில ஆதாரங்கள் தருவேன். ஏசுநாதரை அணுகி கடவுள் இருக்கிறாரா என்று நீங்கள் கேட்டிருந்தால் இருக்கிறார் என்று அவர் விடைகொடுத்து இருப்பார். இருக்கிறார் என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டிருந்தால் இதோ பாருங்கள் கடவுள் என்று காட்டி இருப்பார். அவர் கடவுளை நேரிடையாகப் பார்த்துக் கடவுளைப் பற்றிய அறிவைப் பெற்றிருந்தார். அவர் தரும் விளக்கத்தில் இருள் அல்லது அறியாமைக்கு இடமில்லை. நேரில் கண்ட உறுதிப்பாடு அங்கு இருந்தது. நான் இந்த மேஜையைப் பார்க்கிறேன். எந்தவிதமான அறிவைக் கொண்டும் நான் மேஜையைப் பார்க்கின்ற நம்பிக்கையைக் கெடுத்துவிட முடியாது. நான் மேஜையைப் பார்ப்பது என் கண்களைக் கொண்டு நான் பெறுகின்ற நேரிடை அனுபவமாகும். அத்தகைய அனுபவ நம்பிக்கை அம்மகான்களுடைய கருத்துக்களிலும், லட்சியங்களிலும், அவற்றுக்கெல்லாம் மேலாகத் தங்களிடத்திலும் உறுதி பெற்றதாக இருந்தது. அந்த ஞானாசாரியர்கள் தன்னம்பிக்கை படைத்தவர்களாக இருந்தார்கள். அவர்களைப் போன்ற தன்னம்பிக்கையுடையவர்கள் யாருமில்லை. "உங்களுக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கையுண்டா? உங்களுடைய மறுபிறவியில் நம்பிக்கையுண்டா? இந்தக் கொள்கை கோட்பாடுகளில் நம்பிக்கையிருக்கிறதா?" என்றெல்லாம் மக்கள் கேட்பார்கள். தன்னம்பிக்கை இல்லாததால் அத்தகைய வினாக்கள் எல்லாம் எழுகின்றன. தன்னிடத்தில் நம்பிக்கை இல்லாதவனுக்கு வேறு எவரிடத்தில் தான் நம்பிக்கை வரப்போகிறது! என்னுடைய இருப்பைப்பற்றி எனக்கே நிச்சய புத்தி இல்லை. நான் இருக்கிறேன். என்னையாரும் அழித்துவிட முடியாது என்று ஒரு கணம் நினைக்கின்றேன். மறுகணமோ மரணபயத்தால் நடுக்கம் அடைகின்றேன். நான் அழிவற்றவன் என்று ஒரு கணம் நினைக்கின்றேன். மறுகணம் அச்சம் என்னும் பேய் தோன்றுகிறபொழுது நான் யார் என்பதை அறியாதவனாக, நான் எங்கே இருக்கிறேன் என்பதை உணராதவனாக இருக்கிறேன். நான் உயிரோடு வாழ்ந்திருக்கின்றேனா அல்லது அழிந்து போனேனா என்பதை அறியாதவனாக இருக்கின்றேன். ஒரு கணம் நான் ஆத்ம சொரூபம் என்றும், ஒழுக்கம் நிறைந்தவன் என்றும் உணர்கின்றேன். அடுத்த கணம் ஒரு பெருந்தாக்குதல் வருகிறது. நான் தூக்கி எறியப்படுபவனாகின்றேன். இவை எல்லாம் ஏன் என்று தெரியுமா? தன்னம்பிக்கையும் வாழ்க்கைக்கு முதுகெலும்பு போன்றிருக்கின்ற ஒழுக்கமும் என்னிடத்தில் இல்லாமையே அவற்றுக்குக் காரணமாகும்.

அப்பேராசிரியர்களிடத்தில் தன்னம்பிக்கையும், ஒழுக்கத்தையும் காண்கின்றோம். அவர்கள் தங்களிடத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவர்கள் எத்தகைய தன்னம்பிக்கை உடையவர்களாக இருந்தார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியாது. அவர்கள் தங்களைப்பற்றிச் சொல்லியுள்ள கருத்துக்களுக்கு எத்தனையோ விதமான விளக்கங்கள் தர முயலுகின்றோம். அவர்கள் அனுபவத்தில் கண்டவற்றை நமக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அனுபவத்தை விளக்குவதற்கு ஆயிரக் கணக்கான கொள்கைகளை நாம் உருவாக்குகின்றோம். அப்பெரியோர்கள் சிந்தித்த வண்ணம் நம்மால் சிந்திக்க முடிவதில்லை. ஆகையால் நாம் அவர்களை அறிந்துகொள்ள முடிவதில்லை. (தொடரும்)



சுவாமி விவேகானந்தர்

ராம ராஜ்யம்

உலகிலுள்ள சமுதாயங்களுள் மிகமிகப் பழையவைகளுள் ஒன்று நமது ஹிந்து சமுதாயம். பல்லாயிரம் ஆண்டுகளாக இச்சமுதாயம் சீரிய முறையில் வாழ்ந்து வந்திருக்கிறது. இடையிடையே க்ஷீணதசையையும் இது கண்டுள்ளது. ஆயினும் எகிப்து, பாபிலோனியா போன்ற சமுதாயங்கள் அழிந்தது போன்று இது அழிந்துபட்டுப்போகவில்லை. தொன்மைக்கிடையில் இளமை இதனிடத்து யாண்டும் பொலிகிறது. இதனிடத்துள்ள உள்வலிவை இதன் மூலம் இது நன்கு நிரூபிக்கிறது.

கடந்த நானூறு அல்லது ஐந்நூறு வருஷங்களாக ஹிந்து சமுதாயம் இஸ்லாமிய ஆட்சிக்கும், ஆங்கில ஆட்சிக்கும் அடிமைப்பட்டிருந்தது. ஆங்கில ஆட்சியினின்று விடுதலையடைந்தானவுடனே இந்தச் சமுதாயம் தனக்காக வென்று ஆட்சிமுறை ஒன்றை நிர்மாணித்து அதை நடைமுறையில் கொண்டுவந்துள்ளது. சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஆட்சிமுறை அமைக்கப்பெற்றது. ஆனால் அந்த ஆட்சிமுறை பழைய ஐதிகத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. வனத்தினுள் பாய்கின்ற நதி ஒன்று நெடுந்தூரத்துக்குக் கட்புலனாகாதிருக்கலாம். ஆயினும் உற்பத்தி ஸ்தானத்தினின்று சங்கம ஸ்தானம் வரை ஒரு நதிக்குள்ள தொடர்வை மாற்றவோ, புறக்கணிக்கவோ யாருக்கும் இயலாது. நதியின் தொடர்வை அங்கீகரிப்பது முற்றிலும் அவசியம். அதேவிதத்தில் ஒரு நாட்டு மக்களுடைய நெடுநாளைய வாழ்க்கை முறையைப் புறக்கணிக்கவோ, மாற்றவோ முடியாது. மாற்ற முயன்றால் அது குழப்பத்தில் கொண்டு சேர்க்கும். இப்பொழுதுள்ள புதிய ஆட்சிமுறை அமலுக்கு வந்தது முதற்கொண்டு நாடெங்கும் க்ஷீணதசை பரவி வருகிறது. மக்களுக்கிடையில் பிணக்கும், போட்டியும், பொறாமையும், பிளவும் அதிவேகம் வளர்ந்து வருகின்றன. தக்க காரணமில்லாது இத்தகைய க்ஷீணதசை தலையெடுக்க முடியாது. பல்லாயிரம் ஆண்டுகளாக அமைதியாக நிலவி வந்த சமுதாய வாழ்வு இன்றைக்கு நிலைகுலைந்திருக்கிறதென்றால் ஆட்சி முறையிலுள்ள சீர்கேடே அதற்குக் காரணமாகும்.

நம் நாட்டுக்கென்றே அமைந்துள்ள ஆட்சி முறைக்கு ராம ராஜ்யம் என்பது பொதுப் பெயர். தசரத ராமனுடைய காலத்தில் ஆட்சி முறையானது தலைசிறந்த நிலையிலிருந்ததனால் மேலான ஆட்சி முறைக்கு ராம ராஜ்யம் என்ற பெயர் வந்துள்ளது. இந்த நாட்டில் அரசர்கள் அடிக்கடி மாறியமைந்து வந்துள்ளார்கள். அதனால் சமுதாய வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. அமைதியாக அது தன்போக்கில் இனிது நடைபெற்றுவந்தது. அடிப்படையாயுள்ள உள்வலிவே அதற்குக் காரணமாயிற்று.

சீரிய முறையிலுள்ள இந்திய சமுதாய அமைப்புக்கு வர்ணதர்மம் என்பது பெயர். வாழ்க்கையின் மேலான கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டிருப்பதே வர்ணதர்மம் எனப்படுகிறது. உலகில் உயிர் வகைகளுக்கிடையில் வாழ்வு மூன்று படித்தரங்களில் நடைபெற்று வருகிறது. கீழ் நிலையிலுள்ள உயிர்கள் சதா போட்டி போட்டுக்கொண்டு இருக்கின்றன. ஒன்றை யொன்று மீளவும் அடக்கி ஆளவும் அழிக்கவும் செய்கிற முயற்சிகள் போட்டி எனப் பெயர் பெறுகிறது. மக்களுக்கிடையில் ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தை ஒறுக்கவும், ஒடுக்கவும் செய்வதை உலகெங்கும் காணலாம். இந்தியாவில் அத்தகைய விலங்குநிலை மானுட சமுதாயத்துக்குள் நுழையவில்லை. அவரவர் பரிபாகத்திற்கேற்பசமுதாயவாழ்க்கையைப் பரஸ்பர உதவி புரிந்து நடாத்தி வந்தார்கள். போட்டி போடுவது Competition, பரஸ்பர உதவி புரிவது Co-operation. இதற்கு மேலாக பண்பட்டுள்ள சான்றோர்கள் சமுதாயத்தினின்று விலகியிருந்து தங்களுடைய அறிவையும் பண்பாட்டையும் சமுதாய நலனுக்கென்றே பயன்படுத்தி வந்தார்கள். இந்த ஏற்பாட்டுக்கே வர்ணதர்மம் என்று பெயர். வர்ணதர்மத்தில் போட்டிக்குச் சிறிதேனும் இடமில்லை. உடலிலுள்ள உறுப்புக்கள் ஒன்றோடொன்று ஒத்துழைப்பது போன்று சமுதாய மக்கள் பொது நலனுக்கென்றே அவரவர்க்குற்ற கடமைகளை நிறைவேற்றி வந்தனர். அதற்குமேல் பண்பட்ட

நிலையிலிருந்த அந்தணர்களும், அரசர்களும் தங்களுடையபூலோகஜீவிதத்தைப் பொதுமக்களுடைய நலனுக்கென்றே ஒப்படைத்திருந்தனர். இச்செயல் ஆங்கிலத்தில் Self dedication என்னும் பெயர் பெறுகிறது. நாட்டுக்குரிய ஐதிகத்தின்படி இவ்வரிய செயல் யக்ஞம் என்றும் வேள்வி என்றும் பெயர் பெறுகிறது. இதை பழையமுறையில் மீண்டும் விளக்குவோம். சமுதாயத்துக்குப் பயன்படுகிற உடல் உழைப்பை மட்டும் தரக்கூடியவர்களாயிருந்தவர்கள் சூத்திரர்கள் எனப்பட்டார்கள். சமுதாயத்தில் அவர்கள் நான்காம் இடம் பெற்றூர்கள். நவீன மொழியில் அவர்களை Labour class உழைப்பாளிகள் என்று இயம்பலாம். போட்டியில்லாது அவர்களுடைய உழைப்பு சமுதாய நலனுக்காகவென்று இனிது நடைபெற்று வந்தது. இந்த வகுப்புக்கு ஒருபடி மேலே இருக்கிறவர்கள் வைசியர்கள் என இயம்பப் பெற்றனர். கிருஷி, கால்நடை அபிவிருத்தி, வாணிபம், நானாவிதத் தொழிற்சாலைகள் வாயிலாக நாட்டின் செல்வத்தை இக்கூட்டத்தார் வளர்த்து வந்தார்கள். இதற்கு மேல்படியில் இருந்தவர்கள் இத்தகைய பொருளாதார அபிவிருத்திக்கிடையில் நாட்டாண்மைக்காரர்கள் எனப் பெயர் பெற்றனர். க்ஷத்திரிய வர்ணம் என்பது அக்கூட்டத்தாருக்கு அமைந்துள்ள பரிபாஷையாகும். நாட்டாண்மைக்காரர்களுக்கு மேலே இருந்தவர்கள் அந்தணர் என்னும் பெயர் பெற்றனர். அவர்கள் பொருள் சம்பாதிப்பதில்லை. அருள் நாட்டத்திலும், பண்பாட்டிலும், கலைகளிலுமே அவர்கள் தங்கள் வாழ்நாளைக் கழித்து வந்தனர். அன்னவர்கள் பிராம்மணர் என்னும் பெயர் பெற்றூர்கள். சமுதாய அமைப்பில் மேல்நிலைக்குப் போகப் போகப் பொறுப்பு அதிகம். சுக ஜீவனத்துக்கேற்ற சலுகைகளும் வசதிகளும் மிகக்குறைவு. கீழ்நிலைக்கு வரவரப் பொறுப்பு குறைந்திருந்தது. பொருளாதார வசதிகள் வேண்டியவாறு அமைக்கப் பெற்றிருந்தன. இந்த ஏற்பாட்டின்படி Self dedication அல்லது ஆத்ம சமர்ப்பணம் முதல் ஸ்தானம் பெற்றது. தர்மத்தோடு கூடிய ஆட்சிமுறை இரண்டாவது ஸ்தானம் பெற்றது. தர்மத்திலிருந்து பிசகாதிருந்துநாட்டின்செல்வத்தைவளர்க்கவும் அதை மக்களுக்கிடையில்முறையாகவழங்கவும் செய்துவந்த செயல் மூன்றுவது ஸ்தானம் பெற்றது. உடல் உழைப்பைமட்டும் பொதுநலனுக்காகக் கொடுக்கக்கூடியவர்களாயிருந்தவர்கள் நான்காவது ஸ்தானம் பெற்றூர்கள். இந்த ஏற்பாட்டின்படி போட்டிக்கும் சண்டை சச்சரவுக்கும் இடமில்லை. அமைதியாக மக்கள் பரஸ்பர உதவி புரிந்துகொண்டு இகலோக வாழ்க்கையிலுள்ள நலன்களை எல்லார்க்கும் பொதுவுடைமையாக்கி வந்தார்கள். இவை யாவுக்கும் மேலாக அந்தணர் ஸ்தானத்திலிருந்தவர்கள் மக்களுக்கிடையில் கைம்மாறு கருதாது அருளையும், பண்பையும், கலைகளையும் வழங்கி வந்தனர். சுருங்கச்சொல்லின் அரச ஸ்தானத்தைப் பெற்றிருந்தவர்கள் அந்தணர்களிடமிருந்து அருளையும், வைசியர்களிடமிருந்து பொருளையும் முறையாக ஏற்று அவை இரண்டையும் சமுதாய நலனுக்கு வழங்கி வந்தார்கள். இந்த ஏற்பாட்டுக்கு வர்ண தர்மம் என்று பெயர். நவீன மொழியில் இது Welfare state என்னும் பெயர் பெறுகிறது. இந்த ஏற்பாட்டின்படி பொருள் ஈட்டிப் பாதுகாத்து வைத்தவர் வைசியர். ஆனல் அதைப் பொது நலனுக்காகப் பாதுகாத்து வைத்தது அவர்களுடைய ஸ்வதர்மமாகும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக நமது சமுதாயத்தில் இருந்துவந்த ஆட்சிமுறையானது முற்றிலும் பொருத்தமாக இருந்ததால் அரசியல் பிரச்னைகள் நம் நாட்டில் இதுகாறும் கிளம்பவில்லை. பொருத்தமான உணவைஅளவெடுத்து உண்டால் அது உடலில் அமைதியாக இடம் பெற்றுச் செமித்து வருகிறது. பொருந்தாத கரடுமுரடான உணவை உட்கொண்டால் அது சதா உறுத்திக்கொண்டிருக்கும். கடந்த முப்பது வருஷங்களாக நம் நாட்டில் அரசியல் பிரச்னைகள் மேலும் மேலும் சிக்கலானவைகளாக வடிவெடுத்து வருகின்றன. நமக்குப் பொருந்தாத ஆட்சிமுறையை வலிய இழுத்துப் போட்டுக்கொண்டு நாம் திண்டாடுகிறோம். இந்த நோயை உள்ளபடி அறிந்து இதை அகற்றுவோமானல் பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் அனுபவித்து வந்த அமைதியான வாழ்க்கைக்கு மீண்டும் திரும்பிப் போவது திண்ணம்.

(தொடரும்)

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-102

623. केवला கேவலா — கேவலம் அல்லது தன்னில்தானய் இருப்பவள் என்பது இதன் பொருள்.

பிரகிருதியில் சம்பந்தப்பட்டு பிரகிருதிமயமாகத் தன்னை விளக்கிக்கொண்டிருக்கும் நிலையில் ஆத்ம சைதன்யம் உள்ளது. பிரகிருதியோடு சம்பந்தப்படாது தன்னில் தானயிருக்கின்ற பாங்கும் ஆத்மசொரூபத்துக்கு உரியது. பிரகிருதியில் ஊடுருவிப் பாய்ந்திருக்கிற பொழுது திரிகுண பேதங்களால் வருகின்ற விபூதிகளெல்லாம் ஆத்ம சைதன்யத்துக்கு உரியவைகளாகத் தென்படுகின்றன. அந்நிலையில் நிகழ்கின்ற கிருத்தியங்களெல்லாம் ஆத்ம சைதன்யத்துக்குரிய தர்மங்கள் எனவும் கருதப்படுகின்றன. குணங்களைத் தன்பால் ஒடுக்கி ஆத்ம சைதன்யம் தன்னில் தானயிருக்கிறபொழுது அதனிடத்தில் எந்த விகாரமும் இல்லை. விபூதிகளெல்லாம் மறைந்துபட்டுப் போகின்றன. குண அதீத நிலை கர்ம அதீத நிலையாக இருப்பதால் எந்தவிதமான கர்மமும் நிகழுவதற்கு ஆங்கு இடமில்லை. அது சுத்த சைதன்யம். அகண்டமாய், ஏகமாய் அது உளது. அதற்குப் புறம்பாக ஒன்றுமே இல்லை. அது அத்வைத வஸ்து. இதுவே கேவலா என்பதின் பொருளாகும். ஆத்ம சாதகன் கேவலத்தில் தன்னை ஒடுக்குவது சாதனத்தின் குறிக்கோளாகும். ஆதலால் அம்பிகையைக் கேவலாவாகப் பாவித்து உபாசிப்பதற்கு ஏற்ப ஆத்ம சாதகன் சாதனத்தில் விரைந்து மேல் நோக்கிப் போகிருன்.

624. गुह्या குஹ்யா — ஹிருதய குகையில் இரகசியமாக மறைந்திருப்பவள் என்பது இதன் பொருள்.

அன்னை பராசக்தி என்ன பாங்கில் வீற்றிருக்கிருள் என்பதை ஓர் உபமானக் கதையின் வாயிலாகப் பரமஹம்சதேவர் விளக்குகிருர். மேல் குலத்து மாது ஒருத்தி தன் இல்லத்தின் அந்தப்புரத்தில் அமர்ந்திருக்கிருள். அதன் முகப்பில் மூங்கில் தட்டிகள் மாட்டப்பெற்றிருக்கின்றன. அத்தட்டிகளுக்கு உட்புறத்திலிருந்துகொண்டு வெளிப்புறத்திலிருப்பவைகளையெல்லாம் அவள் பார்க்கிருள். ஆனல் வெளிப்புறத்திலுள்ள யாருமே உட்புறத்திலிருக்கும் அவ்வம்மையைக் காணமுடியாது.

வேதாந்தக் கோட்பாட்டில் த்ருக், த்ருசியம் என்னும் இரண்டு தத்துவங்கள் உள. காண்போன், காணப்படு பொருள் என்பன அத்தத்துவங்களுக்கு விளக்கங்களாகும். காண்போனுடைய காட்சிக்குக் காணப்படுபொருள்களெல்லாம் இலக்கு ஆகின்றன. ஆனல் காண்போன் ஒருபொழுதும் காணப்படுபவன் ஆவதில்லை. ஆகையால் ஆத்ம சொரூபம் குஹ்யமாயிருக்கிறது. இரகசியமாயிருக்கிறது என்றும், காட்சிக்கு எட்டாததாயிருக்கிறது என்றும் குஹ்யா என்னும் நாமம் பொருள்படுகிறது.

குஹ்யானம் மௌன சாஸ்மி என்பது பகவானுடைய வாக்கு. வாய் விட்டுச் சொல்லாது உள்ளத்துக்குள்ளேயே புதைந்திருப்பது மௌனம். ஆகையினல் அது இரகசியம். தன்னைத்தவிர அதை அறிந்துகொள்ளுதற்கு இரண்டாவது மூர்த்தியில்லை. உலக வியவகாரங்கள் யார் யாரோ காதுகளுக்கு எட்டுகின்றன. ஆகையினல் அவைகள் குஹ்யங்கள் அல்ல, இரகசியங்கள் ஆகமாட்டா. சுத்த சைதன்யம் ஒன்றே குஹ்யமாகவும் இரகசியமாகவும் இருக்கிறது. அதன்கண் சலனம் ஏதும் இல்லை. சலனம் இல்லாததால் ஆங்கு ஓசை உண்டாவதில்லை. எங்கு ஓசையில்லையோ அங்கு மௌனம் நிலவுகிறது. அப்பெரு நிலையைத்தான் சிவபெருமான் தக்ஷிணா மூர்த்தியாயிருந்து மௌனத்தின் வாயிலாக விளக்குகிருர். ஆக மௌனத்திலிருப்பது தன்னில் தானய் திளைத்திருப்பதாகும். சுத்த சைதன்யத்தில் தன்மயமாயிருப்பது நல்ல ஆத்ம சாதனமாகிறது.

625. कैवल्यपददायिनी கைவல்யபததாயினீ — கைவல்ய என்னும் பெருநிலத்தையும் அதை அடைதற்கு முன்பு அமைந்துள்ள பதவி முக்திகளையும் உபாசகர்களுக்கு வழங்குபவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

522 ஆம் நாமம் பீஜ மந்த்ரமாக அமைந்திருக்கிறது. ஆதலால் அந்த நாமத்தின் உட்பொருள் சிவகாமேஸ்வரன், சிவகாமேஸ்வரி ஆகிய சிவ சக்தியைக் குறிக்கிறது. பதவி

முக்திகள்யாவும்இதில் அடங்கி இருக்கின்றன. அதற்குமேல் சகுண பிரம்மம், நிர்க்குண பிரம்மம் ஆகிய பரவஸ்துவில் இரண்டு கூறுகளும் இதில் அடங்கியிருக்கின்றன. சகுண பிரம்மமாயிருப்பது தன்னுடைய மகிமைகளையெல்லாம் தூய அறிவுக்கு எட்டும்படி செய்வதால் உபாசனைக்கு அந்தச் சொரூபம் முற்றிலும் பொருத்தமானது. பின்பு நிர்க்குண பிரம்மமோ கேவலவஸ்து. விளங்கங்களுக்கு ஆங்கு இடமில்லை. ஒரு மட்டமான பொருளையும் கேவலமானது எனக் கூறுவது உலக நடைமுறையாகும். அந்த ஒரு பொருளுக்குப் பஞ்சம் இல்லாமையினால் அது கேவலவஸ்து. சகுண பிரம்மம் கூட ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்தில் மறைந்துபட்டுப்போகிறது. நிர்க்குண பிரம்மமோ யாண்டும் யாவர்க்கும் உரியதாயிருப்பதால் அதைக் கேவலம் என உலகத்தவர் கூறுகின்றனர்.

இப்பரவஸ்துவை க்ளீம் என்னும் காம பீஜத்தை ஓதி வணங்குகின்றவர்கள் தர்மம், அர்த்தம், காமம், பதவி முக்திகள் ஆகியவைகளைப் பெறுகிறார்கள். ஆனால் இந்த மந்த்ரம் பிறவிப் பெருங்கடலினின்று ஆத்ம சாதகன் ஒருவன் தன்னை விடுவித்துக் கொள்வதற்கு உதவமாட்டாது. சம்சார சாகரத்தினின்று விடுதலை அடைவதற்குக் காமக்கலையை உயர் நிலைக்கு உயர்த்துதல் வேண்டும். அந்த உயர் நிலையில் சிவமும், சக்தியும் அபேதமாகின்றனர். அதாவது சிவத்தையும், சக்தியையும் இரண்டு மூர்த்திகளாகப் பாகுபடுத்த முடியாது. இக்கோட்பாடு 623 வது நாமத்திலும் 624 வது நாமத்திலும் அடங்கியிருக்கிறது. பிறகு 625 எண்ணுடைய இந்த நாமத்தில் பொருள் மிகப் புதைந்திருக்கிறது. பததாயினீ என்னும் பகுதி வெவ்வேறு படித்தரங்களிலிருக்கின்ற பதவிகளைத் தருபவள் எனப் பொருள்படுகிறது. அப்பதவிகள் யாவும் பூலோகத்தில் நாம் அனுபவித்து வரும் நல்ல நிலைக்கும் மேலானவைகளாம். பூலோக வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்குமிடத்து பண்பட்டுள்ள மக்கள் இவ்வுலக வாழ்க்கையை மேலானதாக மாற்றியமைக்க வல்லவர்களாகின்றனர். இனி அம்பிகையின் உபாசனையினால் இதைவிட மேலான நிலைகளையும் பெறுவது சாத்தியமாகிறது.

கைவல்யத்தை நல்குபவன் பரமசிவன் ஒருவனே என்பது ஒரு கோட்பாடு. அந்நிலையைப் பராசக்தி கொடுத்தருள்கின்றாள் என்னும் கோட்பாட்டில் முரண்பாடு ஏதுமில்லை. ஏனென்றால் சைவ சித்தாந்தத்தின்படியும், சாக்த மதத்தின்படியும் சிவத்துக்கும், சக்திக்குமிடையில் எந்தவிதமான வேற்றுமையுமில்லை. சிவமும், அவன் படைத்துள்ள சக்தியும் ஒன்றேயாம்.

பதத்தை நல்குகிறவள் என்னும் கோட்பாட்டில் பதத்தினுடைய நான்கு பகுதிகளும் அடக்கப்பட்டிருக்கின்றன. அந்த நான்கு பதவிகளுக்கு முறையே சாலோக்யம், சாமீப்யம், சாரூப்யம், சாயுஜ்யம் எனப்பெயர்கள் வந்துள்ளன. இந்த நான்குக்கும் மேலே இருப்பது கைவல்யம். ஜீவனொருவன் அடைகிற முக்திகளுள் கைவல்ய முக்தியே முடிந்த நிலையாகிறது. வேதாந்தக் கோட்பாட்டின்படி ஜீவன் பரபிரம்மத்தில் ஒன்றுபடுகிறான். சைவ சமயத்தின்படி ஜீவன் பரமசிவத்தில் ஒன்றுபடுகிறான். அப்படி ஒன்றுபடுவதின் விளைவாக ஜீவாத்மன் சம்சாரசாகரத்தைத் தாண்டியவன் ஆகிறான். பின்பு அவனுக்குப் பிறப்பு, இறப்பு முதலியன இல்லை. கைவல்யத்துக்குச் சற்றுக் கீழே இருப்பவைகள் பாக்கி நான்கு பதவிகளாம். புறத்திலே அமைக்கப் பெற்றுள்ள பிரதீகா என்னும் சின்னங்களின் வாயிலாகப் பாஹ்ய பூஜையில் ஆழ்ந்து மூழ்கியிருக்கும் ஆத்ம சாதகன் சாலோக்யம் என்னும் முதல்படியை அடைகிறான். அம்பிகைக்குரிய அந்த லோகத்தில் வசித்திருப்பவன் என்பது அதன் பொருள். அந்த லோகத்தில் வசித்திருப்பதால் அம்பிகையின் அருளுக்கு அவன் பாத்திரமாகிறான். அவனுடைய நல்ல ஆசைகளெல்லாம் நிறைவேறப் பெறுகின்றன. உபாசனை வலுத்து வருகிறபொழுது உபாசகன் அதற்கு மேலே உள்ள பதமாகிய சாரூப்யத்தை அடைகிறான். தெய்வத்துக்குரிய அதே வடிவத்தைச் சாதகன்எடுத்துக்கொள்ளுகிறான் என்பது அதன் பொருள். உள்ளத்தினுள்ளே தன் வடிவமும், தான் வழிபடுகிற தெய்வத்தின் வடிவமும் ஒன்றே என்னும் ஞானஅனுபவம் அவனுக்கு வருகிறது. அவன்

அடைகிற மூன்ருவது பதவி சாமீப்யம் என்பதாம். அகத்தில் ஆனுலும் சரி, புறத்தில் ஆனுலும் சரி தான் வழிபடு தெய்வமாகிய அன்னை பராசக்திக்குச் சமீபத்தில் இருப்பதாகச் சாதகன் உணருகிருன். வடிவத்தில் ஒன்றுபட்டாயிற்று. மிகச் சமீபத்திலும் வந்தாயிற்று. ஆயினும் தனக்கும், தன் வழிபடு தெய்வத்துக்குமிடையில் சிறிது வித்தியாசம் இருக்கிறது என்பதைச் சாதகன் உணருகிருன். இந்த நிலைக்குச் சார்ஸ்ட்டி என்பது பரிபாஷையாம். இந்நிலையில் பாஹிய பூஜை பெரிதும் நின்று போகிறது. மானஸ பூஜையே சர்வகாலமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. உபாசகனுக்கும் அம்பிகைக்குமிடையில் ஒற்றுமைகள் பல அமைந்திருப்பதற்கிடையில் ஆற்றலிலும் ஆதிக்கத்திலும் உபாசகன் அம்பிகைக்கு நிகராக மாட்டான் என்பதை அவன் உணருகிருன். இப்பெரு நிலையை எட்டுவதற்குச் சாதகன் ஒருவன் ஊர்த்துவரேதஸ் ஆகவேண்டும். நைஷ்டிக பிரம்மச்சரியாக அவன் இருக்க வேண்டும் என்பது பொருள். நைஷ்டிக பிரம்மச்சரிக்கு விந்துவானது கீழ்நோக்கி இறங்குவதில்லை. சஹஸ்ராரத்தின்கண் மேல் நோக்கியே அது போய்க்கொண்டிருக்கிறதுஎன்பது கோட்பாடு. நான்காவது பதவியாகிய சாயுஜ்யத்தில் உபாசகனும், உபாசன மூர்த்தியும் ஐக்கிய நிலையை எய்துகின்றனர். இந்நிலையில் 'நான்' என்னும் சொல் ஜீவாத்மனைக் குறிப்பதில்லை. அது பரவஸ்துவையே குறிக்கிறது. சகுண பிரம்மத்தில் சாதகன் ஒன்றுபட்டிருக்கும் நிலை இதுவேயாம். உபநிஷதங்கள் பகருகிற பிரம்மலோகம் என்பதுவும் இதுவே. சாதனவகைகளை முறையாக அனுஷ்டிப்பதின் விளைவாக இந்த நான்கு பதங்களும் அடையப் பெறுகின்றன. சத்கர்மங்களின் விளைவாக இவைகள் வாய்த்திருப்பதால் இவைகளுக்குப் பதவி முக்தி என்னும் பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. கர்மத்துக்கு ஆதி அந்தமுண்டு. கர்மாதீதத்துக்குப் போகிறவன் கைவல்யமுக்தியடைகின்ருன். அது அவனுடைய யதார்த்த நிலை. தேடி சம்பாதிக்கப்பட்ட நிலையன்று அது. சுத்த சைதன்யம் தன்னில் தானுய் திகழ்ந்துகொண்டிருப்பது கைவல்ய முக்தி எனப்படுகிறது.

626. **த்ரிபுரா** த்ரிபுரா—முப்புரங்களுக்கு அதிபதியாயிருப்பவள் என்பது இதன் பொருள்.

சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய மூன்று கிருத்தியங்களுக்கு அதிஷ்டான தெய்வங்களாகப் பிரம்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய மும்மூர்த்திகள் இருக்கிருர்கள். கிருத்திய கர்த்தாக்களாக அம்மூவரும் இருக்கிருர்கள். அன்னவர்களுக்கு அதிபதியாகவும், அப்பாற்பட்டவளாகவும் அம்பிகை இருக்கிருள். ஆதலால் அவள் திரிபுரா என்னும் நாமத்தைப் பெற்றுள்ளாள். சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் மயமாய் இப்பிரபஞ்சம் இலங்குகிறது. சத்வகுணத்தின் சாந்நித்தியத்தால் உயிர் வகைகள் உருவெடுக்கின்றன. ரஜோகுணத்தின் பலப்பல பாங்குகளாக இயற்கையின்கண்ணுள்ள நிகழ்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. தமோகுணத்தின் விளைவாக ஜடமயமாயுள்ள அண்டகோடிகளனைத்தும் உருவெடுத்திருக்கின்றன. அன்னை பராசக்தியோ இந்த முக்குணங்களில் கட்டுண்ணுதவள். குணுதீத நிலையில் அவளுடைய மகிமை மிளிர்ந்துகொண்டிருக்கிறது. மும்மை மயமாகப் பிரபஞ்சத்தில் பல அமைந்திருக்கின்றன. அந்தக்கரண அமைப்பில் மனம், புத்தி, அகங்காரம் என்னும் மும்மை இடம் பெற்றுள்ளன. அத்தகைய மும்மைகளுக்கு அப்பாற்பட்டவளாக அம்பிகை இருப்பதால் அவள் திரிபுரா என்னும் பெயர் பெற்றுள்ளாள். பிராணனுடைய போக்குவரத்தால் பிராணிகள் உயிர் வாழ்ந்திருக்கின்றன. பிராணனுடைய போக்கு வரத்தானது இட, பிங்கள, சுஷும்ன என்னும் மூன்று கூறுகள் உடையவைகளாக இருக்கின்றன. அம்மூன்று கூறுகளுக்கும் அப்பாற்பட்டவளாக அம்பிகை இருப்பதால் அவள் திரிபுரா என்னும் நாமம் பெற்றுள்ளாள். பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம் ஆகிய மூன்று உலகங்கள்மயமாக உயிர்வகைகளின் வாசஸ்தலங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்த மூன்று உலகங்களுக்கும் அப்பாற்பட்டவளாக அம்பிகை இருக்கிருள். ஆதலால் அவள் திரிபுரா என்று போற்றப்படுகிருள்.

ஆத்ம ஞானம்

மெய்ப்பொருளை அறிவது மெய்ஞ்ஞானம் ஆகும். அறிவு எல்லா உயிர்களிடத்தும் இருக்கிறது. ஆனால் மெய்ப்பொருளை அறியும் ஞானம் ஒரு சில மனிதரிடம்தான் இருக்கிறது. மெய்ப்பொருளை அறியும் ஞானம் பெற்றவர்கள் ஞானிகள் ஆகிறார்கள். 'ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்' என்பது கோட்பாடு. மெய்ப்பொருளை அறியும் ஞானி இன்ப சொரூபி ஆகின்றான். உடல் அழியும் தன்மையுடையது என்பதை அறிந்து அழிகின்ற உடலைத் தான் என்று அகங்கரிக்காது, அழியாத ஆத்மசொரூபம் தான் என்று உணர்பவன் ஞானி ஆகின்றான். ஆத்ம சொரூபத்தைத் தான் என்று உணர்கின்ற ஞானி சாகாத்தன்மை எய்துகின்றான். ஆத்ம சொரூபத்தை அறிகின்ற ஞானியே மரணமிலாப் பெருவாழ்வு வாழ்கின்றான். மனம் இந்திரியங்களுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றபொழுது மெய்ஞ்ஞானம் உண்டாவதில்லை. இந்திரிய உணர்வைக் கடந்து மனம் உயர் நிலைக்குப் போகும்பொழுதுதான் மெய்ஞ்ஞானம் வாய்க்கின்றது. அத்தகைய மெய்ஞ்ஞானம் உண்டாவதற்கு முன்பு நாம் எதை அறிகிறோம் என்பதை ஆராய்வோம்.

உலகையும் உயிர்களையும் அறிந்துகொள்வதற்கு நம் அறிவு பயன்படுகிறது. அந்த அறிவைக்கொண்டு அறிகிறபொழுது கடவுள் நமக்கு எத்தகைய காட்சி உடையவராக இருக்கிறார் என்பது தெரியுமா? இந்த உலகாக நமக்கு அவர் காட்சிகொடுக்கிறார். மெய்ஞ்ஞானம் பெற்றவர்கள் உலகிலுள்ள வடிவங்களை யெல்லாம் ஈசுவர சொரூபமாகக் காண்கிறார்கள். நம் அறிவைத் தூண்டும் பேரறிவு இந்திரியங்களனைத்திலும் ஒளிர்ந்துகொண்டிருக்கிறது. இந்திரியங்கள் யாவையும் கடந்த நிலையில் சுயம்பிரகாசமுடையதாக இருக்கிறது. சினிமாத்திரை படங்களையெல்லாம் தாங்குவது போன்று சிதாகாசம் என்னும் பேரறிவுப் பெருவெளி உலகில் உள்ள அனைத்தையும் தாங்குகிறது. சினிமாப் படத்தில் காணும் விதவிதமான வர்ணங்கள் திரையினுடைய வர்ணங்கள் அல்ல. ஆனால் திரையோ வர்ணங்களை உள்ளபடி விளக்குகிறது. அங்ஙனம் பிரபஞ்சத்தினுடைய முக்குணங்கள் ஆத்மாவினுடையவையல்ல ஆயினும் அறிவு சொரூபமாகிய ஆத்மா குணங்களையெல்லாம் விளக்கவும் ரசிக்கவும் செய்கிறது.

கடவுளுடைய முழு நிலையை அறியும் அறிவு மெய்யறிவு ஆகின்றது. தீவிர அதிகாரிக்கே மெய்யறிவு இருக்கிறது. மந்த அதிகாரிகள் சூட்சுமத்தைவிளங்கிக்கொள்வதில்லை. ஸ்தூலப் பொருள்கள்தான் அவர்களுக்கு விளங்குகின்றன. கடலுக்குள் மிதக்கின்ற பனிக்கட்டியின் உள்ளும் புறமும் நீர் இருக்கின்றது. அங்ஙனம் உலகிலுள்ள எல்லாப் பொருள்களின் உள்ளும் புறமும் கடவுள் இருக்கின்றார். கடலின் மேல் பாகத்தில் அலை வீசிக்கொண்டிருக்கிறது. கடலின் ஆழ்பகுதி அசையாதிருக்கிறது. கடலின் மேல்பகுதியை நாம் அறிவோம். கடலின் ஆழ்பகுதியை நாம் அறிய முடிவதில்லை. குணங்களோடு கூடிய கடவுள் பிரகிருதி மயமாக இருக்கின்றார். குணம்போன இடத்து அவர் அசையாது இருக்கின்றார். அந்நிலையை அவருடைய பேரறிவு சொரூபம் எனலாம். மனபரிபாகம் ஆகாத மந்த அதிகாரிகள் அவருடைய அறிவு சொரூபத்தை அறியமுடியாது.

நம் உள்ளும் புறமும் அவர் இருப்பது நமக்குத் தெரிவதில்லை. அவர் எங்கேயோ இன்னொரு உலகத்தில் இருக்கிறார் என்று நாம் கற்பனை செய்து கொண்டிருக்கின்றோம். 'புறத்தார்க்குச் சேயோன்' என்று திருவாசகம் பகர்கிறது. நமக்குத் தெரியாத பொருள் மிக அண்மையில் இருந்தாலும் அது வெகு தூரத்தில் இருப்பதாகிறது. நம் உள்ளும் புறமும் கடவுள் இருப்பினும் நாம் அவரை அறியாததால் அவர் வெகுதூரத்தில் இருப்பவராகின்றார். அவரை ஏன் அறியமுடிவதில்லை என்னும் கேள்வி எழுகிறது. கத்தி மழுங்கிக் கிடந்தால் அது காரியத்துக்குப் பயன்படுவதில்லை. மழுங்கிக் கிடக்கின்ற கத்திக்கு நிகராக நம் மனதில் பந்தபாசம் என்னும் துரு ஏறிக்கிடக்கிறது. உலகப் பொருள்களையும் தேகசம்பந்தமான உணர்வுகளையும் எண்ணிப்

பார்ப்பதற்கு நம் மனது விழைகிறது. நுண்ணிய விஷயங்களை எண்ணிப் பார்க்க அதற்குச் சாத்தியமாவதில்லை. மனதில் உள்ள பந்த பாசம் என்னும் அழுக்கு நீங்குகின்ற அளவுக்குத் தான் கடவுள் சம்பந்தமான நுண்ணிய தத்துவங்களை ஆராயமுடிகிறது. விறகுக்கட்டை நெருப்பைச் சார்ந்து நெருப்பு மயமாவது போன்று மனம் பேரறிவைச் சாரும்பொழுது பேரறிவு மயமாகமாறுகின்றது. மனதில் உள்ள பந்தபாசத்தைத் துடைத்துத் தள்ளிவிட்டு அதைப் பரம்பொருள் உணர்வில் தோய்ந்து போகும்படி செய்ய முயலவேண்டும். பரம்பொருள் உணர்வு ஓங்கும் பொழுது எத்தகைய நுண்ணிய விஷயத்தையும் அறிவது எளிதாகின்றது.

ஆத்மஞானம் மிக நுண்ணியதாகும். ஆத்மீக உணர்வு எழுகின்ற பொழுது ஆத்மஞானம் பெறுவது சுலபம். மின்விளக்கு எரிகிறது. அதை நாம் கண்ணால் பார்க்கின்றோம். பல்பு எரிவது போல் இருக்கிறது. ஆனால் உண்மையில் மின்சக்திதான் வெளிச்சம் தருகிறது. மின்சக்தியை நாம் காணமுடிவதில்லை. ஆத்மா அனைத்தையும் ஆட்டிப்படைக்கின்றது. உயிர்களின் செயலை நாம் அறிகிறோம். அவைகளை ஆத்மாதான் இயக்குகின்றது என்பதை நாம் அறிந்துகொள்ளமுடிவதில்லை. பஞ்சபூதங்களுள் ஆகாசம் மற்ற நான்கு பூதங்களுக்கும் காரணமாகவிருக்கின்றது. ஆகாசத்திலிருந்துதான் மற்ற நான்கு பூதங்களும் வந்தன. பிரளய காலத்தில் அவை ஒடுங்கும்போது ஆகாயத்தில் ஒடுங்குகின்றன. ஆகாசம் நீக்கமற எங்கும் நிறைந்திருந்து மற்ற நான்கு பூதங்களையும் தாங்குவது போன்று ஆத்மா பிளவு படாததாகவிருந்து ஜகத், ஜீவன் ஆகிய அனைத்தையும் தாங்கி வருகின்றது. அலையானது கடலில் தோன்றி கடலில் நிலைத்திருந்து கடலில் ஒடுங்குவது போன்று இப்பிரபஞ்சப்பொருள்கள் யாவும் ஆத்மாவில் தோன்றி ஆத்மாவில் நிலைத்திருந்து ஆத்மாவில் மறைகின்றன.

அஞ்ஞானத்தில் நாம் அழுந்திக்கிடக்கின்றோம். உண்மையை உள்ளபடி அறியாதவர்களாக இருக்கின்றோம். ஆத்மஞானம் ஏற்படும் பொழுதுதான் நம்மை நாம் அறிந்து கொள்ள முடியும். ஆத்மஞானம் உடையவனுக்கு இருள் என்பது இல்லை. நலம் கேடு ஆகிய இரண்டும் ஆத்மஞானிக்கு இல்லை. இருளில் கயிறு பாம்பாகத் தென்பட்டு நம்மை மயக்குகிறது. தீபத்தின் துணைகொண்டு கயிற்றைக் கயிறாகக் காண்கின்ற பொழுது பாம்பைப்பற்றிய அச்சம் அகலுகின்றது. அக்ஞானம் கடவுள் சொரூபத்தை உலகமயமாகக் காட்டித் தருகின்றது. ஞானி கடவுளைக் கடவுளாகக் காண்கின்றபொழுது உலகம் அவரை மயக்குவதில்லை. உலகில் நாம் அனுபவிக்கின்ற இன்ப துன்பம் மயக்கக் காட்சியால் உண்டானவை. ஞானிக்கு அம்மயக்கக் காட்சி இல்லாததால் உலக இன்பமும் இல்லை, துன்பமும் இல்லை. 'ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும்' என்பது கோட்பாடு. ஆத்ம ஞானி தன்னில்தான் திருப்தி உடையவனாகவும் யாண்டும் ஆனந்த மயமாகவும் இருக்கின்றான்.

மனதைக் கட்டுப்படுத்துபவனே மகாயோகி ஆகின்றான். மனதைத் தன்வசம் வைத்திருக்கத்தெரிந்தவன் தன் விருப்பம்போல் மனதைக் கையாண்டு வருகின்றான். தன் முழு மனதையும் தெய்வத்தினிடத்துச் செலுத்துவது அவனுக்குச் சாத்தியமாகிறது. முழு மனதையும் தெய்வத்தினிடத்துச் செலுத்துகின்றபொழுது தெய்வத்தை அறிய வல்லவனாகின்றான். தெய்வத்தை அறிகின்றவன் தெய்வத்தின் சாந்நித்தியத்திலே இருக்க விரும்புகின்றான்: தேன் ஈ தேனைமட்டும் அருந்துவது போன்று ஆத்ம ஞானி கடவுளின்பத்தை மட்டும் அனுபவிக்கின்றான். கற்கண்டு கட்டி சுவைத்தவனுக்குக் கருப்பட்டி கட்டியில் தேட்டம் ஏற்படாதது போன்று ஆத்ம சுகத்தை அனுபவித்த ஞானிக்கு இந்திரிய சுகத்தில் தேட்டம் உண்டாவதில்லை. ஆத்ம ஞானி அனுபவிக்கும் ஆனந்தம் கேடில்லா ஆனந்தமாகிறது.

தாமரை இலை தண்ணீரில் இருந்தாலும் நீர் அதன்மீது ஒட்டுவதில்லை. சேற்றுமீன் சேற்றிலிருந்தாலும் சேறு அதன்மீது படிவதில்லை. அங்ஙனம் ஞானி பிரகிருதியில் இருந்தாலும், பிரகிருதியின் குணங்கள் அவனைக் கட்டுப்படுத்துவதில்லை. கால தேச வர்த்தமானத்தில் பிரகிருதி கட்டுண்டு கிடக்கிறது. முக்குணங்களில் பிரகிருதி கட்டுண்டுகிடக்கிறது. ஆத்ம ஞானியை இவையாவும் கட்டுப்படுத்துவ

தில்லை. பிரகிருதியோடு கட்டுண்டு கிடக்கின்ற ஜீவன் இந்திரியங்களை நம்பி வாழ்கின்றான். இந்திரியங்கள் மூலம் பிரகிருதியோடு மேலும் தொடர்வு வைத்துப்பந்தத்தை இன்னும் வலுப் படுத்துகின்றான். பிரகிருதியில் பந்தம் உண் டாகிற அளவு அது இன்ப துன்பமாக வடி வெடுத்து வருகிறது. இன்ப துன்பத்தின் மூலம் ஜீவன் பாடம் கற்று வருகின்றான். இறுதியில் மனதைப்பக்குவப்படுத்தி பிரகிருதி யினின்றும் தன்னை விலக்கிக்கொள்பவன் ஞானியாகின்றான். ஞானம் வந்த பிறகு பிர கிருதியில் அவன் இருந்தாலும் அதில் கட்டுப் படாதவனாக இருக்கின்றான்.

மயக்க நிலை, தெளிந்த நிலை ஆகிய இருநிலை கள் உண்டு. மயக்க நிலையில் உண்மைப் பொருளை நாம் காணமுடிவதில்லை. உண்மைப் பொருளின் விகாரத்தையே நாம் மயக்க நிலை யில் காண்கின்றோம். கண்ணாடியில் நம் பிம்பத் தையும், நீரில் சூரிய பிம்பத்தையும் காண் பது போன்று, காலதேச வர்த்தமானம் என் னும் கண்ணாடியில்தெய்வத்தின் பிம்பத்தையே காண்கின்றோம். கண்ணாடியில் நம் மேனியைப் பார்த்து நாம் ரசிக்கின்றோம். கண்ணாடியில் தென்படுகின்ற உடல் நமது நிஜ உடல் அன்று. அதேபோன்று நீரில் தென்படுகின்ற சூரியன் நிஜ சூரியன் அன்று. காலதேச வர்த்தமானத் தில் கட்டுப்பட்டுள்ளது மெய்ப்பொருளாகாது. பிரகிருதி அல்லது இயற்கை அல்லது மாயை என்று காலதேச வர்த்தமானத்தில் கட்டுண்ட பொருள் அழைக்கப்படுகின்றது. மெய்ப் பொருளை உள்ளபடி அறிவதற்கு ஆத்மஞானம் தேவை. ஆத்ம ஞானம் உண்டாகாதவர்கள் பிரகிருதியில் கட்டுண்டு கிடக்கிறார்கள். பிர கிருதியின் குணங்களெல்லாம் தங்களுக்கு உரி யன என்று மயங்கிக் கிடப்பவர்கள் அறிவிலி கள். இன்பதுன்ப மயமாய் பிரகிருதி இருக்கி றது. இன்பதுன்பங்களில் கட்டுண்டவர்களா கத் தங்களை எண்ணிக்கொள்பவர்கள் பிரகிருதி யின் குணநலன்களை ஏற்றவர் ஆகிறார்கள். கர் மேந்திரியங்கள், ஞானேந்திரியங்கள் மூலமா கப் பிரகிருதியோடு தங்களை மேலும் சம்பந்தப் படுத்திக்கொண்டு இன்ப துன்பத்தை வளர்த் துக் கொள்பவர்கள் ஆத்ம ஞானிகள் அல்லர். பிரகிருதியோடு வைக்கின்ற சம்பந்தம் இன்ப துன்பமயமாக அமையும்போது நாம் பாடம் கற்றுக்கொள்கின்றோம். பிரகிருதியில் இருந்து வருகின்ற இன்ப துன்பம் நம்மைப் பக்குவப் படுத்துகின்றன. பல ஜன்மங்கள் இன்ப துன் பத்தில் அடிபட்டுப் பக்குவமான பிறகு ஆத்ம ஞான நாட்டம் உண்டாகிறது.

பிரகிருதியில் கட்டுண்டு கிடப்பவன் பிரகிரு தியின் செயல்களெல்லாம் தன்னுடைய செயல் களாக அகங்கரிக்கின்றான். 'நான் இன்பம் துய்க்கின்றேன், நான் துன்பப்படுகின்றேன், நான் மயங்கி இருக்கின்றேன், நான் அறிவு டையவனாக இருக்கின்றேன்' என்பன போன்ற உணர்ச்சிகள் பிரகிருதியோடு கட் டுண்டு கிடப்பதால் உண்டாகின்றன. பிரகிரு தியினின்றும் பிரிந்திருக்கின்ற ஞானி இவை யாவற்றிலும் கட்டுப்படாது தன்னில் தான் ஆத்ம திருப்தி உடையவனாக இருக்கின்றான். குணப்பற்று பிறப்புக்கு வித்தாகிறது. மேலான குணம் படைத்தவன் தெய்வப் பிறப் பெடுக்கின்றான். கீழான குணத்தில் பற்றுடை யவன் விலங்கு போன்ற கீழ்ப்பிறவி எடுக்கின் றான். மேலான குணம், கீழான குணம் ஆகிய இரண்டும் கலந்த குணத்தில் பற்று வைப் பவன் சாதாரண மனிதனாகப் பிறக்கின்றான். இறைவன் திருவடியைக் காணும் ஆத்மஞானி பிறப்புக்களிலிருந்து விடுபட்டுப் பேரின்ப நிலையைப் பெறுகின்றான். ''மெய்யே உன் பொன்னடிகள், கண்டு இன்று வீடுற்றேன்'' என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பகர்ந்துள்ளார். அஞ்ஞானம் பிறப்புக்குக் காரணம். சுவாமி விவேகானந்தர் சென்னை யில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றில் மனி தன் படும் துன்பங்களுக்கெல்லாம் அஞ் ஞானமே காரணம் என்று குறிப்பிட்டிருக் கின்றார். அஞ்ஞானம் அகலுமளவு துன் பம் நீங்குகின்றது. துன்பத்தைத் துடைத்து இன்பநிலை அடைவதற்கு ஆத்மஞானம் பெறு வது அவசியமாகிறது. ஆத்ம ஞானம் பிறப்பை அறுத்து வீடுபேற்றை அளிக்கின்றது. ஆத்ம ஞானம் பெறுவதற்குமுன்பு நம்மிடமுள்ள அறி யாமை அகலுவதில்லை. ஆத்ம ஞானம் பெறு வது வாழ்வின் இலட்சியம்.

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (138) கடவுள் வழிபாடுமயமானது தமிழ் நாடு. கடவுள் வழிபாடு மூட நம்பிக்கை என்று கூறியவரைப் பெரியாராக ஏற்றுக் கொண்டது தமிழ் நாடு. அவர் வாக்கை ஆதாரமாகக்கொண்டு கடவுள் நம்பிக்கையைப் பழிக்கின்றார்களே! இதன் முடிவு என்ன ?

எல்லாவிதமான கொள்கைகளை உடைய மக்கள், உலகில் எக்காலத்திலும் வாழ்ந்திருப்பார்கள். ஒரே அச்சில் வார்த்தது போன்று ஒரே விதக்கொள்கை சமுதாயமெங்கும் நிலைபெற்றிருப்பதை எப்பொழுதுமே காண முடியாது. இனி, கடவுள் கட்புலனாகாத வஸ்து. கடவுளைப் பற்றிய விளக்கங்களோ எண்ணிக்கையில் அடங்கா. கடவுள் இருக்கிறார் என்று சொல்லுகிறவர்கள் தங்கள் கருத்துக்கேற்ற விளக்கங்களைத் தருகின்றனர். கடவுள் இல்லை என்று வாதிக்கிறவர்கள் அதற்கேற்ற விளக்கங்களை விரிவாகச் சொல்லுகின்றனர். பண்டைக் காலத்தில் ஈசுவரவாதம், நிரீசுவரவாதம், சூனியவாதம் ஆகியவைகள் நிலைபெற்றிருந்தன. அதே வாதங்கள் இன்றைக்கும் நிலைபெற்றிருப்பதைக் காண்கின்றோம். எதிர்காலத்திலும் இதே பாங்கில் அபிப்பிராய வேற்றுமைகள் இருந்துவரும்.

நிகழ்ச்சியொன்றை நம் விளக்கத்துக்குச் சான்றாக எடுத்துக்கொள்வோம். நவீன முறையில் நன்றாகக் கல்வி கற்று வந்த மாணாக்கனொருவன் சான்றோர் ஒருவரைச் சந்திக்கச் சென்றான். அவரோடு மாணாக்கன் காரசாரமாக வாதாடினான். கடவுள் என்ற வஸ்து ஒன்று இல்லவே இல்லை. அது வெறும் கற்பனை. சமுதாயத்தை ஏமாற்றி வருகின்றவர்களுடைய சூழ்ச்சியே ஈசுவர வாதம் என்னும் பெயர் பெறுகிறது. உலகிலுள்ள பொருள்களைக் கையாள முடிகிறது. உலகிலுள்ள உயிர்களோடு தொடர்வு வைக்கமுடிகிறது. தொடர்வு வைக்கமுடியாத புலி, சிங்கம் போன்ற துஷ்ட மிருகங்களைத் தக்க பாதுகாப்பிலிருந்துகொண்டு பார்க்கலாம். ஆனால் கடவுள் என்னும் பொருள் ஒன்று இருப்பதற்கு ஆதாரம் ஏதும் இல்லை. அந்த மூட நம்பிக்கையைச் சமுதாயத்தினின்று விரட்டி ஓட்ட வேண்டும் என்று தன் கருத்தை விஸ்தரித்து முடித்தான். அவன் பேசி முடித்தவுடனே அந்த மாணாக்கனுடைய கன்னத்தில் சான்றோர் ஓங்கி அறைந்தார். 'ஏன் என்னை அடிக்கிறீர்கள்?' என்று மாணாக்கன் தனது ஆட்சேபத்தைத் தெரிவித்தான். 'அடித்தால் என்ன?' என்று சான்றோர் கேட்டார். 'வலிக்கிறது' என்று மாணாக்கன் விடைவிடுத்தான். 'வலியைக் காட்டு பார்க்கலாம்' என்று சான்றோர் கேட்டார். 'அதை எப்படிக் காட்டமுடியும்' என்று மாணாக்கன் தடைகூறினான். 'இதோ, உன் அனுபவத்திலிருக்கிற வலியைக் காட்ட உன்னால் இயலவில்லை. மனம், மொழிக்கு எட்டாத பொருளை மொழியால் எப்படி விளக்குவது?' என்று சான்றோர் கூறினர். 'மனம் மொழிக்கு எட்டாதது சூனியந்தானே?' என்றான் மாணாக்கன். 'சவம் ஒன்று கிடக்கிறது. பக்கத்தில் போரில் காயமானவன் மயங்கிக் கிடக்கிறான். இரண்டுக்கும் வித்தியாசம் எப்படிக் கண்டு பிடிப்பாய்?' என்று சான்றோர் கேட்டார். 'சவம் மூச்சுவிடாது. மயங்கி இருப்பவன் மூச்சு விடுவான். உயிர் இருப்பதின் அறிகுறிகள் அவன் முகத்தில் தென்படும்' என்றான் மாணாக்கன். 'நீ இப்போது உயிரோடு இருக்கிறாயா? செத்துப் போய் விட்டாயா?' என்று சான்றோர் கேட்டார். 'நான் உயிரோடு இருக்கிறேன்' என்றான் மாணாக்கன். 'உன் உயிரை எனக்குக் காட்ட முடியுமா?' என்றார் சான்றோர். 'காட்ட முடியாது' என்று பதில் கொடுத்தான் மாணாக்கன். 'கட்புலனாகாத சூனியந்தானே' என்றார் சான்றோர். 'கட்புலனாகாதிருந்தாலும் உயிர் இருப்பதை நாம் உணர்கின்றோம்' என்றான் மாணாக்கன். 'நீ அறிவு படைத்துள்ளவன் தானே' என்று சான்றோர் கேட்டார்.' 'ஆம்' என மாணாக்கன் விடை கொடுத்தான். 'அந்த அறிவை எனக்குக் காட்டித்தர முடியுமா?' என்று கேட்டார் பெரியவர். 'முடியாது' என்றான் மாணாக்கன். 'நீ இன்பசொரூபந்தானே' என்று சான்றோர் கேட்டார். 'ஆம் ஆனந்தம் எனக்குச் சொந்தம்' என்றான் மாணாக்கன்.

'அந்த ஆனந்தத்தை எனக்குக் காட்டுவாயா?' என்று பெரியவர் கேட்டார். 'அது சாத்திய மன்று' என்ருன் மாணுக்கன். 'நீ உயிர் சொரூபம். ஆனல் உன் உயிரைக் காட்ட உனக்கு இயலவில்லை. நீ அறிவு சொரூபம். அந்த அறிவைக் காட்ட உனக்கு இயல வில்லை. நீ ஆனந்த சொரூபம். அதையும் காட்ட இயலவில்லை. உன்னிடத்திலேயே உன் உயிர்க்குயிராய், அறிவுக்கறிவாய், ஆனந்தத் திற்கு இருப்பிடமாய் உள்ளத்தினுள் ஒளிர்ந்து கொண்டிருப்பது கடவுள். அதை மறுக்க உன் ஞல் முடியுமா' என்று பெரியவர் கேட்டார். 'இது சிந்தனைக்கு உரிய விஷயம். மறுக்க முடி யாது' என்ருன் மாணுக்கன். 'ஆழ்ந்து சிந்தித் துப் பார். அழிந்துபட்டுப் போகும் உடலுக் குள்ளே அழியாத ஆத்மசொரூபம் இருக்கிறது. அதற்கு மரணமில்லை. அதுபேரறிவு சொரூபம். அது பேரானந்த சொரூபம். உன் உள்ளத்தி னுள் இருக்கின்ற அப்பெரிய பொருளை நீ சுட் டிக்காட்டமுடியாது. ஆயினும் அதன்சந்நிதான விசேஷத்தில் நீ உன்னுடைய ஜீவ வியக்தி யைப் பெற்றுள்ளாய்' என்ருர் சான்ருேர். 'இக்கோட்பாட்டை மேலும் மேலும் நான் எண்ணிப் பார்க்கிறேன்' என்ருன் மாணுக்கன். 'ஆம் அதுதான் முறை. கடவுள் இல்லை என்று வாதாடாதே. கடவுள் என்னும் மெய்ப் பொருள்தான் இப்பிரபஞ்சத்திலுள்ள இத் தனையுமாய் இலங்கிக்கொண்டிருக்கிறது என் பதைச் சாதனங்கள் புரிந்து நீ அனுபூதியில் அறிந்துகொள்வாயாக' என்ருர் சான்ருேர். 'எனக்கு இப்பொழுது நல்லறிவு வந்துள்ளது. இந்த மெய்ப்பொருள் ஆராய்ச்சியை இனி நான் முறையாகச் செய்து வருகிறேன்' என் ருன் இளைஞன். அன்று முதல் அவன் வாழ்க்கையில் மேலாம் திருப்பம் ஒன்று உண்டாயிற்று. கடவுள் இல்லை என்று வாதாடுகிறவர்கள் சூரியன் இல்லை என்று சொல்லுகிற பிறவிக் குருடர்களுக்கு நிகர் என்ற முடிவுக்கு அந்த மாணுக்கன் வந்தான்.

தத்துவ விசாரம் முறையாக செய்கிறவர் களுக்குப் பரவஸ்துவைப்பற்றிய விவேகம் தெற்றென உண்டாகிறது. கடவுள் என்னும் மூர்த்தி நம் போன்று வடிவம் தாங்கி எங் கேயோ மறைந்து உட்கார்ந்திருப்பவர் அல்லர். இத்தனை வடிவங்களில் இலங்கு பவர் கடவுள். இந்த வடிவங்களை யெல்லாம் கடந்தும் இருக்கிருர். வடிவங்களின் உள்ளும் இருக்கிருர். ஆதலால் அவருக்குக் கடவுள் என்னும் பெயர் வந்துள்ளது. சாதனையின் விளைவாக ஞானக்கண் அமையப் பெறுகிறவர் கள் யாண்டுமுள்ள ஒரு பொருளே அனந்தங் கோடி வடிவெடுத்து விளையாடுகிறது என்ற உண்மையை அறிய வருகின்றனர். அமைதியா கச் சாதனம்புரிவது நம்கடமை. வீண் விவாதத் தில் நாம் எதையும் பெறமுடியாது. அறிவுத் தெளிவு உண்டாகிறபொழுது பரம்பொருளைப் பற்றிய உண்மை தானுக விளங்குகிறது.

பூர்வ்காலத்தில் வாழ்ந்திருந்த காட்டுமிராண் டித்தனம் நிறைந்திருந்த மக்களுக்கிடையில் கடவுள் நம்பிக்கை உண்டாயிற்று. ஒவ்வொரு கூட்டத்தாரும் தாங்கள் நம்பி வந்த தெய்வத் தைத் தங்கள் குலதெய்வம் என்று பாராட் டினர். மக்களுக்கிடையிலே சண்டை சச்சரவு கிளம்புவது போன்று இந்தத் தெய்வங்களுக் கிடையிலும் இடையிடையே சண்டை சச்சரவு கள் கிளம்பினவென்று அன்னவர் கற்பனை பண்ணினர். வலிவு படைத்த மக்களுடைய தெய்வம் வலிவில் மேலோங்கியிருந்தது. வலி வற்ற சமுதாயத்தார் கற்பனைபண்ணிய தெய் வம் சண்டையில் தோல்வியுற்றது. இங்ஙனம் மக்களுக்கிடையிலுள்ள பிணக்குகளைத் தெய் வங்களுக்கிடையிலும் பூர்வீக மக்கள் புகுத்தி னர். அது அவர்களுடைய அறியாமைக்கு அறி குறியாகும். அத்தகைய மனப்பான்மை படைத் திருக்கிற மக்களை இக்காலத்திலும் காணலாம். தெய்வங்களை அவர்கள் வலிவு வாய்ந்த வியக்தி களாகக் கற்பனைபண்ணினர். அன்னவர் எக் காலத்திலும் தம் தெய்வம் பெரியது மற்றவர் வர்களுடைய தெய்வம் சிறியது என்னும் எண் ணத்தில் ஊறி இருப்பார்கள். அந்த எண் ணம் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட தன்று. பரவஸ்துவானது பஞ்சேந்திரியங் களுக்கு எட்டாதது. மனம், மொழிக்கு எட்டாதது. ஆயினும் அண்டகோடிகளுக் கும், ஜீவகோடிகளுக்கும் ஆதாரமாயிருப்பது அதுவே. இக்கோட்பாட்டை மக்களுக்குப் படிப்படியாகப் புகட்டுவது அறிஞர்களின் கடமையாகும்.

மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகள்

(சுவாமி ஆத்மானந்தர்)

"கண்ணிற் சிறந்த உறுப்பில்லை" என்பது பழமொழி. கண்கள் காணுதற்குப் பயன்படு கின்றன. கண்களைக்கொண்டு உலகை நாம் காணுகின்றோம். ஐம்பொறிகளுள் கண்ணின் அமைப்பு அற்புதமானது. வாழ்க்கைக்கே ஒளி யூட்டுவது கண். கண்களை முறையாகப் பயன் படுத்தினால் நாம் மேன்மையுறுவது நிச்சயம். முறை தவறிப் பயன்படுத்தினால் நாம் கீழ்மை யுறுவதும் நிச்சயமாகும். கண் நம்முடைய குணத்தையும், மனபரிபாகத்தையும் வெளிப் படுத்துதற்குரிய கருவியாகும். "கண்ணில் தெரியுது குணம்" என்கிறார் பாரதி.

நலத்தைக் காணும் நாட்டமுடையவர்களாக நாம் இருக்கவேண்டும். பிறருடைய குற்றங் குறைகளையே காணும் நோக்கம் இருத்தலா காது. நம்மை நாமே கண்டு பழகவேண்டும். நம்முடைய குற்றங்குறைகளை முதலில் கண்டு பழகவேண்டும். நமது கண்களை முதலில் நம் மீதே திருப்பவேண்டும். புறப்பொருளைப் பார்ப் பதைக் குறைத்து அகப்பொருளைப் பார்த்துப் பழகவேண்டும். ஆன்ம சொரூபத்தைக் காண இந்த ஊனக்கண் உதவாது. ஆயினும், ஊனக் கண்ணின் துணைகொண்டு ஞானக் கண்ணைப் பெற முயலவேண்டும். அத்தகைய முயற்சி தான் ஆத்மசாதனை எனப்படுகின்றது. நம் முடைய செயல்களில் கவனம் செலுத்த வேண்டும். குற்றம் குறைகள் இல்லாது பார்த் துக்கொள்ளவேண்டும். பிறருடைய காரியங் களில் தலையிட நமக்கு உரிமைகிடையாது. பிறரைப்பற்றி நல்லவரென்றோ அல்லது கெட் டவரென்றோ தீர்ப்புக்கூற நமக்கு உரிமை கிடையாது. மற்றவர்களைப்பற்றி முடிவு கூறு தற்கு முன் நம்மை நாமே பரீக்ஷித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு நம்மை நாமே பரீக்ஷித் துப் பார்ப்பது நமக்கு மிகுந்த நலன் தருவதாக அமையும்.

உலகை மனிதன் தன்னுடைய மனம் என் னும் கண்ணாடிகொண்டு காணுகின்றான். நமது மனதின் பிரதிபிம்பம்தான் நாம் காணும் இந்த உலகம். நமது மனம் தூயதாயின் உலகம் தூயதாகத் தென்படும். நமது மனம் மாசுபடிந் ததாயின் உலகமும் மாசு நிறைந்ததாகத்தான் தென்படும். பொதுப்பட பிறரைப் பற்றித் தீர்மானிப்பதில் பெரும்பாலும் நாம் தவறிவிடு கிறோம். ஏனெனில், நாம் விருப்பு வெறுப்புக்கு உட்பட்டவர்களாய் இருந்துகொண்டு மற்றவர் களைப்பற்றித் தீர்ப்புக்கூற முற்படுகிறோம். விருப்பு வெறுப்புக்கு வசப்பட்ட மனிதன் நடுவ ராகத் தகுதியற்றவனாவான். நடுநிலை பிறழ் பவன் கூறுகின்ற முடிவும் நடுவுநிலையற்றதாகத் தான் இருக்கும். சாதனத்தில் தீவிரமாகச் செல்லுகின்றவனுக்கு இதுபோன்ற காரியங் களில் ஈடுபட அவகாசம் கிடையாது. தீவிர சாதகன் மற்றவர்களைப்பற்றிக் கருதுவதில்லை. பிறருடைய கூற்றை அவன் பொருள்படுத்துவ தில்லை. பிறர் நம்மைப்பற்றி என்ன கூறினும் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டிய தில்லை. உலகத்தவரது கூற்று நம்மை உயர்த் தவோ தாழ்த்தவோ செய்யாது. நாம் எத் தகையவர் என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். நம்மை நாமே உயர்த்திக்கொள்ளு கிறோம்; நம்மை நாமே தாழ்த்திக்கொள்ளு கிறோம்.

மனிதன் இறைவன் கையில் கருவியாய் இருந்து பழகவேண்டும். தன்னால் செய்யப் படுகின்ற காரியங்கள் அனைத்தின் பலனையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்துவிடுதல் வேண் டும். ஈசனுக்கென்றே மனிதன் வாழக்கடமைப் பட்டிருக்கின்றான். ஆனால், மக்களுள் பெரும் பாலோர் சுயநலக்காரர்களாய் இருக்கின்றனர். தங்கள் பொருட்டே காரியங்களைச் செய்பவர் களாய் இருக்கின்றனர். தங்கள் நலத்திலேயே கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றனர். தங் கள் விருப்பம் போல் யாவும் நிறைவேறும் பொழுது ஆனந்தத்தில் திளைத்திருக்கின்றனர். தங்கள் நோக்கம் நிறைவேறாதபொழுது மன வருத்தம் உடையவர்களாய்க் காட்சியளிக் கின்றனர். மானுடர் பல்வேறு விதமான இயல்புடையவர்கள். பல்வேறு விதமான அபிப்பிராயங்களுள்ளவர்கள். மக்களுக்கிடை யில் கருத்துவேற்றுமை நிறைந்திருக்கிறது. பூசல்கள் ஏற்படுவதற்குக் கருத்து வேற்றுமை

கள்தான் காரணமாய் இருக்கின்றன. கருத்து வேற்றுமையானது நண்பர்களையும், உற்றார் உறவினர்களையும் பகைவர்களாக்கி விடுகின்றது. சந்நியாசிகளுக்கிடையிலும் பூசலை வளர்ப்பது கருத்து வேற்றுமைதான். வேற்றுமை மயமானதுதான் உலகம். எல்லா விதத்திலும் ஒத்த கருத்தினர் இருவரை உலகில் காண முடியாது. வேற்றுமையில் ஒற்றுமையைக் காணவேண்டும். வேற்றுமையில் ஒற்றுமையைக் காணுமளவு நாம் உயர்வடைகிறோம். ஒருமையைக் காணுவதுதான் சமயங்கள் அனைத்தின் லக்ஷியமாகும்.

''தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்'' என்பது பழமொழி. மனிதன் இளமையிலிருந்து பழகிய பழக்கத்தை விட்டுவிடுவது எளிதான காரியமன்று. தான் விரும்பும் பாதையில் செல்லவே ஒவ்வொரு மனிதனும் விரும்புகின்றான். தங்களுக்குப் பிடித்தமான வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ளவே அனைவரும் விரும்புகின்றனர். பிறருடைய விருப்பத்திற்கேற்ப தன்னுடைய வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள யாரும் விரும்புவதில்லை. சுதந்திரத்தை நாடுவது உயிர்களின் இயல்பு. தளையுண்டு கிடக்க எந்த உயிரும் விரும்புவதில்லை. உயிர்களனைத்தும் விடுதலையையே நாடுகின்றன.

மனிதன் தன்னம்பிக்கையுடையவனாகஇருக்க வேண்டும். முதலில் தன்னம்பிக்கை, பிறகு தெய்வ நம்பிக்கை என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். தான் எதையும் செய்து சாதித்துவிடமுடியும் என்ற ஊக்கமும் உள்ளத் திட்பமும் இருந்தால்தான் எக்காரியத்தையும் திறம்படச் செய்யமுடியும். எண்ணம் செயலாகப் பரிணமிக்கிறது. உறுதியான எண்ணம் திறமையான செயலாக வடிவெடுக்கிறது. கடவுள் காட்சி பெற்றவர்களெல்லாம் உறுதியான அசைக்கமுடியாத எண்ணமுடையவர்களாக இருந்தனர். மனத் தளர்ச்சியையும், மனக் கலக்கத்தையும் தன்னம்பிக்கை அகற்றி விடுகின்றது. தன்னம்பிக்கையிலிருந்து தெய்வ நம்பிக்கை உண்டாகிறது.

மனிதன் கடவுள் நம்பிக்கை உடையவனாய் இருக்கவேண்டும். உலகிலுள்ள மதங்கள் அனைத்தும் கடவுள் நம்பிக்கையை வலியுறுத்துகின்றன. கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டுதான் மதங்கள் நிலைத்து நிற்கின்றன. கடவுள் நம்பிக்கையே அனுபூதிக்கு இன்றியமையாதது. கடவுளிடத்து எவ்வளவுக்கெவ்வளவு நம்பிக்கை உடையவர்களாய் இருக்கிறோமோ அந்த அளவிற்குக் கடவுளின் திருவருளுக்கு நாம் விரைவில் பாத்திரமாவோம். குழந்தையைப் போன்ற விசுவாசமும் நம்பிக்கையும் சாதகனிடத்து இருக்க வேண்டும். பெற்றோருடைய சொற்களில் குழந்தை நம்பிக்கையும் விசுவாசமும் வைக்கின்றது. தாய் கூறுவதையெல்லாம் குழந்தை முழுமனதோடு நம்புகிறது. ஒருவனைச் சுட்டிக்காட்டி இவன் உன் சகோதரன் என்றால் குழந்தை அதை அப்படியே நம்புகிறது. ஓரிடத்தைச் சுட்டிக்காட்டி அங்கே போகாதே பேய் இருக்கிறது என்றால் அதையும் குழந்தை நம்பிக்கொள்கிறது. தாய் என்ன சொன்னாலும் நம்பிக்கொள்வது குழந்தையின் இயல்பு. விசாரணை அங்கு கொஞ்சமும் இடம் பெறுவதில்லை. குழந்தை தாயினிடத்து நம்பிக்கை வைப்பதுபோன்று மனிதன் ஈசனிடத்து நம்பிக்கை வைக்கவேண்டும். அத்தகைய நம்பிக்கை உடையவர்கள் எளிதில் இறையருளைப் பெறுவார்கள். இயேசுநாதரிடத்துக் கேள்வியொன்று கேட்கப்பட்டது. எத்தகைய மனப்பாங்குடையவர்கள் ஈசனது அருளைப் பெறுவார்கள்? அதற்கு இயேசுநாதர் அருகில் இருந்த ஒரு குழந்தையைச் சுட்டிக்காட்டி, ''நீங்கள் இந்தக் குழந்தையைப் போன்ற மனப்பாங்கு உடையவர்களானலொழிய இறையருளுக்குப் பாத்திரராகமாட்டீர்'' என்று பகர்ந்தார். கடவுள் நம்பிக்கை எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்ததும் வலிவுடையதுமாக இருக்கிறதோ அதற்கேற்ப மனத் தெளிவும் பக்தியும் வந்து வாய்க்கின்றன. கடவுள் பக்தி அதிகரிக்க அதிகரிக்க உலக வியவகாரங்கள் குறைந்து போகின்றன. சாதகன் தனிமையைத்தான் மிகுதியாக விரும்புகிறான். சாதனை செய்வதற்கு ஏகாந்தம் போன்று துணைபுரிவது வேறொன்றுமில்லை. அதனால்தான் ''இனிது இனிது ஏகாந்தம் இனிது'' என்று ஆன்றோர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

பிறருடைய காரியங்களில் தலையிடும்

குணம் நம்மிடத்துக் குடிகொண்டிருக்கின்றது. நாமுண்டு நமது செயலுண்டு என்று நம்மால் இருக்க இயலுவதில்லை. குற்றம் அற்றவர்களாக நம்மை நினைத்துக்கொண்டு பிறரிடத்துக் குறைகாணத் தொடங்கி விடுகிறோம். பிறரிடமுள்ள குற்றங்குறைகளைப் பேசுவதென்றால் அதில் பொழுது போவதே தெரியாது பேசிக்கொண்டிருக்கிறோம். இத்தகைய வீண் பேச்சு பேசுபவர்களுக்கோ, அல்லது யாரைக் குறித்துப்பேசுகிறோமோ அவர்களுக்கோ ஏதாகிலும் பயனுண்டா என்றால் ஒருபயனும் கிடையாது. பிறருடைய குற்றங்குறைகளைப் பேசுகின்றஅளவிற்கு நம்முடைய மனம்தான் கீழ்மையுறுகிறது. நாம் மனபரிபாகத்தில் கீழ்நிலைக்குச் செல்லுகிறோம். நம்மிடத்துப் பிறர்கண்டிக்கத் தக்க குற்றங்குறைகள் இல்லாமலா இருக்கின்றன? நிறைய இருக்கின்றன. நம்மிடத்துள்ள குறைகளைப் பிறர் நமக்குச் சுட்டிக் காட்டினால் நாம் மகிழ்வடைகிறோமா ? இல்லை. நல்ல மனப்பான்மையுடைவர்களாயின் நம்மிடத்துள்ளகுறைகளைப் பிறர் சுட்டிக்காட்டும்போது நாம் மகிழ்வடையவேண்டும். அவ்வாறு சுட்டிக் காட்டியதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். ஆனால் அப்படிச் செய்கிறோமா? நன்றி செலுத்துதற்குப் பதிலாகத் திட்டவும், அடிக்கவும் தொடங்கிவிடுகிறோம். நம் குறைகளைப் பிறர் சுட்டிக்காட்டும் போது நமக்குத் துன்பமாய் இருப்பது போன்று பிறரிடத்துள்ள குற்றம் குறைகளை நாம் சுட்டிக்காட்டும் போது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கும். அதனால் பிறரிடத்துள்ள குறைகளைப் பலர் அறியப் பறைசாற்றாதே. ஒரு மனிதனிடத்து, அதுவும் உனக்கு மிகவும் வேண்டியவரிடத்து ஏதாகிலும் தீமையிருந்தால் அதை அவரிடமே சுட்டிக்காட்டித் திருத்த முற்படு. அக்குறை உன்னிடத்து இல்லாது பார்த்துக்கொள். பிறர் எப்படி இருக்கவேண்டுமென்று விரும்புகிறாயோ அப்படி இருக்க முதலில் நீ முயற்சி செய். உன்னுடைய திருந்திய வாழ்வே உன்னைச் சார்ந்தவர்களையும், உன்னைச் சுற்றியிருப்பவர்களையும் திருத்தியமைத்துவிடும். ஒவ்வொரு மனிதனும் தன்னைத் திருத்தியமைத்துக் கொண்டால் உலகம் தானாகத் திருந்தியமைந்து விடும் என்பதில் ஐயமில்லை. நம்மைத் திருத்தி அமைப்பது நமது முதற்கடமையாகும்.

நாம் நம்மை நோக்கியே நமது கண்களைத் திருப்பவேண்டும். நம்முடைய ஒழுக்கத்தில் விழிப்புடையவர்களாய் இருத்தல் வேண்டும். நம் மனத்தகத்துள்ள ஆசாபாசங்களை அகற்றுதலில் விழிப்புடையவர்களாய் இருத்தல் வேண்டும். பிறரைப்பற்றி மனத்தகத்து நல்ல எண்ணமே கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களைப் பற்றி என்ன எண்ணுகின்றோமோ அவ்வாறே நாமும் மற்றவர்களால் எண்ணப்படுவோம். இதை நினைவில் வைத்திருக்குமளவிற்குப் பிறரைப்பற்றிதாழ்வாக எண்ணுவதை நாம் விட்டுவிடுவோம். எங்கும், எவ்விடத்தும், எல்லாத் திசைகளிலும் நல்ல எண்ணங்களையே அனுப்புதல் வேண்டும். மலர் ஓயாது நறுமணத்தைப் பரப்புவது போன்று நாலாபக்கமும் நல்ல எண்ணத்தையே பரப்புதல் வேண்டும். நாம் உலகுக்கு வழங்குவதையே திரும்பப் பெறுகிறோம். உலகுக்கு நலத்தை நல்கினால் உலகம் நமக்கு நலத்தை நல்கும்; உலகுக்கு நாம் கேட்டை நல்கினால் உலகு நமக்குக் கேட்டைத் தான் நல்கும். உயிர்களிடத்து அன்பைப் பொழிபவன் உயிர்களிடத்திருந்து அதே அன்பு தன்பால் பொழியப் பெறுவதைக் காண்பான். உயிர்கள்பால் வெறுப்பை வளர்ப்பவன் அதே வெறுப்பைத்தான் திரும்பப் பெறுவான். உலகில் தோன்றிய சான்றோர் உயிர்கள் அனைத்தையும் நேசித்தனர். உயிர்களனைத்தும் அவர்களை நேசித்தன. இறைவன் அன்பு சொரூபம். 'அன்பே சிவம்' என்பது கோட்பாடு. இறைவனே உயிர்கள் அனைத்துமாகக் காட்சியளிக்கிறான். "உலகனைத்தும் ஆனாய் நீயே" என்பது ஆப்தவாக்கியம். ஈசன்தான் தம்மை இத்தனைவிதங்களில் காட்டிக்கொண்டிருக்கிறார். உயிர்களனைத்தின் மூலமாக நாம் ஈசனது விசுவரூப தர்சனத்தைக் காணுகிறோம். பிரபஞ்சம் ஈசனது விசுவரூபம் என்பதை நினைவில்கொள்ளுமளவு நமது மனது விரிவடைகிறது. மனதை விரிவடையச் செய்ய வேண்டும். விரிந்து பரந்த மனதில் துன்ப துயரங்கள் அழிந்து போய் விடுகின்றன. மனதைப் பெரிதாக்கிப் பரம்பொருளுக்கு உரியதாக்குவதே மானுட வாழ்வின் லக்ஷியமாகும்.

வாசுதேவமனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

இப்பிரபஞ்சம் நமக்குப் பிரத்யக்ஷமானதாகவும், நிலைத்ததாகவும், உண்மையானதாகவும், பிரியமானதாகவும் தோன்றுகிறது. நமக்கு இவ்வுலகத்தினிடத்தும், நமது சரீரத்தினிடத்தும் பற்றுதல், ஆசை அதிகம். இந்த ஆசையின் மிகுதியினால், ஒட்டகம் ரத்தம் கசியக் கசிய முட்செடியைச் சாப்பிடுவது போன்று, நாம் உலக இன்பங்களைத் துன்ப துயரங்களுக்கிடையிலும் நாடியும் இடையறாது தேடியும் வருகிறோம். அதன் விளைவாக முடிவில்லாது பிறப்பு இறப்பு என்கிற சுழலில் சிக்கித் தவிக்கிறோம்; பிரபஞ்ச சாகரத்தில் கரைகாணாது தவிக்கிறோம். இந்த நிலையில் நம் முன்னோர்கள், ரிஷிகள் நமக்குக் கைகொடுத்து உதவ முன்வருகிறார்கள். எதன் பேரில் அதிகம் பற்று வைத்துள்ளோமோ, எது இத்தனை துன்பத்துக்கும் காரணமாயிற்றோ அதைப்பற்றிய உண்மையை மிகவும் விளக்கமாகவும், பன்முறையும், பல விதங்களிலும் சொல்லுகிறார்கள். அதினின்று மீளும் உபாயத்தையும் சொல்லித் தருகிறார்கள். அவர்கள் சொற்படி கேட்டால் போதும், நாம் கரையேறி விடலாம். பிரபஞ்ச நிகழ்ச்சிகளனைத்தும் நமக்குப் பாடம் புகட்டக் கூடியதாக அமைந்திருக்கின்றன. சான்று ஒன்று எடுத்துக் கொள்வோம். கழுகு ஒன்று அலகில் மாமிசத்துண்டுடன் வானில் பறந்து கொண்டிருந்தது. அக்கழுகைச் சுற்றி சிறு பறவைகள் வட்டமிட்டுப் பறந்துகொண்டிருந்தன. இந்த இயற்கைக் காட்சியை விவேகி ஒருவர் பார்த்தார். கழுகு எங்குச் சென்றாலும் அதைப் பின்தொடர்ந்து மற்ற பறவைகள் சென்றன. சிறிது நேரத்துக்குப் பின் கழுகின் அலகிலிருந்த மாமிசத்துண்டு நழுவி தரையில் விழுந்தது. அதைச் சுற்றி வட்டமிட்டுப் பறந்து கொண்டிருந்த மற்ற பறவைகள் அதை விட்டு மறைந்தன. கழுகு அமைதியாக ஒரு மரத்தின் கிளையில் அமர்ந்தது. இதைக்கண்ட விவேகி, "கழுகே, நீ தான் எனக்குக்குரு. நான் உலகப்பற்று என்னும் மாமிசத்துண்டை என் மனம் என்னும் அலகில் பற்றிப்பிடித்திருக்கும் வரையில் துன்பங்கள் என்னைவிடாது பற்றிக்கொண்டிருக்கும். உலகப்பற்று என்னும் மாமிசத்துண்டை கீழே போட்டுவிட்டால் துன்பங்கள் அகன்று விடும். உன்போன்று நான் சாந்தி அடைவேன். இப்பாடத்தை உன்மூலம் கற்றுக்கொண்டேன்" என்றார். இப்பிரபஞ்சம் எத்தகையது? எத்தனை விதமாக இருக்கிறது?

இப்பிரபஞ்சம் முழுவதும் பஞ்சபூதங்களால் ஆனது. அப்பஞ்சபூதங்களை அறிவதற்கு, அனுபவிப்பதற்கு நம்மிடத்தில் பஞ்ச இந்திரியங்கள் இருக்கின்றன. ஒளியைப் பார்ப்பதற்குக் கண் இருக்கிறது, ஓசையைக் கேட்பதற்குக் காது இருக்கிறது, கந்தத்தை முகர்வதற்கு மூக்கு இருக்கிறது, ருசியை அறிவதற்கு நாக்கு இருக்கிறது, ஸ்பர்சத்தை உணர்வதற்கு மெய் இருக்கிறது. அந்தந்த இந்திரியம் அந்தந்தப் பூதத்தைத்தான் உணரமுடியும். ஆகையால் ஆகாயத்தின் தன் மாத்திரை ஒலி, அதன் இந்திரியம் செவி என்று சொல்லப்படுகிறது. வாயுவின் தன் மாத்திரை ஊறு, அதன் இந்திரியம் சர்மம் அல்லது த்வக். அக்னியின் தன் மாத்திரை ஒளி, அதன் இந்திரியம் கண். நீரின் தன்மாத்திரை சுவை, அதன் இந்திரியம் நாக்கு. பிருதிவி அல்லது மண்ணின் தன் மாத்திரை நாற்றம், அதன் இந்திரியம் மூக்கு. அதனதன் இந்திரியம் என்று சொல்லுவதனால் அது அந்தப் பூதத்தின் இந்திரியம் என்று பொருளல்ல, அதை உணர்வதற்குரிய இந்திரியம் அது என்பது பொருள்.

இந்த இந்திரியங்களைப் பற்றிய மற்றொரு உண்மை இருக்கிறது. திடீரென்று ஒருவன் இறந்து விட்டான். அவனிடம் அத்யந்தம் அன்பு செலுத்திய அவனது பெற்றோர் அவன் மேல் விழுந்து புலம்புகிறார்கள். அப்படியே முழு உருவமாகவும், பழுதுபடாததாகவும் இருந்தும் அந்தச் சவம் எதையும் உணருவதில்லை. எந்த இந்திரியமும் வேலை செய்வதில்லை. கண் பார்ப்பதில்லை, காது கேட்பதில்லை. அந்தச் சரீரத்தில் என்ன இருந்து கொண்டு அதை நடமாடச் செய்தது? பெற்றோரிடமும் மற்றவர்களிடமும் எது அன்பு

செலுத்த வைத்தது? அப்பொருள் அல்லது சக்தி இப்போது என்ன ஆயிற்று? அது இப் போது எந்நிலையில் இருக்கிறது? இந்தச் சரீரத்தையும் இந்திரியங்களையும் பயன்படுத் திய பொருள் ஆத்மா எனப்படுகிறது. இந்தக் கண் பார்க்கவில்லை, ஆத்மாவே கண்ணின் மூலம் பார்க்கிறது. இந்தக் காதுகள் கேட்க வில்லை, ஆத்மாவே காதுகளின் மூலம் கேட் கிறது. இந்த மூக்கு முகரவில்லை, ஆத்மாவே இந்த மூக்கின் மூலம் முகர்கிறது. இந்திரியங் கள் வெறும் கருவிகளே, ஜடமே. அவைகளை ஆத்மா பயன்படுத்துகிறது.

இத்தனை உயிர்வகைகள் உள்ளனவே, இத்தனை ஆத்மாக்கள் உள்ளனவா? இந்த ஆத்மாக்களுக்கிடையில் உள்ள சம்பந்தம் என்ன? ஆத்மா ஒன்றே. அது எப்படி இத்தனை விதமாகத் தோன்றிக் கொண்டிருக் கிறது என்பதை உதாரணங்கள் மூலம் நன்கு விளக்குகிறார்கள். ஆகாசம் ஒன்றேயாயினும் கடாகாசம் (கடம் பானை) மடாகாசம் (மடா லயம்) கிருஹாகாசம் (வீடு) கீழ்வானம், மஹா காசம் (எங்கும் நிறைந்துள்ள ஆகாசம்) என் றெல்லாம் சொல்லுகிறோம். ஆகாசம் பானைக் குள்ளும், மடாலயத்திற்குள்ளும், வீட்டிற் குள்ளும், கீழ்த்திசைக்குள்ளும் கட்டுப் பட்டது போன்று தென்படுகிறது. ஆயினும் அவைகள் எல்லாம் மஹாகாசத்தைச் சேர்ந் தவைகளே. பிரிந்திருப்பன போன்று தோன் றினும், அவைகள் பிரிவினை இன்றி, எந்த மாறுதலும் அடையாது, யாண்டும் இருந்தபடி இருக்கின்றன. அவைகள் அழியுமிடத்தும் ஆகாசம் பழுதின்றி இருக்கிறது. கோவில்மணி, பள்ளிக்கூட மணி, பூஜைமணி, அபாயமணி, சைக்கிள் மணி என்று சொல்லுகிறோம். மணி ஒன்றே. அது பலவாகப் பேசப்படுகிறது. அது எங்கு வைத்து அடிக்கப்படுகிறதோ அதற் கேற்ற பெயரைச் சொல்லுகிறோம். இவை யெல்லாம் உபாதிகள் எனப்படுகின்றன. ஆத்மா ஒன்றே; உபாதிகள் அனேகம். அந்த உபாதிகளின் வழியாக ஒரே ஆத்மா இத்தனை விதமாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

பஞ்ச பூதங்களுக்கு அன்னியமான பொருள் இப்பிரபஞ்சத்தில் இல்லை. பஞ்ச இந்திரியங் களின் அனுபவத்துக்கு அன்னியமான மானுட வாழ்க்கை இல்லை. இவ்வுலகைப் பற்றிய, நமது வாழ்வைப்பற்றிய உண்மை இது. பஞ்ச பூதங்களும் அதிலிருந்து வந்துள்ள சகல பொருள்களும் இறைவனிடமிருந்து வந்தவை. அவரே இத்தனையும் ஆகியிருக்கிறார். பஞ்ச இந்திரியங்களைக்கொண்டு அவைகளை அனுப விப்பவரும் அவரே. மறந்துபோன இவ்வுண் மையை ஞாபக மூட்டவே பூஜையில் அருகு, துளசி, வில்வம், பூ, சந்தனம், பிரசாதம் (பிருதிவியின் அம்சம்) தூய நன்னீர் (அப்புவின் அம்சம்) குத்து விளக்கு (அக்னியின் அம்சம்) தூபம், ஊதுபத்தி (வாயுவின் அம்சம்) மணி (ஓசை, நாதப்பிரம்மம், ஆகாயத்தின் அம்சம்) இவைகளையெல்லாம் பயன்படுத்திவருகிறோம். எல்லா விவகாரங்களும் ஆகாயத்தில், அண்ட வெளியில் நிகழ்கின்றன.நாம்இந்திரியங்களால் நுகரும் அனைத்தையும், நாம் கையாளும் எல் லாப் பொருள்களையும் கடவுள் என உணர வேண்டும், தெரிந்துகொள்ளவேண்டும். அவை களைக் கடவுளுக்கு அர்ப்பணமாகச் செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் பந்தபாசத் துக்கு ஏதுவான, துயரத்துக்கு ஏதுவான இப் பிரபஞ்ச வாழ்க்கை பாரமார்த்திக வாழ்க்கை யாக, பந்தபாசங்களை அறுக்கும் தெய்வீக வாழ்க்கையாக மாறிவிடுகிறது. நம் மனதை இம் முறையில் பயிற்றுவிப்பதற்காகவே கிரியா விசேஷங்களோடு கூடிய பூஜை முறையை அமைத்துள்ளார்கள். நம் இந்திரியங்கள் இது காறும் எப்படிச் செயல்பட்டு வந்தனவோ, அதே போக்கில் அவைகளைச் செயல்படச் செய்து, ஆனால் புதிய உண்மையான பாவனையை, மனப்பான்மையை அவைகளுக் குப் பூஜையின் மூலம் ஊட்டுகிறார்கள். இது பக்திமார்க்கத்தின் பாங்கு ஆகும்.

வாழ்வின் பிற்பகுதியில், முதுமையில் தன் முழுமனதையும் கடவுள்பால் திருப்பவேண்டும். துறவு பூணவேண்டும் என்பது நம் ஐதிகம். இக்கருத்தை வலியுறுத்தவே வானப்பிரஸ்த ஆச்ரமம், சன்யாச ஆச்ரமம் என்று ஏற்படுத்தி யுள்ளார்கள். திருதராஷ்டிரன், யுதிஷ்டிரனை மிகவும் பரிந்து "க்ஷத்திரியன் ஒருவன் யுத்தத் தில் சாகவேண்டும்.அல்லது முதுமையில் வனத் தில் தவத்தில் ஈடுபட்டிருந்து உயிர்துறக்க வேண்டும் என்பது விதி. ஆகையால் நீ மன

முவந்து தவத்துக்குப் போக எனக்கு அனுமதி அளிக்கவேண்டும்'' என்றுகேட்கிருன். இதைப் போலவே யாக்ஞவல்கியர் என்னும் ரிஷி துறவு பூண நிச்சயம் செய்துகொண்டு தன் மனைவியிடம் ''உன் வாழ்நாளை இனிது கழிப்பதற்கு வேண்டிய செல்வம் இருக்கிறது. எனக்குத் துறவுபூண அனுமதி அளிப்பாயாக. நீ இல்லத்தில் இருந்துகொண்டு கடவுள் வழிபாட்டில் காலம் கழித்து வருவாயாக''என்று சொன்னுர். கணவனிடம் அத்யந்தம் அன்பு பூண்டவளும், நல்ல சம்ஸ்காரம் வாய்ந்தவளுமாகிய அம் மாது மைத்திரேயி, ''இச் செல்வத்தினல் நான் என்ன நன்மை அடையமுடியும்? இறைவனது அருளுக்குப் பாத்திரமாக முடியுமா? உங்கள் அருள் நாட்டத்துக்கு நான் இடையூருக இருக்க மாட்டேன். தாங்கள் நாடிப்போகிற லக்ஷியத்தை நானும் அடையும் வண்ணம் எனக்கு ஞானேபதேசம் செய்வீர்களாக'' என்று கண்ணீர் மல்க வேண்டிக்கொண்டாள். அருள்தாகம் கொண்ட அம் மனைவிக்கு அந்த ரிஷி ஞானேபதேசம் செய்தார். அவரது போதனை மிகவும் பிரசித்தமானது. மனிதன் ஆத்மாவை நேசித்துப் பழகவேண்டும். ஆத்மா அனுத்மா விவேகம் வரவேண்டும். கணவன் மனைவியை நேசிப்பது மனைவியின் உடலை முன்னிட்டன்று, மனைவியினிடத்துள்ள ஆத்மாவை முன்னிட்டே கணவன் மனைவியை நேசிக்கிருன். மனைவி கணவனை நேசிப்பது கணவனின் சரீரத்தை முன்னிட்டன்று. கணவனிடத்துள்ள ஆத்மாவை முன்னிட்டே மனைவி கணவனை நேசிக்கிருள். இப்படியே பல உதாரணங்கள் சொல்கிருர். மிட்டாய்க்கடைகளில் இனிப்பு பலகாரங்கள் போன்று அட்டையில் செய்து வைத்திருக்கிருர்கள். அங்கு எறும்பு போகாது. நேர் உண்மையான பலகாரத்தினிடம் போகும். அழகான, காகித ரோஜாமாலை இருக்கிறது, அங்கு தேனி போகாது. அச் சிற்றுயிர்களும் அதனதன் அளவையில் ஆத்மா அனுத்மா விவேகம் படைத்திருக்கின்றன என்று சொல்லலாம். நாம் அத்யந்தம் ஒருவரை ஒருவர் நேசிக்கிரேம். ஒருவர் இறந்து போனல் அந்தச் சரீரத்தை வைத்துக்கொண்டு அன்பு செலுத்திக் கொண்டு இருக்கிரேமா? அதை எரித்துவிடுகிரேம். அன்பு செலுத்தப்பட்ட பொருள் ஆத்மாவே; ஜடமாகிய, அழியக்கூடிய உடல் அன்று. அதே போல நாம் அன்பு செலுத்தும், பயன்படுத்தும் எல்லாப் பொருள்களைப்பற்றியும் ஆராய்ந்து பாருங்கள். நாம் நமக்குத் தெரியாமலேயே ஆத்மாவைத்தான் நேசித்து வந்துள்ளோம். ஆனல் அந்த ஆத்மாவைப் பற்றிய உண்மை, மகிமை நமக்குத் தெரிவதில்லை. கடவுளே இத்தனை ஆத்மாக்களாக, ஜீவர்களாகத் தோன்றிக்கொண்டிருக்கிருர். ஒரே சூரியன் கோடானுகோடி நீர் நிலைகளில், அலைகளில், பாத்திர நீர்களில், கண்ணுடிகளில், உலோகங்களில் பிரதிபலித்துக் கொண்டிருப்பதுபோல இத்தனை பிரபஞ்சப் பொருள்களிலும், உயிர் வகைகளிலும் அதனதன் ரசமாகவும், உயிராகவும், அறிவாகவும், அழகாகவும் ஆன்மா மிளிர்ந்து கொண்டிருக்கிருர். ஆத்மா இல்லாவிட்டால் பிரபஞ்சம் இல்லை, இத்தனை அனுபவங்கள் இல்லை. ஆத்மாவே பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் உயிரோவியமாகச் சோபிக்கச் செய்துகொண்டிருக்கிறது. அது தன்னைத்தானே ரசித்துக்கொண்டிருக்கிறது. ஆத்மா என்கிற சொல்லை ஜீவாத்மா, பரமாத்மா என்கிற இரண்டு பொருள்களிலும் கையாளுகிருர்கள். சேதனம் உயிரும், உணர்வும், அறிவு உள்ளது. அசேதனம் அல்லது ஜடம் உயிரும், உணர்வும், அறிவும் அற்றது. க்ஷேத்திரம்-க்ஷேத்திரக்ஞன், நித்தியம்-அநித்தியம், பிரகிருதி-புருஷன் என்றும் இக்கோட்பாடு பகரப் பெறுகிறது. க்ஷேத்திரத்தையும் க்ஷேத்திரக்ஞனையும் விபாகம் அல்லது பிரித்துஅறியத் தெரிந்து கொள்ளுதல் யோகமாகிறது. நித்தியம் எது. அநித்தியம் எது என்று அறிந்து கொள்ளுதல் விவேகம் ஆகிறது. நித்திய அநித்திய வஸ்து விவேகம், ஆத்மா அனுத்மா விவேகம் மனிதனுக்கு வரவேண்டுமென்று சாஸ்திரம் சொல்லுகிறது. தண்ணீர் கலந்த பாலில் அன்னப் பறவை பாலை அருந்திவிட்டுத் தண்ணீரை விட்டுவிடுவது போன்று சத் எது அசத் எது என்று ஆத்ம சாதகன் பிரித்துவிடுகிருன். ஆத்மா ஒன்றே சத்பொருள். உபாதிகள் அனைத்தும் அசத் ஆகின்றன. ஆத்மாவே ஆத்ம சாதகனின் நேசத்துக்குரியது.

சம்பந்தர் வாக்கு

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன்)

திருவாவடுதுறை தஞ்சை மாவட்டத்தில் அமைந்துள்ள சிவத்தலம். இத்தலம் காவிரி யாற்றின் தெற்குக் கரையில் அமைந்துள்ள தலங்களுள் முப்பத்து ஆருவது தலம் ஆகும்.

இறைவி உமையம்மை ஆ என்னும் பசு வடிவத்துடன் எம்பெருமானை வழிபட்ட தலம். ஆதலின் ஆவடுதுறை—திருவாவடுதுறை என்னும் பெயரைப் பெற்றது.

இறைவன் திருப்பெயர் மாசிலாமணி ஈசர். தல விருட்சம் போதி (அரச மரம்). கோமுத்தி தீர்த்தம், பத்ம தீர்த்தம், கைவல்ய தீர்த்தம் என்பன இத்தலத்தின் தீர்த்தங்கள் ஆகும். முசுகுந்தச் சக்ரவர்த்திக்கு இத்தலத்திலே தான் மகப்பேறு கிடைத்தது. முதல் பராந்தக சோழ மன்னன் இத்தலத்துத் திருக் கோயிலைக் கட்டினன்.

சிவத்தலங்கள் தோறும் யாத்திரை செய்து வழிபட்டு வரும் திருஞானசம்பந்தப் பெருமான் திருவாவடுதுறை தலத்துக்கு எழுந்தருளுகின்ருர். அழிவு இல்லாத பொருள் ஆவடுதுறை எந்தையாரின் திருவடிகளே என்று எண்ணி அம்மையப்பனை நினைந்து பதிகம் பாடுகின்ருர்.

"இடரினும் தளரினும் எனது உறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு
ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே!''

— நீலகண்ட சிவனே! எனது துன்பத்திலும் சரி, உடல் தளர்ச்சியிலும் சரி, வினைப்பயன் தொடர்ச்சியாக வருவதிலும் சரி, இவற்றைச் சிறிதும் பொருட்படுத்தமாட்டேன். உன்னுடைய திருவடிகளை நாள்தோறும் தொழுது வணங்குவேன். உனது திருப்பாதங்களே எனக்கு அடைக்கலம் ஆகும். வேறுபுகலிடம் இல்லை. கொடுப்பதற்கு என்னிடத்தில் எதுவும் இல்லை. உனது திருவடிகளையன்றி வேறு ஒன்றும் அறியேன் என்று பாடுகிருர்.

துன்பம் அடையாதவர்கள், அனுபவிக்காதவர்கள் உலகத்தில் யார்?. ஒருவரும் இல்லை. எல்லா உயிர்களுக்கும் ஏதாவது ஒருவகையில் துன்பம் இருந்து கொண்டேதான் இருக்கும். துன்பம் தொடர்ந்து வரினும் அண்ட சராசரங்கள் எல்லாம் வியாபித்து நிற்கும் இறைவனை வழிபடுவது சான்ருேர்களின் இயல்பு.

இளமையில் இருப்பதுபோல் முதுமையில் யாருக்கும் உடல் வலிவு இருப்பதில்லை.

"வீடும் பழம்வீடு ஆகுதடா
விட்டம் கூரை சுவர் எல்லாம்
ஆடி அலைந்து விழும்நாளும்
அண்டி அண்டி வருகுதடா
நாடி இதனை இன்னும்நீ
நம்பி மோசம் போகாமல்
பாடிப்பாடி எம்பெருமான்
பாதம் போற்றி வாழ்வாயே!''

என்கிருர் கவிமணி. வயது ஆக ஆக உடலில் தளர்ச்சி அடைந்தாலும், முதுமையடைந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது இறைவனை வழிபடுவது சான்ருேர் இயல்பு.

உயிர்களுக்கு அவை செய்கின்ற வினைப் பயன்கள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும். அவை நல்வினையாகவும் இருக்கலாம்; தீவினையாகவும் இருக்கலாம். வினைப்பயன்கள் தொடர்ந்து வருகின்றபொழுது இறையுணர்வு வராமல் போவது பலருக்கும் இயல்பாகும். ஏன்? அவ்வினைப்பயன்கள் மனித வாழ்வைத் தாக்குகின்றன. வாழ்க்கைக்கும் வினைப்பயன்களுக்கும் இடையருத போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கும். வெவ்வினை இருக்கின்ற காலம் வரையிலும்—அதாவது—ஆன்மாக்களிடத்து வினை பொருந்தியிருக்கும் காலம் வரையிலும் வினைப்பயன் இருந்துகொண்டேதான் இருக்கும். அங்ஙனம் வினைப்பயன்கள் இடையருது தாக்கி, உள்ளத்தைக் கலக்கி, அறிவை அழித்துச் சிந்தனையை மாறுபடுத்தினலும் அவ்வினைப்பயன்களை நல்லோர்கள் இறைவனை வணங்குவதற்குத் தடையாகக் கருதமாட்டார்கள்.

அதைத்தான் சம்பந்தர் இங்கு, '' இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உன்

கழல் தொழுது எழுவேன் '' என்கிருர்.

சம்பந்தருடைய வாக்கிலே உறுதி தெரிகிறது; அவருடைய மனநிலை தெரிகிறது; ஆழமான இறை உணர்வு தோன்றுகிறது. மனித வாழ்க்கையில் இறைவனைப் பற்றிய சிந்தனை மிகமிக அவசியமானது என்ற கருத்தைச் சம்பந்தர் ஒரு கோணத்திலிருந்து உணர்ந்து சொல்கிருர். உலகமாகிய புறப்பொருளிலே வசித்துக்கொண்டு கடவுளாகிய அகப்பொருளைக் காண்கிருர். தம் மன உணர்வைத் தெரிவிப்பதற்கு "அழகானதொரு சொல்லை" அவர் தேர்ந்தெடுக்கவில்லை. வார்த்தைகளுக்கு வண்ணங்கள் தீட்டி அவர் சொல்லவில்லை. சொற்கள் எல்லாம் பழக்கப்பட்டவை. சம்பந்தர் கூறும் சொற்கள் சாதாரணமானவை. எல்லாருக்கும் பழக்கம் ஆனவை; எல்லாரும் அனுபவித்தவை. ஆனல், அந்தச் சாதாரண சொற்களும் சம்பந்தர் வாக்கிலே பட்டுச் சாகாவரத்தைப் பெற்று விட்டன. இதுதான் அடியவர்களுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு. " சான்ருேர் வாய்ச்சொல் '', "ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் '' என்றெல்லாம் நம் முன்னேர்கள் கூறியுள்ளனர். சான்ருேர்கள் கூறுகின்ற எந்தச் சொல்லும் உயிர்நிலைச் சொல் ஆகும். அதற்கு எந்நாளும் போற்றுதல் உண்டு.

" கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே.''

திருப்பாற் கடலில் தோன்றிய, அமுதத்தோடு உடன் வந்த நஞ்சை—ஆலகால விஷத்தை—கழுத்தினிலே அடக்கியவன் சிவபெருமான்.

புராண மரபு இங்கே வருகிறது. புராணத்தில் துலங்குகின்ற பூரணத்தை இங்கே பொலியக் காட்டுகிருர். பழைய மரபுகளிலே வலிவான மன உறுதி உடையவர் சம்பந்தர். புராணக் கதையாக இருந்தாலும், அது சுட்டிக் காட்டுவது பூரணமாகிய பரம்பொருளை. எனவே (புராண) நிகழ்ச்சி சம்பந்தர் மனத்திலே பதிந்துள்ளது.

திருப்பாற்கடலில் சாகா வரம் அளிக்கும் அமுதமும், உயிரைப் போக்கும் கொடிய விஷமும் தோன்றின. அதுபோல, பரம்பொருளின் புறத்தோற்ற வடிவமாகிய இவ்வுலகில் இன்பமும் துன்பமும் கலந்தே இருக்கும். விஷத்தைத் தனது கழுத்தினிலே–தொண்டையிலே–அடக்கிக்கொண்டு அடியார்களைக் காத்தருளினன் சிவபெருமான். உலகில் உள்ள தீமைகள் எல்லாம் அடியார்களை வந்து நலிவுறுத்தாத வண்ணம் அவன் பாதுகாப்பான் என்ற குறிப்பும் இங்கே தொனிப் பொருளாக–குறிப்பாக–விளங்குகிறது.

பாட்டுக்களில் வருகின்ற உணர்ச்சியை (1) பேசுவோனிடம் கேட்போனை நோக்கிய உணர்ச்சி (Tone) (2) பேசும் பொருளைப்பற்றிய உணர்ச்சி (Feeling) என இரண்டுவகையாகப் பாகுபாடு செய்து அறிஞர்கள் கூறுகிருர்கள்.

"கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை, மிடறினில் அடக்கிய வேதியனே!" என்று சம்பந்தர் கூறும்போது, பேசுபவர் சம்பந்தர்; கேட்போன் இறைவன். கேட்போனை நோக்கிய உணர்ச்சி (Tone) புலனுகிறதை நாம் அறியலாம்.

"இதுவோஎமை ஆளுமாறு;
ஈவது ஒன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே!"

என்னை அடிமையாளாக ஆக்கிக்கொள்வதற்கு உன் திருவடிகளைத் தவிர வேறு புகலிடம் எனக்கு இல்லை—என்று சம்பந்தர் கூறும்போது, பேசும் பொருளைப் பற்றிய உணர்ச்சி–பரம்பொருளைப் பற்றிய உணர்ச்சி (Feeling) தெரிகிறது.

சம்பந்தர் சிறந்த சிவனடியார். உமையம்மையால் ஞான அமுதம் உண்ணப் பெறும் பேறு பெற்றவர். உலகியல் பொருள்கள் அனைத்தும் அவருக்குச் சிவபரம்பொருளின் தோற்றங்களாகக் காட்சியளிக்கின்றன. உலகம் பரம்பொருளின் வடிவம் என்று தத்துவார்த்த வாதிகள் கூறியதை அனுபவத்தில் கண்டவர் சம்பந்தர். உலகியல் பொருள்களையும் தம் அனுபவங்களையும் ஒன்ருக இணைக்கின்ருர். உயிர் அற்ற, ஜடப்பொருள்களுக்கும் கடவுள் உணர்வு உண்டாகுமாறு செய்கிருர்.

" உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மலர் அடிஅலால் உரையாது என்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமாறு
ஈவதுஒன்று எமக்கு இல்லையேல்

அதுவோ உனது இன்னருள்
ஆவடுதுறை அரனே!''

— திருமாலும் நான்முகனும் காண்பதற்கு அரியவனே! நான் உணவு உண்டாலும், பசியோடு இருந்தாலும், உறங்கினலும் சரி; உனது திருவடிகளையன்றி வேறு எதையும் என்னுடைய நாக்குப் பேசாது என்கிருர் சம்பந்தர்.

உண்ணுதல், உண்ணுதலுக்கு மூலகாரணமாகிய பசித்தல், ஓய்வுகொள்ளலாகிய உறங்குதல் முதலியவை பொறிகளின் வேலைகள். பொறிகள் ஆன்மாவினலே செயற்படுகின்றன. ஆன்மா இல்லாது போனல், பொறிகள் செயற்படமாட்டா. உண்மை தானே! உயிர் இல்லாது போனல் எந்தப் பொறி இயங்கும்? அதுபோல, முதல்வனகிய இறைவனுடைய பற்றுக்கோடு இல்லாமல், உயிர்களால் எந்தப் பொருளையும் பற்றி அறிந்துகொள்ளமுடியாது. ''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'' என்பார் மணிவாசகர். அவன் திருவடிகளை உணரவும் அவன் அருள்வேண்டும். இறைவனலே உயிர், பொருளைப்பற்றி அறிந்து கொள்கிறது. அந்த உயிரினலே பொறிகள் இயங்கி உலகப்பொருள்களை அனுபவிக்கின்றன.

உயிர் வாழ்வதற்கு உணவு உண்ணுதல் தேவை. உணவை உண்பதற்கு அடிப்படையாக அமைவது பசி. ஓய்வு எடுத்துக்கொள்வதற்கு உறக்கம் வேண்டும். இம்மூன்று அவசியத் தேவைகளை நான் நிறைவேற்றும்போதும் சரி, நின் மலர்ப் பாதங்களையே எனது நாக்குப் புகழ்ந்து பேசும் என்கிருர் சம்பந்தர்.

உணவு உண்பதற்கும், சுவையறியும் நாவுக்கும் தொடர்பு உண்டு. பசித்துப் பிறகு புசித்தல் உண்டு. பசித்தலுக்கும் புசித்தலுக்கும் நாவுக்கும் தொடர்பு உண்டு. ஆனல் சுவையறிந்து உண்பதற்கு மட்டுமே நாவு அமையவில்லை. அப்படிச் சுவையறிந்து உண்பதற்கு மட்டுமே நாக்கு அமைந்திருக்குமானல், விலங்குகளுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு! ஒருவேறுபாடும் இல்லை. உணவு உண்பதற்காக நாம் உயிர் வாழவில்லையே!

உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத செயல்களை நான் மேற்கொள்ளும்போதும் உன் பெருமைகளையே எனது நாக்குப் பேசும். உண்ணுகின்றபொழுது, உணவுக்குத் தொடர்பான பிறவற்றைச் சிந்தனை செய்து பேசமாட்டேன். ''பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'' என்பார்கள். ஆனல் எதை மறந்தாலும் உன்னுடைய திருநாமத்தைச் சொல்ல என் நாக்கு மறக்காது. உறங்குகின்றபொழுது புறக் கருவிகள் அனைத்தும் ஓய்வு எடுத்துக்கொள்ளும். புறத்தே என்ன நிகழ்கிறது என்பதை அறியக் கூடிய உணர்வைப் புறக்கருவிகள் உறக்க நிலையில் இழந்து விடுகின்றன. அவ்வாறு உறக்கநிலையில் இருந்தாலும், நனவு அற்றநிலையில் இருந்தாலும், என் நாக்கு உன் பெருமைகளையேபேசும் என்கிருர் சம்பந்தர்.

இறைவனல்தான் மானிட உடம்பு வாய்க்கப்பெற்றது என்ற நம்பிக்கை உடையவர் வள்ளுவர். இறைவன் தந்த பொறிகளும் புலன்களும் அவனேடு தொடர்பு உடையனவாகவே விளங்கவேண்டும் எனக் கருதுபவர். ஆகவே, ''கோளில் பொறியில் குணம் இலவே எண் குணத்தான், தாளை வணங்காத் தலை'' என்கிருர் வள்ளுவர். நாம் சிந்திக்க வேண்டாமா? இறைவனை வணங்காமல் வீண் காலம் போக்கலாமா?

''ஐவர் கொண்டு இங்கு ஆட்ட ஆடி, ஆழ் குழிப்பட்டு அழுந்துவேனுக்கு உய்யுமாறு ஒன்று அருளிச் செய்யீர்'' என்ற சுந்தரர் வாக்கும் இங்குக் கருதத்தக்கது.

உடம்பைப் படைத்து நமக்குத் தந்தவன் இறைவன். அவ்வுடம்பில் பொறிகளையும், புலன்களையும் உணருமாறு வைத்தவன் இறைவன். அவ் ஐம்புலன்களும் நம்மை ஆட்டிப் படைக்குமாறு செய்வித்தவனும் இறைவன். எனவேதான் சுந்தரர், ஐவர் ஆட்டத்தின் பிடியில் இருந்து என்னை மீட்கவேண்டும் என இறைஞ்சுகிருர்.

மனத்திலே பாடல்கள் எழுவதற்குத் தக்க சூழ்நிலையும் உண்டு. சரியான சூழ்நிலையிலே, சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு பாடல்கள் பிறக்கும். அப்படித் தோன்றிய பாடல்களில், அப்பாடல் தோன்றியதன் சூழ்நிலையை உணர்ந்து கொள்ளலாம்.

உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத கடமையினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்திலும் இறைவனை மறத்தல் கூடாது என்ற உணர்வை

வலியுறுத்தும் சூழ்நிலையை விளக்கும் இங்குச் சம்பந்தப் பெருமான் பாடியபாடல்.

''திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர் அருளிச் செய்த திருமுறை மூன்றனுள்ளும், நாவினுக்கு அருங்கலமாகிய நமச்சிவாயத்தில் அரும் பேருண்மைகளைத் தெளிவாகச் சொல்லும் இடங்கள் பல உள்ளன. அவற்றுள், இரண்டு திருப்பதிகங்கள் திருவைந்தெழுத்தின் கீர்த்தியை விளக்குதற்கே அருளப்பெற்றிருக்கின்றன. அவை, 'பஞ்சாக்கரத் திருப்பதிகம், 'நமச்சிவாயத் திருப்பதிகம்' என்று குறிக்கப் பெறுவன. அவ் இரண்டனுள் முன்னது, 'துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும் நெஞ்சகம் நயந்து நினைமின் நாள்தொறும்......அஞ்செழுத்துமே' என்னும் முதல் திருப்பாடலைக் கொண்டது. ஐந்தெழுத்து என்று மட்டும் உணர்த்திற்று. அதனல், 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்' என்னும் பெயர் எய்தலாயிற்று. பின்னது, திருவைந்தெழுத்து வகையுள், தூல பஞ்சாக்கரமாகிய நமச்சிவாயத்தை வெளிப்படையாகக் கூறியதால், 'நமச்சிவாயத் திருப்பதிகம் என்னும் குறி கொள்ளலாயிற்று. அவற்றின் பொருள்களைத் தொகுத்து உணர்த்து முன்னர், சில உண்மைகளைக் குறிக்க விழைகிறேன். ''நக்கர்தம் நாமம் நமச்சிவாய வென்பார் நல்லரே'' என்பதால் தூல பஞ்சாக்கரம் உணர்த்தப் பெற்றதை அறிக. ''நண்பால் சிவாய என நாலூர் மயானத்தே, இன்பாயிருந்தனை ஏத்துவார்க்கு இன்பமே'' என்பதில் முத்திபஞ்சாக்கரம் உணர்த்தப் பெற்றுள்ளது. இவ்வாறு தொண்டைமண்டல ஆதீன சுவாமிகள் கூறுகிறார்கள்.

திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய திருப்பதிகங்களுள் பஞ்சாக்கரத் திருப்பதிகம் ஒன்று. மறைகளிலேவல்ல ஞானசம்பந்தப் பெருமான் திருமுன்பு அந்தணர்கள் அனைவரும் நான்கு வேதங்களைக் கொண்டு வந்து வைத்தனர். அவ்வந்தணர்களுக்குச் சம்பந்தப் பெருமான் அவ்வேதங்களை உணர்த்தினர். வேதப்பொருளை உணர்ந்து வியந்த அந்தணர்கள், சம்பந்தரே வேதப்பொருளாக அமைந்து, தங்கள் முன்னிலையில் நிற்பதாக உணர்ந்தனர்; வணங்கினர். ஏற்கனவே தாங்கள் கற்ற வேதப்பொருள்களில் உள்ள ஐயங்களையும் தீர்த்துக்கொண்டனர். மந்திரங்களையும அவர்களுக்குக்கற்றுக்கொடுத்தார் சம்பந்தர். எல்லா மந்திரங்களுக்கும் மூலமந்திரம், முதல்வனுகிய சிவபெருமானின் திருவைந்தெழுத்தே என்பதையும் உணர்த்தினர். அச்சமயத்தில் பாடப் பட்டதுதான் பஞ்சாக்கரத் திருப்பதிகம்.

''துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே.''

மனத்திலே சிறிதும் வஞ்சகம் இல்லாமல், சிவபெருமானை வாழ்த்தி வணங்கினன் மார்க்கண்டேயன். எனவே அவனுக்கு வந்த கூற்றுவனை அஞ்சமாறு காலால் உதைத்தவை பஞ்சாட்சரமாகிய திருவைந்தெழுத்து. எனவே தூங்கும்போதும், விழித்துக்கொண்டிருக்கும் போதும், ஒவ்வொருநாளும் நெஞ்சிலே பஞ்சாட்சரத்தை வைத்துப் போற்றுங்கள் என்கிறார் சம்பந்தர்.

பெற்றோர்களின் வருத்தத்தைப் போக்குவதற்கும், தன் ஆயுளை நீட்டிப்பதற்கும், குறித்த காலத்தில் எமவாதனை இல்லாமல் நீங்குவதற்குமாகத் தவம் செய்தவன் மார்க்கண்டேயன். பரம்பொருளையே எண்ணி, இரவு பகல் இரண்டு காலத்திலும், காமம் வெகுளி மயக்கம என்ற மூன்று குற்றங்களையும் நீக்கி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்களையும் அடக்கி, ஐந்து அக்னி நடுவில் நின்று ஆறு எழுத்தையும் உச்சரித்து, ஏழு பிறவிக் கடலையும் கடக்க, இயமம் நியமம், பிராணயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டு உறுப்புகளை உடைய சிவ யோகத்தினல், ஒன்பது பெரும் புவனமும் தொழ தசகாரியத் தாபதராய் வீற்றிருக்கும் சிவபரம்பொருளை எண்ணித் தவமிருந்தான். குறிப்பிட்ட காலத்தில் பதினறு வயது நிறையும் காலம், மார்க்கண்டேயனுக்கு ஆயுள் முடிவடையும் காலம் எமனும் வந்துவிட்டான். எல்லாம் வல்ல எம்பெருமான், அடியார்க்கு எளியனுய் இரங்கி வந்து எமனை வதைத்து, மார்க்கண்டேயனுக்கு நல்வாழ்வு கொடுத்தருளினன்.

வேறு சிந்தனை இல்லாமல், நெஞ்சிலே இறைவனைப் போற்றினல் எமபயம் நீங்கும்.

ஓதுவது ஒழியேல்

(சுவாமி துருவானந்தர்)

அமராவதி நகர் அழகுக்குப் பேர்போன இடம். அந்நகரைச் சுற்றி ஏராளமான கிராமங்கள் இருந்தன. கிராமங்களில் உற்பத்தியாகிற பொருள்களனைத்தும் நகரில் குவிந்து அந்நகர் பெரிய வியாபார ஸ்தலம் ஆயிற்று. மக்களிடத்தில் பணப் புழக்கம் அதிகமாயிற்று. நாள் செல்லச் செல்ல கிராமங்களில் வாழ்ந்த விவசாய குடும்பங்கள் நகரில் குடியேறலாயின. உழைத்து உண்ணவேண்டும் என்ற எண்ணம் மக்களிடத்தில் குறையலாயிற்று. சோம்பல் பெருகியது. சுகஜீவனத்தை நாடி ஓடினர். பணம் வைத்திருந்தவர்கள் மதுக்கடைகளில் காலம் கழித்தனர். திரையரங்கம் இத்தகைய கூட்டங்களுக்குப் புகலிடமாயிருந்துவந்தது.

அவ்வூரிலே கல்லூரி ஒன்று நடந்து வந்தது. அக்கம்பக்கத்து மாணவர்களனைவரும் ஆங்கு கல்வி பயின்று வந்தனர். அவ்வூரைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் ஆங்கு கல்வி கற்று வந்தனர். வெவ்வேறுவித சூழ்நிலையிலிருந்து வந்து அவர்கள் கல்வி கற்றுச் சென்றாலும் நால்வரும் மனப்பான்மையில் ஒத்திருந்தனர்.

நண்பர்கள் நால்வரும் குலத்தாலும், மதத்தாலும், செய்யும் தொழிலாலும் வேறுபட்டவர்கள். அந்த வேற்றுமைகளை அவர்கள் மறந்து நட்பு என்னும் பிணைப்பில் கட்டுண்டு இணைபிரியாது அக்கல்லூரியில் கற்றுவந்தனர். மாலை நேரத்தில் கல்லூரியிலிருந்து வெளியேகி பல்வேறு விஷயங்களைப் பேசிக்கொண்டு உலாவி வருதல் அவர்களுடைய அன்றாட நடைமுறை. கல்லூரியைவிட்டுப் புறப்பட்டால் ஒரு கல் தொலைவுள்ள தோப்பூர் ஆலமரம் வரை சென்றுவிட்டுத் திரும்பினால்தான் அவர்களுக்குத் திருப்தியளிக்கும். வழக்கம்போன்று நான்கு நண்பர்களும் அன்றைய வகுப்பில் நடந்த பாடத்தை விமர்சனம் செய்தவாறு சென்றுகொண்டிருந்தனர். ஆலமரம் வந்ததும் அவர்களின் கவனம் ஆங்கு கூடியிருந்த கூட்டத்தை நாடியது. எப்பொழுதும் இல்லாது இப்போதுமட்டும் இங்கு கூட்டம்கூடி அமைதியோடு பெரியார் ஒருவர் பேசுவதைக் கேட்கக் காரணம் என்ன? யார் அவர்? என்ன பேசுகிறார்? இத்தகைய கேள்விகள் அவர்கள் மத்தியில் எழுந்தன. அந்த ஆலமரம் இதுநாள் வரை சீட்டுவிளையாடுபவர்களுக்கும், அரசியல் பேசுபவர்களுக்கும், வீண் வம்பு பேச்சைக் கிளப்புபவர்களுக்கும் அடைக்கலமாக இருந்து வந்தது. அந்த மரத்தடிக்குச் செல்லுவதே ஒரு கெட்டசகுனமாக நல்லவர் பலர் கருதினர்கள். அதன் அருகே நெருங்கவும் நாணுவார்கள். ஆனால் இன்றோ தக்ஷிணாமூர்த்தி மௌன உபதேசம் அளித்தது போன்று பெரியார் ஒருவரின் முன்னிலையில் அவ்வூர் பிரமுகர்கள் சிலர் அமைதியே வடிவெடுத்து ஆழ்ந்து கேட்டுக்கொண்டிருப்பது இளைஞர்கள் நால்வருக்கும் வியப்பளித்ததில் ஆச்சரியமில்லை. நால்வரில் ஒருவன் மொழிந்தான். "இங்கு எது எத்தகைய வடிவம் எடுத்து நடந்தாலும் அரசியலைத் தவிர வேறு எதுவும் இருக்காது" என்றான். மற்றவன் பகர்ந்ததாவது: "இல்லை. அரசியல் பேச்சாக இருந்தால் சண்டை சச்சரவும், அடிதடியாகவும் இருக்கும். அதற்கு நேர்மாறாக இந்நிகழ்ச்சி தென்படுகிறது. பேசுபவரின் முகவிலாசத்தில் அமைதியும் ஆனந்தமும் திகழ்கின்றன. கேட்பவர்களும் இவ்வுலகை மறந்தவர்களைப் போன்று இருந்து கேட்கின்றனர். நிச்சயமாக ஆத்மீக விஷயமாகத்தான் இருக்கவேண்டும்." நால்வரும் அங்குச் சென்று அதைத் தெரிந்து வரலாமென அதை நோக்கிச் சென்றனர்.

"மூன்று நாட்களாக அருள்விருந்தை அள்ளி அள்ளித் தருகிறார் இந்தப் பெரியவர். எங்கிருந்து வந்தவர்? யார் என்ற குறிப்பெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நமது வாழ்வு வளம் பெறுவதற்கு வழிகாட்டுகிறார். அவர் சொற்படி நடப்பது நமது கடமை. நீங்களும் கொஞ்சம் கேட்டுச்செல்லுங்களேன்' என்றார் அப்பொழுதுதான் அக்கூட்டத்தைவிட்டு எழுந்து வீட்டுக்குப் போக எண்ணிய ஒரு பெரியவர். நவீனக் கல்வி கற்ற இளைஞர்களாதலால் கூட்டத்தோடு தரையில் உட்கார மனம் இடம் தரவில்லை; ஓரமாக நின்று கேட்டு வந்தனர். தேன் ஈ மலரிலிருந்து மதுவை எடுத்து அடை

யில் சேர்ப்பது போன்று பெரியவர் பல்வேறு சாஸ்திரங்களிலிருந்தும், அனுபவப் பாதையில் அறிந்துணர்ந்த அரிய பெரிய விஷயங்களை எளிய மொழியில் அவர்கள் மனதில் படியும்படி சொல்லி வந்தார். ஔவை மூதாட்டியின் ஆத்திசூடிக்கு அன்றைய நாள் விளக்கம் தந்தார். 'ஓதுவது ஒழியேல்' என்னும் நீதியை அழகுற விளக்கி வந்தார். மகுடிகேட்ட நாகம் போன்று அவருடைய மொழியமுதத்தில் தங்களை லயப்படுத்தினர் இளைஞர்கள். கூட்டம் முடிந்தவுடன் அவ்வூர் அன்பர் ஒருவரின் ஏற்பாட்டின்படி அந்தச் சான்றோருக்கு விருந்து படைக்க ஆயத்தமாயிற்று. அந்த இடை நேரத்தில் இளைஞர்கள் நால்வரும் தங்களுடைய ஐயங்களைத் தெரிவித்தனர். முற்போக்கு எண்ணமும், தங்களுடைய கிராமங்களை வளப்படுத்தி மக்கள் சுபிட்சமடையச் செய்யவேண்டும் என்ற பொதுநலக் கருத்தும் அவர்கள்பால் மிளிர்ந்தன. ஆகவே அவர்கள் அந்தப் பெரியவரை அடுத்து தங்கள் கிராமத்தின் அவல நிலையை எடுத்துக்கூறி அதிலிருந்து மீளுவதற்குண்டான வழிகளைக் கேட்டனர்.

சான்றோர் பகர்ந்ததாவது : "உங்களுடைய சொந்த கிராமங்களை வளர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்ற ஆவலை நான் வரவேற்கிறேன். தனி மரம் தோப்பாகாது. மக்களின் உழைப்பின்றி எதுவும் இயலாது. சோம்பலுற்று, உழைப்பின்றி கெட்டு வருகிற மக்களை ஒன்று சேர்த்து கிராம வளர்ச்சிக்குப் பாடுபடச் செய்யுங்கள். வீரமுள்ள தன்னலமற்ற இளைஞர்களால்தான் இந்தக் காரியத்தைச் சாதிக்க இயலும். நாட்டின் முதுகெலும்பாயிருப்பவர்கள் இளைஞர்களே. அவர்கள் இத்தகைய பணியில் ஈடுபட்டால் உங்கள் கிராமம் மட்டுமல்ல நமது நாடே புதிய விழிப்புணர்ச்சி பெற்றுத் திகழும். ஆகவே தன்னம்பிக்கையோடு செயலில் இறங்குங்கள். அரசியல் வாதிகளைப் போலல்லாது சுயநலமின்றி, முதலில் உங்களைத் தூய்மைப்படுத்திக் கொண்டு இத்தகைய சமுதாயப் பணியில் இறங்கினல் உங்கள் வழிகளைப் பின்பற்றிப் பலபேர் பணியாற்ற முன்வருவார்கள். விரைவில் சுபிட்சத்தை எதிர்பார்க்கலாம். முயற்சியும் உழைப்பும் இருக்கிற இடத்தில் தான் இலட்சுமிதேவி வாசம் செய்வாள்." இவ்வாறு பேசி அவர்கள் உள்ளத்தில் கிராம சேவையைப் புகுத்தி ஆசி வழங்கி அனுப்பி வைத்தார்.

நான்கு இளைஞர்களும் நன்கு சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தனர். ராம், ரஹீம், பீட்டர், ஆனந்தன் என்ற நாமம் அவர்கள் படைத்திருந்தனர். ராம் கல்லூரி மாணவர்களுக்குத் தலைவனாக இருந்து மாணவர் கழகத்தை நிர்வகித்து வந்தான். ஆகவே தன்னுடைய விருப்பம்போல் கல்லூரி மாணவர்களை இந்த உயர்ந்த கிராம சேவையில் ஈடுபடச் செய்யவேண்டும் என்ற அவாக்கொண்டான். பிறரைத் திருத்தப் புகுமுன் தங்களைத் திருத்தியமைக்க வேண்டும் என்ற கோட்பாட்டின்படி அவரவர் வீடு சென்றனர். ராமுடைய தந்தையார் ஒரு மிராசுதார். நிலபுலன் ஏராளமாக உடையவர். அவரை ஓரளவு மாற்றியமைத்தால் பலர் அவர் மூலம் திருந்தியமைவார்கள் என்று எண்ணிய ராம் தந்தையை வேண்டினன். தந்தையே, நாட்டில் வறுமை தாண்டவமாடுகிறது. உண்ண உணவில்லாது மக்கள் சாகிறார்கள். ஆனல் நாமோ வீடு நிறைய உணவு தானியங்களைப் பதுக்கி வைத்திருக்கின்றோம். மக்கள் நம்மீதுவெகுண்டு அனைத்தையும் சூறையாட நினைத்தால் இவைகள் மிஞ்சுமா? இப்பொழுது நாம் அனுபவித்து வருபவைகள் நம் பாட்டனர் சம்பாதித்து வைத்தவையாகும். அவற்றை உழைக்காது அனுபவித்து வருகிறோம். உழைக்காது உண்பவன் திருடன் என்கிறார் காந்தியடிகள். அதனல்தான் தொழிலாளி முதலாளி வேற்றுமைகள் ஏற்படுகின்றன. மக்களின் துயர் தீரவேண்டுமானல் ஊருக்கு அப்பால் ஓடுகிற நதி நீரை எப்பாடு பட்டாகிலும் கொண்டு வரமுயற்சி செய்வோம். நீர்வளம், நிலவளம் அனைத்தும் இருந்தும் உழைக்க விரும்பாத சோம்பேறிகளால்தான் உணவு உற்பத்தி இல்லை. அதன் விளைவாக எல்லாரும்வறுமையில் வாடவேண்டி உள்ளது என்றான். மகனின் உணர்ச்சி வசப்பட்ட வேண்டுதலுக்குத் தந்தை இசைந்தார். ராம் விரும்பியதுபோல பதுக்கிவைத்திருந்த தானியங்களை வெளியில் கொண்டுவந்து உணவில்லாதவர்களுக்கு வழங்கினர். நதி நீரை கிராமங்களுக்குக் கொண்டுவர எடுக்கும் முயற்சியில் தந்தையும் மகனும் தீவிரமாக இருந்தனர்.

ரஹீம் உடைய தந்தையார் ஒரு சுகாதார அதிகாரி. அவர் தனது கடமையை முறையாகச் செய்யாது வேறு வழியில் கைக் கூலியும் பெற்றுவந்தார். ரஹீம் இவற்றையெல்லாம் நன்கு அறிந்திருந்தான். தந்தை திருந்தினுல் பலர் தாங்களாகத் திருந்துவார்கள் என்று எண்ணினுன். தங்களைச் சுற்றியுள்ள கிராமங்களின் பரிதாப நிலையை எடுத்துரைத்தான். திருட்டுத்தனமாக சாராயம் காய்ச்சுபவர்களை ஒழித்து ஏழை எளியவர்களுக்கு நல்ல விதமான வீடுகட்டித்தரவேண்டினுன். இவற்றையெல்லாம் அவர் செய்தால் மக்கள் கவலையின்றி வாழுவார்கள். இங்ஙனம் பண்ணுது போனுல் தந்தை பண்ணிய ஊழலை அரசாங்கத்துக்குத் தெரிவித்து சிறைக்கு அனுப்பிவிடுவேன் என்றும் எச்சரித்தான். உண்மையை உணர்ந்த அவரும் மகனின் விருப்பத்தை நிறைவேற்ற உறுதி எடுத்தார். பீட்டருடைய தந்தை தாமஸ். அவ்வூர் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர். அவர் தமது பதவியை துஷ்பிரயோகம் செய்தார் என்று, அவரைப்பற்றி ஏராளமான புகார்கள் மேலிடத்திற்குச் சென்றிருப்பதைப் பீட்டர் அறிந்திருந்தான். தந்தையிடத்தில் இவைபற்றிப் பேசி ஆசிரியர் தர்மத்தையும் புகட்டி, இனி அவை போன்ற இழிவான செயல்களைச் செய்யாது கிராம வளர்ச்சியில் ஈடுபட வேண்டினுன். அறிவு நிரம்பப் பெற்ற அவரும் மகனின் வேண்டுகோளை ஏற்ருர். ஆனந்தனின் தந்தை ஒரு சுதந்திர வீரர்; சிறைசென்று வந்த தியாகி. அண்மையில் அவருடைய சேவையைப் புகழ்ந்து அரசு ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்தது. எளிய வாழ்க்கை, தொண்டுள்ளம் படைத்த கர்மவீரர். ஆனந்தனின் உணர்ச்சிகரமான பேச்சு அவரின் உள்ளத்தை நெகிழவைத்தது. நால்வரும் நாள்தோறும் தேவாரம், திருவாசகம், பகவத்கீதை, திருக்குறள் ஆகிய நூல்களைத் தவருது ஓதிவந்தனர். ஓதியதோடு அவற்றில் கூறப்பட்ட கருத்துக்களைச் செயல்முறைக்குக் கொண்டு வருவதில் தீவிரமாக இருந்தனர் வீடுதோறும் காந்தியத்தைப் புகட்டுவது, நதி நீரைக் கிராமத்திற்குக் கொண்டுவர மக்களைத் தூண்டுவது, மருத்துவ உதவி புரிவது முதலியன செய்ய ஊக்கம் கொண்டனர். நம் நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் சமய உணர்ச்சி தந்தால் நாட்டின் சீர்கேடுகள் அகன்று போகும் என்பதை அந்நான்கு இளைஞர்களும் அறிந்தனர். சமய உணர்ச்சிக்குக் கட்டுப்பாடான வாழ்வும், சீரிய எண்ணமும் அவசியம் என்பதை அவர்கள் அறிந்து அவ்விரண்டையும் கிராம மக்களுக்கிடையில் புகுத்த முயன்றனர். அதிகாலையில் எழுந்து இறைவன் புகழ் பாடி வீதி தோறும் மக்கள் பஜனைபாடிக் கொண்டு வர ஏற்பாடு செய்தனர். இரவில் இராமாயணம், மகாபாரதம் போன்ற நல்ல நூல்கள் ஒருவர் வாசிக்க மற்றவர்கள் அதைக் கேட்க ஏற்பாடு செய்தனர். இங்ஙனம் உயர்ந்த நூல்கள் ஓதுவதை முக்கிய பயிற்சியாக கொள்ளும்படி அக்கிராம மக்களுக்குப் புகட்டப்பட்டது. 'ஓதுவது ஒழியேல்' என்ற கோட்பாட்டை அக்கிராம மக்கள் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர அந்நால்வரும் சிறந்த ஏற்பாடு செய்தனர்.

நான்கு நண்பர்களும் அவ்வப்போது சந்தித்து தங்களது திட்டங்களின் வளர்ச்சியைத் தெரிந்து கொண்டனர். கல்லூரி மாணவர் கழக ஆண்டு விழாவும் வந்தது. மாணவர்களிடம் தன்னுடைய திட்டங்களை ராம் எடுத்துக் கூறி அதனுல் விளையும் நலன்களையும் சுட்டிக்காட்டினுன். மாணவர்கள் அவன் செய்ய விரும்பும் எல்லாச் சேவைகளிலும் முழுமனதுடன் ஒத்துழைக்க உறுதி எடுத்தனர். அந்த ஆண்டிலேயே கிராமங்கள் தோறும் பெரிய நூல் நிலையங்கள் தோன்றின. இளையவர் முதியவர் அனைவருக்கும் கல்வி நன்கு புகட்டப்பட்டது. மதுக்கடைகள் அழிக்கப்பட்டன. ஏழைகளுக்கு மறுவாழ்வாகப் புதியவீடுகள் கட்டித்தரப்பட்டன. ஆற்று நீர் கிராமங்கள் தோறும் பாய ஆரம்பித்தது. உழைப்பின் விளைவாக உற்பத்தி பெருகியது; வறுமை மறைந்தது. உழைப்பின் பெருமையை உணர்ந்த மக்கள் இம்முயற்சியில் ஈடுபட்ட நண்பர்களை மனதாரப் புகழ்ந்தார்கள். ஆனுல் அந்நால்வரும் அவர்களை ஊக்குவித்து பல நூல்களைக் கற்ருலும் சரி, பிறர் சொல்லக் கேட்டாலும் சரி, அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவதுதான் சரியான கல்வி என்றனர்.

குறிப்புகள்

வைகறைத் துயிலெழுதல்

இயற்கையின் போக்கை ஆராய்ந்தால் நம் வாழ்வுக்கு வேண்டிய பாடம் கிடைக்கிறது. இயற்கையில் நிகழ்ந்து கொண்டிருப்பதை நம்மில் பலர் எண்ணிப் பார்ப்பதில்லை. பறவைகள் இரவு வந்ததும் தங்குமிடத்திற்குச் சென்று அமைதி அடைகின்றன. அதிகாலையில் அவைகள் எழுந்து சுறுசுறுப்பாக அவைகளுக்குரிய கடமைகளில் ஈடுபடுகின்றன. மாலையிலும் அதிகாலையிலும் அவைகள் இறை வழிபாடு செய்து வருகின்றன என்று ஸ்ரீ இராமகிருஷ்ணர் பகர்ந்துள்ளார். பறவைகளின் வாழ்க்கையிலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். இரவில் விரைவில் படுக்கைக்குச் சென்று அதிகாலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும் என்ற பாடத்தைப் பறவைகளினுடைய வாழ்க்கையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதிகாலையில் மூன்று மணியிலிருந்து நான்கு மணிக்குள் எழுந்திருப்பது உத்தமம். நான்கு மணியிலிருந்து சூரிய உதயத்திற்கு முன்பு எழுந்திருப்பது மத்திமம். சூரிய உதயத்திற்குப் பின் எழுந்திருப்பது அதமம். இன்றைக்கு நம்மில் பெரும்பாலோர் சூரிய உதயத்திற்குப் பின் எழுந்திருக்கிற பயிற்சியை மேற்கொண்டுள்ளார்கள். எனவே மக்களுடைய வாழ்வு மட்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. வாழ்வில் மலர்ச்சி வேண்டுமென்றால் அதிகாலையில் எழுந்திருக்கும் பழக்கத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அதிகாலையில் எழுந்திருந்து கடவுள் வழிபாட்டிலும், உயர்ந்த நூல்களை ஓதுவதிலும், கூட்டுப் பிரார்த்தனையிலும், இறைவன் நாமத்தை ஜபிப்பதிலும், தியானத்திலும், சமூக சேவையிலும் சுறுசுறுப்பாக ஈடுபடுபவர்களுக்குச் சத்துவகுணம் வளர்ச்சி அடைகிறது. சத்துவ குணத்தை வளர்ப்பவர்கள் சான்றோர்களாகிறார்கள். சான்றோர்களை உருவாக்குவது நாட்டில் நல்ல நிலையை உருவாக்குவதற்கு உபாயமாகும். மக்களின் வாழ்வு வளம்பெற, புதுமைபெற, சீர்மைபெற, அமைதிபெற, ஆனந்தம்பெற வைகறைத் துயிலெழுதல் என்னும் பழக்கத்தை மக்கள் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வருவார்களாக. மார்கழி மாதத்தில் வைகறை துயிலெழுதல் என்னும் பழக்கம் மக்களில் சிலரிடையே புகுந்துள்ளது. அப்பழக்கம் அவர்களிடத்தில் தொடர்ந்து உறுதிபெற்று அவர்களிடமிருந்து மற்றவர்களுக்கும் பரவி வைகறைத் துயிலெழும் மக்கள் கூட்டம் பெருகி மக்கள் சத்துவகுணத்தில் ஓங்கி இருப்பார்களாக.

செய்திகள்

நிகழ்பவை:

பொங்கல் விடுமுறைக்குப்பின் ஸ்ரீ விவேகானந்த வித்யாவன உயர்நிலைப்பள்ளி 24—1—77 திங்கட்கிழமை யன்று திறக்கப்படும். ஜனவரி மாதம் 23ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்குள் 8, 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களும், 24ஆம் தேதி காலை 9 மணிக்குள் 4, 5, 6, 7ஆம் வகுப்பு மாணவர்களும் குருகுலத்திற்குத் திரும்பி வந்துசேர வேண்டும்.

கன்னியாகுமரிக்குப் பக்கத்தில் இருக்கும் இடிந்தகரை கிராமத்திலுள்ள சமார் 600 பேர் கிறிஸ்துவ மதத்தினின்று பழையபடி இந்து மதத்துக்குச் சமார் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு திரும்பி வந்துள்ளனர். அவர்களுக்காகத் திருச்செந்தூர் தேவஸ்தானம் கணபதிகோயில் கட்டிக் கொடுத்துள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளாக விஸ்வஹிந்து பரிஷத் சார்பில் நம் அன்பர்கள் ஆண்டுக்கு ஒரு முறை விழா எடுத்து இம் மக்களுக்கு அன்னதானம் வழங்குகின்றனர். அவ்விழா இவ்வாண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும். வழக்கம்போல் அதில் **ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்** கலந்து கொள்வார்கள்.

பிப்ரவரி மாதம் 27ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் ஜயந்திவிழா தபோவனத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படும். மார்ச் 1, 2, 3 தேதிகளில் மூன்றுநாள் அந்தர்யோகம் தபோவனத்தில் நிகழும்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்-மூன்றும் பதிப்பு பிரசார விலை	ரூ. 14-00
ஸ்ரீமத் பகவத்கீதை-பதினொன்றும் பதிப்பு பிரசார விலை	... 12-00
ஞானயோக விளக்கம்	... 8-00
ராஜயோக விளக்கம்	... 8-00
கர்மயோக விளக்கம்	... 7-00
பக்தியோக விளக்கம்	... 6-00
பரமஹம்ஸரின் பெருமை	... 4-50
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	... 4-00
விவேகானந்த உபநிஷதம்	... 4-00
கடவுளின் வடிவங்கள்	... 4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	... 3-50
சந்தேகம் தெளிதல் பாகம்-II	... 3-50
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்சரி ஆறும் பதிப்பு பிரசார விலை	... 2-75
தினசரி தியானம்-பதிமூன்றும் பதிப்பு (பிளாஸ்டிக் உறையுடன்) பிரசாரவிலை	... 2-75
ஸ்ரீ ராமகிருஷ்ணர் சரிதம்	... 2-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	... 2-00
ஸ்ரீ சாரதா தேவியாரது சரிதம்	... 2-00
கண்ணன் என்னும் கடவுள்	... 2-00
தாயுமானவர் இயற்றிய	
சின்மயானந்த குரு (விரிவுரை)	... 2-00
கருணாகரக்கடவுள் ஷ	... 2-00
மௌனகுரு வணக்கம் ஷ	... 1-50
பரசிவ வணக்கம் ஷ	... 0-50
சந்நியாசி	... 1-25
பஜனைப் பாடல்கள்	... 1-25
குழந்தைகளின் களிக்கூடம்	... 1-00
இராவணத் தத்துவம்	... 1-00
சகோதரி நிவேதிதை	... 1-00
ஹரிச்சந்திரன் (நாடகம்)	... 1-00
காயத்ரி	... 1-00
வாலிமோக்ஷம் (நாடகம்)	... 1-00
அறம் வளர்த்த நம்பி	... 0-95
நோய்க்கு இடம் கொடேல்	... 0-80
நன்மக்களைப் பெறுதல்	... 0-80
தானவீரன் கர்ணன் (நாடகம்)	... 0-80
பாண்டவ கௌரவ பெருமை (நாடகம்)	... 0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்)	... 0-75
இறை வணக்கம்	... 0-75
*ஆத்ம சக்தி	ரூ. 0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	... 0-75
*மனிதனது நிஜசொரூபம்	... 0-70
*சக்தி தத்துவம்	... 0-70
*சிவ தத்துவம்	... 0-70
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம் (நாடகம்)	... 0-65
பிரஹ்லாதன் (நாடகம்)	... 0-65
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	... 0-60
இந்து மதமும் கிறிஸ்துவ மதமும்	... 0-60
*ஆலய வழிபாடு	... 0-60
ஸ்ரீ ராமகிருஷ்ணாஷ்டோத்தர சத நாமாவளி:	... 0-50
சைவன் யார்?	... 0-50
*சூரிய நாராயணன்	... 0-50
*முருகக் கடவுள்	... 0-50
*விஷ்ணு தத்துவம்	... 0-50
மார்க்கண்டேயன் (நாடகம்)	... 0-40
தபோபலன் (நாடகம்)	... 0-40
*கணபதி	... 0-40
வர்ணாச்ரம தர்மம்	... 0-30
அருள் விருந்து 1 முதல் 13 வரை ஒவ்வொன்றும்	... 0-30
பரசுராமர் கர்வ பங்கம் (நாடகம்)	... 0-15
The Bhagavad Gita (8th Imp.)	... 15-00
The Indian National Education	... 8-00
Sri Lalithambika Sahasranama Stotram	...8-00
Ramakrishna Lives Vedanta	... 5-00
Facets of Brahman or The Hindu Gods	... 5-00
Daily Divine Digest (with plastic-cover)	... 4-50
Mahabharata (with plastic cover)	... 4-50
Ramayana (do)	... 4-00
The Man Making Message of Vivekananda (with plastic cover)	... 3-00
The Bhagavad Gita (Small Size) (With plastic cover)	... 3-00
Sri Vishnu Sahasranama Stotram	... 2-50
Holy Bible—In the Light of Vedanta	... 1-50
*Introducing the Gita	... 1-50
*Key to Higher Life	... 0-75
*The Teacher	... 0-60
*The Student	... 0-45

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபாற் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 3-00ம் மஞ்சரிக்கு ரூ. 2-40ம் தினசரி தியானத்திற்கு ரூ. 2-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் 3-50 வரை சேர்த்து அனுப்புங்கள்.

*இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பராய்த்துறை-639 115, திருச்சி Dt.

Edited by SWAMI NITHYANANDA,

Printed&Published by Swami Yogananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.